செவ்வியல் இலக்கியச் செழுமை

பேராசிரியர் இரா.மோகன்

வானதி பதிப்பகம்

செவ்வியல் இலக்கியச் செழுமை

இரா. மோகன்

தகைசால் பேராசிரியர்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

வானதி பதிப்பகம்

23, தீனதயாளு தெரு,

தி.நகர், சென்னை – 17.

முதற் பதிப்பு : செப்டம்பர், 2011
இரண்டாம் பதிப்பு : நவம்பர், 2013

© பேராசிரியர் இரா.மோகன்

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ.60.00

- Title : **CEVVIYAL ILAKKIYA CHEZHUMAI**
- Author : Prof. Era. Mohan
- Language : Tamil
- Subject : Literary Criticism
- Edition : Second Edition, November, 2013
- Pages : x + 118 = 128
- Published by: **VANATHI PATHIPPAKAM**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai-17.
  ☎ 24342810 / 24310769
  E-mail : vanathipathippakam@gmail.com
- Price : **₹ 60.00**

Printed at : Novena Offset Printing Co., Chennai - 5 ☎ 28446891

சில சொல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதியுதவியுடன் பல்வேறு கல்வி நிறுவனங்களில் அவ்வப்போது நடைபெற்ற பயிலரங்குகளில் நிகழ்த்தப் பெற்ற உரைகள், உலகத் தமிழ் செம்மொழி மாநாடு உள்ளிட்ட பல்வேறு கருத்தரங்குகளில் படிக்கப்பெற்ற கட்டுரைகள் ஆகியவற்றின் தொகுப்பே 'செவ்வியல் இலக்கியச் செழுமை' எனப் பெயரிய இந்நூல்.

இந் நூலில் இடம்பெற்றுள்ள பன்னிரு கட்டுரைகளுள் சங்க இலக்கியம் பற்றியவை 5; திருக்குறள் பற்றியவை 2; சிலப்பதிகாரம் பற்றியவை 2; உரையாசிரியர்கள் பற்றியவை 2; மொழிபெயர்ப்புப் பற்றிய கட்டுரை 1. பெரும்பாலும் செம்மொழித் தமிழின் செவ்வியைப் பறைசாற்றும் விதத்திலேயே இந்நூலில் கட்டுரைகள் சேர்க்கப் பெற்றுள்ளன. இக் கட்டுரைகள் சங்கச் சான்றோர்களின் ஆளுமைப் பண்புகளை உயர்த்திப் பிடித்துள்ளன; சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியவற்றின் தனிப்பெரும் மாண்புகளைப் புலப்படுத்தியுள்ளன. ஆளுமை வளர்ச்சி, விழுமியக் கல்வி, பதிப்பு வரலாறு, கோட்பாட்டு ஆய்வு, ஒப்பீட்டு நோக்கு, கட்டமைப்புத் திறன், உரை நெறி என்றாற்போல் இன்றைய ஆய்வுலகம் போற்றும் அறிவுத் துறைகளின் அடிப்படையில் முன்னைத் தமிழ் இலக்கியங்கள் அணுகப் பெற்றிருப்பது இக் கட்டுரைகளில் காணலாகும் தனிச்சிறப்பு ஆகும்.

நூலுக்கு நல்லதோர் அணிந்துரையினை நல்கியுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் **இ.சுந்தரமூர்த்தி** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

நூலின் உருவாக்கத்தில் எனக்கு உற்றுழி உதவிய என் வாழ்க்கைத் துணைவி முனைவர் நிர்மலாவுக்கு இத் தருணத்தில் என் ஆழ்ந்த நன்றியறிதலை உரித்தாக்குகிறேன்.

வழக்கம் போல் இந்நூலின் வெளியீட்டுப் பொறுப்பினை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட வானதி ராமு அவர்களுக்கு யான் என்றென்றும் கடப்பாடுடையேன்.

கணினியாக்கப் பணியினைச் செம்மையாக முடித்துத் தந்துள்ள திரு. இரா.ஆனந்த்தின் உதவியையும் ஒத்துழைப்பையும் இவ்வேளையில் மனமாரப் போற்றுகிறேன்.

இரா. மோகன்

மதுரை - 625 019
01.09.2011

தமிழுலகிற்குப் புதிய வரவு

பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
முன்னைத் துணைவேந்தர்
தமிழ் பல்கலைக்கழகம்
முதுநிலை ஆய்வறிஞர்

ஆளுமைப் பண்பை வளர்க்கும் விதத்தில் இன்றைய சூழலில் ஏராளமான நிறுவனங்கள் வணிக நோக்கில் ஈடுபட்டு வருகின்றன. முன்னையோர் ஆளுமைப் பண்பின் இன்றியமையாமையை அறநூல்கள் வழி உணர்த்தினர். பண்டைய இலக்கியங்கள் வாழ்வியல் விழுமியங்களை நன்கு பதிவு செய்துள்ளன. இவற்றைத் தக்கவாறு அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டியது மூத்த தலைமுறையினரின் கடமையாகும்.

'சங்கச் சான்றோர்களின் ஆளுமைப் பண்புகள்' என்னும் தலைப்பில் பேராசிரியர் இரா.மோகன் எழுதிய கட்டுரை இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும். அரசனைக் காட்டிலும் புலவரைப் போற்றிய உயர்ந்த மரபைச் சங்கப் பாடல்களின் தொகுப்பில் காண்கின்றோம். அறிவுடையோர்வழி அரசும் செல்லும் என்னும் கூற்றும் இங்கே நினையத் தக்கது.

கொடிய வறுமைச் சூழலிலும் முறையாக அளிக்காத பரிசிலை மறுக்கும் பெருஞ்சித்திரனாரின் பண்பு குறிப்பிடத்தக்கது. 'யான் ஓர் வாணிகப் பரிசிலன் அல்லேன்' என்னும் வீறார்ந்த விழுமிய உரை தன்மதிப்பைப் போற்றும் தகையமையது.

வறுமையால் வாடிய நிலையிலும் பெற்ற பரிசிலை எல்லோர்க்கும் கொடுக்கும் உயர்ந்த உள்ள முடையோர் சங்கச் சான்றோர் என்பதைப் புறநானூறு காட்டும். எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியே ஆளுமைப் பண்பாகும். இப்பண்பினைப் போற்றி வளர்த்த சங்கச் சான்றோரின் பாடல்கள் உயர்வாழ்விற்கு வழிகோலும் தன்மையன என்பதை நூலாசிரியர் இந்நூல்வழி நன்கு நிறுவியுள்ளார்.

உலகம் ஒருமையுணர்வோடு இயங்குவதற்குத் துணையாவது நட்பாகும். நட்பின் வலிமையைத் திருக்குறள் பல நிலைகளில் எடுத்துரைக்கும், நட்பின் பெருமையை எடுத்துக் காட்ட உரையாசிரியர் பரிமேலழகர் கோப்பெருஞ்சோழனையும் பிசிராந்தையாரையும் விளக்க மாகக் காட்டுவர். உணர்ச்சி ஒத்த நட்பினை விளக்கும் திருக்குறளுக்கு இலக்கியமாக விளங்கியவர் கோப்பெருஞ்சோழர். அரசப் புலவராய் விளங்கும் கோப்பெருஞ்சோழரின் பாடல்கள் செவ்விலக்கியச் செழுமைக்குச் சான்றாக விளங்குவன. இவற்றில் அமைந்த கவிதை நயத்தை இரண்டாம் கட்டுரை ஆராய்ந்துரைக்கின்றது.

நல்வாழ்விற்குப் பொருளீட்டல் என்பது இன்றியமை யாதது. ஈட்டிய பொருளைக் கொண்டு இன்பம் நுகர்வது பழந்தமிழர் வாழ்வியல் நெறியாகும். 'செய்க பொருளை' என்றார் திருவள்ளுவர். அகத்திணைப் பிரிவுகளுள் 'பொருள்வயிற்பிரிவு' என்பதும் ஒன்றாகும். 'பொருள்வயிற் பிரிவு' சுட்டும் பாடல்கள் வழி பழந்தமிழர் வாழ்வியல் உண்மைகளை ஒரு கட்டுரை ஆராய்ந்துரைக்கும். 'பொருள்வயிற் பிரிவு என்னும் இத்துறை சங்கப் புலவர்களின் நெஞ்சை அள்ளிய துறைகளுள் ஒன்று. 'இன்பமும் கடமையும் போராடும் இடமாக, நல்ல உணர்ச்சிகள் மோதிக் கொள்ளும் இடமாக இத்துறை அமைந்துள்ளதைக் காணலாம்' என்று வ.சுப.மாணிக்கனார் கூறுவார். இக்கூற்றை மனத்துட்கொண்டு சங்கப் பாடல்கள்வழி இப்பிரிவு உணர்த்தும் வாழ்வியல் உண்மைகளை நூலாசிரியர் நன்கு விளக்கியுரைக்கின்றார்.

குறுந்தொகை முதன்முதலில் 1915-ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்றது. திருக்கண்ணபுரம் சௌரிப்பெருமாளரங்கன் இந்நூலைப் பதிப்பித்தார். குறுந்தொகைப் பாடல்களுக்குத் திணை வகுத்துத் தந்து, உள்ளுறை இறைச்சி ஆகியவற்றைச் சுட்டி அரிய பதிப்பாகக் கொண்டு வந்தார். இப்பதிப்பில் இவர் இடக்கரடக்கல் எனக் கருதிய பல சொற்களை மாற்றிப் பதிப்பித்ததும் நினைவுகூரத்தக்கது. குறுந் தொகைக்கு எழுந்த முதல் உரைநூலும் இதுவே. இதற்குப் பின் பல உரை நூல்கள் தோன்றின. எட்டுத்தொகை நூல்களுள் மிகுதியான பதிப்பைப் பெற்றது இந்நூலேயாகும். இந்நூலுக்குத் தோன்றிய பல்வேறு பதிப்புக்களையும் 'குறுந்தொகைப் பதிப்பு வரலாறு' என்னும் கட்டுரை எடுத்துரைக்கும்.

கவிஞரின் நுண்உணர் திறனைக் காட்டுவன அவர்தம் உவமைகளே என்பர். தொல்காப்பியர் 'உவமையியல்' என்னும் பகுதியில் அணியின் பல்வேறு வகைகளையும் எடுத்துரைப்பர். சங்கப் பாடல்களில் காணலாகும் உவமைத் தொடர்கள் பொருள் ஆழமும் செறிவும்

மிக்கவை. பெயர் தெரியாத புலவர்கள் அத்தொடர்களாலேயே அழைக்கப்படும் அளவிற்குச் சங்க இலக்கிய உவமைத் தொடர்கள் புகழ் பெற்றவையாய் விளங்குகின்றன.

உவமையை முன்னையோர் அளவை நெறியாகவும் கொண்டனர். கேட்டார்க்கு அலங்காரமாகி இன்பம் பயத்தலும், புலனாகாதார்க்கு புலனாதலும் உவமையின் பண்புகளாகும். தொல்காப்பியம் கூறும் உவமைக் கோட்பாட்டைச் சங்க இலக்கிய உவமைகளோடு நூலாசிரியர் பொருத்தி ஆராயும் நெறி பாராட்டத்தக்கதாகும்.

மனித சிந்தனையின் தூய வெளிப்பாடாகத் திகழும் திருக்குறள் காலந்தோறும் அறிஞர்களால் போற்றப் பெற்றுவரும் அரிய நூலாகும். 'தொட்டனைத்தூறும் மணற் கேணி'யாகத் திருக்குறள் விளங்குகின்றது. ஆய்வாளரின் புலமைத் திறத்திற்குத் தக திருக்குறளில் புதிய புதிய செய்திகளைக் கண்டு இன்புற முடிகின்றது.

திருக்குறளுக்குத் தோன்றிய பழைய உரையாசிரியர்கள் முதற்கொண்டு இன்றைய ஆய்வாளர்கள் வரை திருக்குறளில் காணலாகும் ஆழ அகல நுட்பங்களைக் கண்டு போற்றியுள்ளனர். எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் ஏற்றமிகு நூலாகத் திருக்குறள் விளங்கின்றது.

ஆளுமை வளர்ச்சி, மனித வள மேம்பாடு, விழுமியம் முதலான கல்விக் கோட்பாடுகளைப் போற்றி வளர்க்கும் அரிய நூலாகத் திருக்குறள் விளங்குகின்றது. உலகச் சான்றோர்களின் உள்ளத்தைக் கவர்ந்த நூலாகத் திருக்குறள் விளங்குவதற்குக் காரணம் அதனுடைய பொதுமை அறக் கோட்பாடேயாகும்.

திருக்குறள் கருத்துக்கள் இன்றைய அறிவு யுகத்திற்குப் பொருந்திவரும் பாங்கினை நூலாசிரியர் இந் நூலில் நன்கு விளக்கி யுரைப்பது பாராட்டத்தக்கதாகும்.

'திருவள்ளுவரும் சர்வக்ஞரும்' என்னும் கட்டுரை இருவருடைய கருத்துக்களையும் ஒப்பீட்டு முறையில ஆராய்ந்துரைக்-கின்றது. உலக சகோதரத்துவம், பகுத்துண்டு பல்லுயிர் போற்றல், அருள்நெறி போற்றல், அறக் கோட்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருத்தல், சாதி வேற்றுமை பாராட்டாமை முதலாய கருத்துக்களில் இருவருக்கும் இடையே உள்ள ஒற்றுமையைத் தக்க சான்றுகளோடு இக்கட்டுரை புலப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் குறித்து இந்நூலில் இரு கட்டுரைகள் உள. சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்புத் திறனையும் இளங்கோ அடிகளின் தனித்தன்மையையும் நூலாசிரியர் நன்கு விளக்கியுள்ளார். சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்பில் மூன்று என்ற எண் பெறும் இடம் முதன்மையானது என்பர். முப்பெரும் உண்மைகள், மூன்று காண்டங்கள், முப்பது காதைகள், மூன்று நாடுகள், மூன்று நகரங்கள், மூன்று ஆறுகள், மூன்று சிலம்புகள் எனக் காப்பியத்தில் அமைந்திருக்கும் பல்வேறு நுட்பங்களையும் இக்கட்டுரை புலப்படுத்துவது தனிச் சிறப்பாகும்.

சிலப்பதிகாரக் காப்பிய மாந்தர்களின் வாழ்வில் நிகழும் முக்கிய நிகழ்வுகளுக்கும், அவற்றால் காப்பியத்தில் ஏற்படும் தொடர் விளைவுகளுக்கும் ஊழ்வினையே காரணமாக அமைவதைத் தக்க சான்றுகள் வழிப் புலப்படுத்தியுள்ளார் நூலாசிரியர். 'ஊழ்வினை'யின் ஆற்றலைக் காப்பியத்தின் பாடுபொருளாகக் கொண்டுள்ளமையைக் கட்டுரை நன்கு விளக்கியுரைக்கின்றது.

தமிழ் இலக்கிய வளத்திற்கு உரையாசிரியர்கள் அளித்த பங்களிப்பு மிகப்பெரிதாகும். ஏறத்தாழப் பல நூற்றாண்டுகள் உரையாசிரியர்களின் காலமாகவே திகழ்ந்தது. அக்கால கட்டத்தில் தமிழ் இலக்கியங்களின் செவ்வியல் தன்மையை உரையாசிரியர்கள் தம் புலமைத் திறத்தால் அறிவுலகத்திற்குப் புலப்படுத்தினர். இவர்கள் பழம்பெருநூலான தொல்காப்பியத்திற்கும், செவ்வியல் இலக்கியங்களுக்கும் அரிய உரை விளக்கங்கள் வரைந்து புதிய அறிவுப் புரட்சியை உருவாக்கினர் எனலாம். உரையாசிரியர் காலத்தை 'மீட்டுருவாக்கக் காலம்' எனப் போற்றி மகிழலாம். முன்னையோரின் அறிவுச் செழுமையை உரைகளின்றி உணர முடியாது.

உலகியலறிவும் பல்துறைப் புலமையும் பெற்ற உரையாசிரியர்களின் அருந்திறத்தை விளக்கியுரைத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அவர்கள் பெறுமிடத்தை நூலாசிரியர் நுட்பமாகக் குறிப்பிடுவது பெரிதும் கருதத்தக்கது. 'தண்டமிழின் தரமான நூல்களுள்' உரையாசிரியரின் படைப்பும் இடம்பெறுவது உரையின் பெருமையைக் காட்டும். தமிழிலக்கிய வரலாற்றில் உரையாசிரியர் காலம் 'உரையியக்க காலம்' எனலாம்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரைவரைந்த தெய்வச் சிலையாரின் உரைத்திறத்தையும் ஆசிரியர் நன்கு எடுத்துரைப்பார். தெய்வச்சிலையார் கிளவியாக்கத்திற்குத் தரும் விளக்கத்தை மொழியின் பின்னணி நின்று விளக்குவது குறிப்பிடத்தக்கது. கிளவியாக்கத்தைச்

சொல்லினது தொடர்ச்சி என்றும் சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருள் மேலாகு நிலைமையது என்றும் தெய்வச்சிலையார் விளக்கி யுரைப்பார். இக்கால மொழியியல் தழுவிய இலக்கண ஆய்விற்குத் தெய்வச்சிலையாரின் உரைவிளக்கங்கள் உதவும் தன்மையன.

மொழிபெயர்ப்பு என்பது கூடுவிட்டுக் கூடுபாயும் ஒரு கலை என்பர். ‘உமர் கய்யாம் மொழிபெயர்ப்புகள்’ என்னும் கட்டுரை உமர் கய்யாமின் பாடலை மொழிமெயர்ததுத்தந்த பல்வேறு ஆசிரியர்களின் மொழிநயத்தை ஆராய்ந்துரைக்கின்றது. உமர்கய்யாமின் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த எட்வர்ட் பிட்ஜெரால்டின் படைப்பை அடிப்படையாகக் கொண்டு கவிமணி மொழிபெயர்த்த கவிதை தமிழுலகில் பெரும் புகழ் பெற்றது. கவிமணி, ச.து.சு. யோகியார், சாமிசிதம்பரனார், அப்துல் காதர் லெப்பை, அ. சீநிவாசராகவன், புவியரசு, நாகூர் ரூமி ஆகியோரின் மொழி பெயர்ப்புக்களை ஒப்பிட்டாராய்ந்து அவர்தம் கவிதைத் திறத்தை ஆராய்வது நயமாக உள்ளது.

‘செவ்வியல் இலக்கியச் செழுமை’ என்னும் இந்நூலைப் படைத்தளித்த பேராசிரியர் இரா.மோகன் தமிழியலுக்குத் தொடர்வது பல ஆய்வுகளைத் தந்து வருகின்றார்.

சங்க இலக்கியம் முதல் இன்றைய இலக்கியம் வரை ஈடுபாடு கொண்டு உழைத்து வரும் பேராசிரியர் இரா.மோகன் இளைய தலைமுறைக்கு நல்ல வழிகாட்டியாகவும் திகழ்கின்றார்.

படிப்பதும் படைப்பதும் இவருக்குப் பிடித்தமானவை. ஆய்வரங்கு களில் முத்திரை பதித்து வரும் இவர் பெரும் பேராசிரியர்களிடம் பயின்றவர். அவர்களுடைய ஆய்வணுகுமுறை இந்நூலில் திறம்பட ஒளிர்வதைக் காண முடிகின்றது.

பரந்தபட்ட நூற்பயிற்சி, உரிய ஆய்வு அணுகுமுறை, தக்க சான்றுகளோடு ஆய்வு முடிவுகளை நிறுவும் வன்மை ஆகியனவற்றை இவருடைய இந்நூலில் காண முடிகின்றது.

‘செவ்வியல் இலக்கியச் செழுமை’ நூலாசிரியரின் பல்துறைப் புலமையைக் காட்டும் நூல். ஆசிரியரின் முயற்சியைப் போற்றிப் பாராட்டுவோம்.

இந்நூல் தமிழுலகிற்குப் புதிய வரவு. வாழ்த்துவோம்.

அன்புடன்

இ. சுந்தரமூர்த்தி

பொருளடக்கம்

	பக்கம்
1. சங்கச் சான்றோர்களின் ஆளுமைப் பண்புகள்	1
2. கோப்பெருஞ்சோழரின் கவித்திறம்	9
3. பொருள்வயிற் பிரிவு உணர்த்தும் வாழ்வியல் உண்மைகள்	19
4. குறுந்தொகைப் பதிப்பு வரலாறு: ஒரு பறவைப் பார்வை	29
5. தொல்காப்பிய - சங்க இலக்கிய உவமையியல் கோட்பாடு	41
6. கணினி யுகத்திற்குத் திருக்குறளின் பொருத்தப்பாடு	59
7. திருவள்ளுவரும் சர்வக்ஞரும்	65
8. சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்புத் திறன்	76
9. சிலம்பில் ஊழ்	89
10. உரையாசிரியர்களின் பல்துறைப் புலமை	97
11. தெய்வச்சிலையார் உரைத் திறம்	102
12. தமிழில் உமர் கய்யாம் மொழிபெயர்ப்புகள்	109

1

சங்கச் சான்றோர்களின் ஆளுமைப் பண்புகள்

"பண்டைப் புலவர்களின் ஏறு போன்ற பீடு நடையை நாம் என்றும் மறத்தல் கூடாது. இவர்களுக்கு இவ்வகைப் பெருமிதம் எவ்வாறு வந்தது? அவர்கள் கற்ற கல்வியினாலே தான் வந்தது." *

- ஜி. சுப்பிரமணிய பிள்ளை

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்" (983)

என்பது வள்ளுவர் சான்றாண்மைக்கு வகுக்கும் வரைவிலக்கணம். இவ் வரைவிலக்கணத்தின் படி வாழ்ந்து காட்டிய பெருந்தகையாளர்கள் சங்க காலப் புலவர்கள். 'ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்க'ளாக விளங்கிய சங்க காலப் புலவர்களைச் 'சான்றோர்' என்றலும், அவர்கள் பாடிய செய்யுளைச் 'சான்றோர் செய்யுள்' எனச் சுட்டலும் தமிழ் வழக்கு; மரபு. 'தமிழ் விடு தூது', சங்க காலச் சான்றோர்களை 'மூத்தோர்கள்' என மதிப்போடும் மரியாதையோடும் குறிப்பிடும். 'அவனை அவர் பாடியது' என்னும் புறநானூற்றுத் துறைக் குறிப்பிலும் 'அவன்' என்னும் சொல், நாடாளும் மன்னனைக் குறிக்கும்; 'அவர்' என்னும் சொல், அடுத்த வேளைச் சோற்றுக்கே வழி இல்லை என்றாலும், வறுமையிலும் செம்மையாகப் பெருமிதத்துடன் வாழ்ந்து வரும் புலவரைச் சுட்டும்.

** தமிழ் உள்ளம், ப.62.*

சங்க சான்றோர்களின் ஆளுமைப் பண்புகள்

புறநானூற்றுத் துறைகள் சங்கச் சான்றோர்களின் ஆளுமைப் பண்புகளைச் செவ்வனே அடையாளம் காட்டி நிற்கின்றன. குறுங்கலி, செவியறிவுறூஉ, பரிசில் கடாநிலை, பரிசில் துறை, பரிசில் விடை ஆகிய துறைகள் இவ் வகையில் குறிப்பிடத்தக்கவை. சங்க காலச் சான்றோர்கள் நாடாளும் மன்னர்கள் வழி தவறிச் சென்ற போது சுட்டிக்காட்டுவதோடு நின்று விடாமல், அஞ்சாமல் அவர்களைத் தட்டிக் கேட்கவும் செய்தனர்; ஆட்சியாளர்கள் ஆராயாமல் தவறான முடிவுகளை எடுத்த பொழுது, அவர்களுக்குத் தக்க அறிவுரைகளைக் கூறி நல்வழிப்படுத்தினர்; உரன், ஈகை, பெருமிதம், மானம், வாய்மை, வீறு முதலான உயர்பண்புகளின் உறைவிடமாய்த் திகழ்ந்தனர்; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உளப் பாங்குடனும் உயர்நோக்குடனும் வாழ்ந்தனர். இதனாலேயே சங்க கால மன்னர்களும் புலவர்களால் பாடப் பெறுவதை மிக உயர்வான, பெரும்பேறாகக் கருதினர்; 'புலவர் பாடாது வரைகஎன் நிலவரை' (புறநானூறு, 72) என்னும் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் வஞ்சின மொழி இங்கே நினைவுகூரத்தக்கது. பேராசிரியர் வி.செல்வநாயகம் குறிப்பிடுவது போல், "நாட்டின் நலன் கருதிப் பகையரசர்களைச் சந்து செய்து, தமிழ்நாட்டிலே ஒற்றுமையை நிலவச் செய்து, தமிழர்தம் பண்பாட்டினை வளர்த்ததோடு பிறர் புகழ் பாடியும் தம் புகழ் நாட்டிய சங்க காலப் புலவர்களின் வாழ்க்கை உள்ளுந்தோறும் உவகையளிக்குந்தன்மையது" (தமிழ் இலக்கிய வரலாறு, ப.28). இனி, புறநானூற்றுப் பாடல்கள் புலப்படுத்தும் சங்க காலச் சான்றோர்களின் ஆளுமைப் பண்புகளைக் குறித்துச் சுருங்கக் காண்போம்.

'பரிசில் வாழ்க்கை செம்மலும் உடைத்தே!'

'என் வாழ்க்கையே என் செய்தி' (My Life is my Message) என்றார் காந்தியடிகள். அதுபோல, ஒரு சான்றோர் எப்படி இருக்க வேண்டும் என்பதை இருந்து காட்டியவர் – வாழ்ந்து காட்டியவர் – கோவூர்கிழார். இவர் சோழன் நலங்கிள்ளியின் ஊரில் இருந்து உறையூருக்கு வந்த இளந்தத்தன் என்னும் புலவரைக் காரியாற்றுத்

துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்றன் எனத் தவறாகக் கருதிக் கொல்ல முற்பட்ட போது, அதனைத் தடுத்து நிறுத்திப் புலவரின் உயிரைக் காப்பாற்றியவர். இச் சூழலின் போது கோவூர்கிழார் பாடிய புறப்பாடல், பண்டைப் புலவர்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுவது போல் நமக்குத் தெளிவுறுத்துவதாகும்.

"பழுத்த மரங்களை நாடிப் பறவைகள் செல்லுவது போல, வள்ளன்மை வாய்ந்த மன்னர்களை நாடிப் புலவர்கள் செல்லுவார்கள். நெடுந்தொலைவின என்று எண்ணாமல், அவர்கள் பாலை வழி பல கடந்து அவ்வள்ளல்கள் வாழும் இடங்களை அடைவார்கள். வள்ளல்களைக் கண்டு தமது திருந்தா நாவினால் இயன்ற அளவில் முயன்று பாடுவார்கள். அவர்கள் தருவதை மனம் மகிழ்ந்து ஏற்றுக் கொள்வார்கள். அவ்வாறு பெற்றதைத் தாமே தனித்திருந்து உண்ணாமல், தம் சுற்றத்தினர் யாவருக்கும் பகிர்ந்து கொடுப்பார்கள். நாளைக்கு வேண்டுமே என்று பாதுகாவாமல், மற்றையவர்களுக்கும் மனம் சுருங்காமல் அள்ளித் தருவார்கள். தங்கள் புலமைத் தகுதிக்கு ஏற்ற பரிசிலைப் பெற்று வாழ்வில் சிறக்க வேண்டும் என்பதே எப்பொழுதும் அவர்களின் தலையாய நோக்கமாக இருக்கும். இத்தகைய பண்புகள் எல்லாம் அமையப் பெற்ற புலவர்தம் பரிசில் வாழ்க்கை என்பது பிறர்க்குத் தீமை செய்வதைக் கனவிலும் அறியாததாகும். பகைவர்களும் நாணுமாறு, தலைநிமிர்ந்து பெருமிதத்துடன் இனிதாக வாழ்வதே பரிசில் வாழ்வின் உயிர்ப் பண்பாகும். மேலும், உயர்ந்த புகழையும் மண்ணுலகை ஆளும் செல்வச் சிறப்பையும் கொண்ட நும் போன்ற மன்னர்களின் தலைமைப் பண்பினையும் புலவர்தம் பரிசில் வாழ்க்கை உடையதாகும்." இக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட நெஞ்சை அள்ளும் கோவூர்கிழாரின் புறநானூற்றுப் பாடல் வருமாறு:

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி

வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதுஅறிந் தன்றோ இன்றே, திறப்பட,
நண்ணார் நாண அண்ணாந்து ஏகி
ஆங்குஇனிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ஆள் செல்வம் எய்திய
நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே.”

(புறநானூறு, 47)

‘வரிசைக்கும் வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை... நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே’ என ஒரு நாடாளும் மன்னனிடமே கூறவேண்டும் என்றால், கோவூர்கிழாரின் ஆளுமை எத்தகைய பெருமையும் பெருமிதமும், உரனும் உயர்வும் பெற்றதாக இருத்தல் வேண்டும். தொல்காப்பியர் பெருமிதம் என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்கான களங்களைப் பட்டியல் இடும்பொழுது முதலில் கல்வியைச் சுட்டுவதும் இங்கே மனங்கொளத் தக்கதாகும். ‘கல்வி தறுகண் இசைமை கொடைஎனச், சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே’ என்பது தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் நூற்பா (9).

அதியமான் நெடுமான் அஞ்சி பரிசில் நீட்டித்த போது ஒளவையார் பாடியதாகப் புறநானூற்றில் ஒரு பாடல் உள்ளது. அதில்,

“வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை”

(புறநானூறு, 206)

எனப் புலவர்தம் பரிசில் வாழ்க்கையின் பரிமாணம் ஒளவையாராலும் செவ்விதின் உணர்த்தப்பட்டுள்ளது. இங்கே, ‘தாம் உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளம்’ கொண்டவராகப் புலவர்கள் சுட்டப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

‘யான் ஓர் வாணிகப் பரிசிலன் அல்லேன்!’

சங்கச் சான்றோரது ஆளுமைப் பண்பில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது நெருப்பினும் கொடிய வறுமைச் சூழலிலும் செம்மையாக

வாழ்ந்தமை ஆகும். 'நல்குரவு' அதிகாரத்தில் வள்ளுவர், 'இன்மையின் இன்மையே இன்னாதது' (1041) என அறுதியிட்டு உரைப்பார்; 'இன்மை என ஒரு பாவி' (1042) என வறுமையைக் கடுமையாகச் சாடுவார். இத்தகைய கொடிய வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த போதும், சங்கச் சான்றோர்கள் தம் நிலையினின்று இம்மியளவும் தாழ்ந்ததில்லை; காணாது கொடுத்த பரிசிலையோ, காலம் தாழ்த்தித் தந்த பரிசிலையோ, வரிசை அறியாது தரும் சிறுபரிசிலையோ, உள்ளன்பு இல்லாமல் தரும் உயர்பரிசிலையோ அவர்கள் ஒருகாலும் ஏற்றுக்கொண்டதே இல்லை.

அதியமான் நெடுமான் அஞ்சியுழைச் சென்ற பெருஞ் சித்திரனாரைக் காணாது 'இது கொண்டு செல்க' என்று அவன் பரிசில் கொடுப்பக் கொள்ளாது அவர் சொல்லியதாகப் புறநானூற்றில் ஒரு பாடல் உள்ளது. அப் பாடலில் புலவரின் ஆளுமைப் பண்பினைப் பறைசாற்றும் வகையில் இடம்பெற்றுள்ள உயிரோட்டமான வரிகள் வருமாறு:

"காணாது ஈத்த இப்பொருட்கு யான்ஓர்
வாணிகப் பரிசிலன் அல்லேன்; பேணித்
தினைஅனைத்து ஆயினும் இனிதுஅவர்
துணையளவு அறிந்து நல்கினர் விடினே." *(208)*

'என் தகுதியைக் காணாமல் தந்த இப் பரிசிலைப் பெற்றுக் கொள்வதற்கு யான் ஒரு வணிக வழிப் பரிசிலன் அல்லேன்; தக்க வரிசை அறிந்து போற்றி வழங்கும் பரிசு தினையளவே எனினும், பெரிதாகும்' என்னும் பெருஞ்சித்திரனாரின் கூற்று ஆளுமைப் பண்பின் மணிமகுடம் ஆகும். 'வறுமையில் பெரிய வறுமையும், மானத்தில் பெரிய மானமும் அமைந்த சான்றோர் இவர்' என்பதற்குக் கட்டியம் கூறும் பாடல் இது!

புறநானூற்றின் 159-ஆம் பாடல் பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடியது. அதில், 'கூரிய வேலையுடைய குமணனே, முறையாகக் கொடுத்தலை வேண்டுகிறேன்! உன்னைப் பாடிய யான், உயர்ந்த தந்தங்களையுடைய வலிய யானையைப் பெறுவதாயினும் உள்ளன்பு

இல்லாது தரும் பரிசிலை ஏற்றுக்கொள்ள மாட்டேன். விருப்புடன் இனிதாகத் தருவாய் எனின், சிறிதாகிய குன்றிமணி அளவினதையும் நிறைவாகக் கொள்வேன்' எனத் தம் நெஞ்சினைத் திறந்து காட்டுகின்றார் புலவர்:

"உயர்ந்துஏந்து மருப்பின் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென்; உவந்துநீ
இன்புற விடுதி யாயின் சிறிது
குன்றியும் கொள்வல் கூர்வேல் குமண...
... ...நிற் பாடிய யானே"

'உவந்து நீ, இன்புற விடுதி யாயின், சிறிது குன்றியும் கொள்வல்' என்னும் வரிகளில் வெளிப்படும் புலவரின் ஆளுமைப் பண்பு நனி சிறந்த ஒன்றாகும்.

குமணனைப் பாடிப் பரிசில் கொணரும் பெருஞ்சித்திரனார் தம் மனையோளிடம், "இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது, வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும், எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே... திருந்துவேல் குமணன் நல்கிய வளனே" (புறநானூறு, 163) எனக் கூறுவதும் இங்கே நினைவுகூரத் தக்கதாகும். 'வறுமையில் காட்டிய வீறு போலவே, வள்ளன்மையிலும் பெருஞ்சித்திரனார் வீறு புலப்படச் செய்வது இப் பாட்டு' எனலாம்.

வெளிமான் என்பவன் ஒரு சிற்றரசன்; சிறந்த கொடையாளன். அவனைக் காணச் சென்ற போது புலவர் பெருஞ்சித்திரனார்க்குக் கசப்பான அனுபவம் நேருகின்றது. அவர் வெளிமானைச் சந்திக்கச் சென்றபோது அவன் தனது தம்பி இளவெளிமானிடம் 'பரிசில் கொடு' எனச் சொல்லிவிட்டு உறங்கப் போய்விடுகிறான்; இளவெளிமானோ புலவரின் வரிசையை அறியாமல் சிறிது பரிசில் கொடுக்கிறான். பெருஞ்சித்திரனார் அதனைக் கொள்ளாது குமணனிடம் செல்கின்றார். அவனைப் பாடி அவன் யானைப் பரிசில் கொடுக்கக் கொணர்ந்து, அதனை வெளிமான் ஊர்க் காவல் மரத்திலே கட்டிவிட்டுச் செல்கின்றார். அப்போது அவர் இளவெளிமானிடம் சொல்லுவதாகப் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள அருமையான பாடல் இது:

"இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்;
இரவலர் உண்மையும் காண்இனி; இவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண்இனி; நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே!" (162)

"தொடர் எளிமையும் பொருள் நயமும் அமைந்த பாடல் இது. பெருஞ்சித்திரனார் கொண்ட வறுமையிற் செம்மையைக் காலமெல்லாம் காட்டிக் கொண்டிருக்கும் பாட்டு இது" (புறநானூறு, மக்கள் பதிப்பு, ப. 286) என இப்பாடலின் சீரினையும் சிறப்பினையும் விதந்து கூறுவார் மூதறிஞர் இரா. இளங்குமரன்.

'பெட்பின்றி ஈதல் யாம் வேண்டலமே!'

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள 205-ஆம் பாடல் கோடை மலைத் தலைவனான கடிய நெடு வேட்டுவன் பரிசில் நீட்டித்த போது பெருந்தலைச் சாத்தனார் பாடியது ஆகும். அதில், 'பெருவளச் செல்வராகிய சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தரே எனினும் விருப்பம் இல்லாமல் தரும் கொடையை யாம் விரும்ப மாட்டோம்' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார் சாத்தனார்:

"முற்றிய திருவின் மூவர் ஆயினும்
பெட்பின்றி ஈதல் யாம்வேண் டலமே" (205)

என்னும் புலவரின் கூற்றில் பெருமித உணர்வு ததும்பி நிற்கக் காணலாம்.

'பொய் கூறேன்; மெய் கூறுவல்!'

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற" (291)

என்பது வள்ளுவர் அனுபவ மொழி. வள்ளுவர் பெரிதும் போற்றிய இவ் வாய்மை அறத்தினைத் தம் வாழ்க்கை நெறியாக என்றென்றும் கடைப்பிடித்து வந்தவர்கள் சங்கச் சான்றோர்கள் ஆவர்.

"வாழ்தல் வேண்டிப்
பொய் கூறேன் மெய்கூறுவல்" (139)

என்னும் மருதன் இளநாகனாரின் கூற்று இவ்வகையில் மனங்கொளத் தக்கதாகும்.

வன்பரணர் பிறிதொரு பாடலில், 'பெருமையற்ற மன்னரைப் புகழ்ந்து அவர் செய்யாதவற்றைச் செய்ததாகச் சொல்லிப் புகழ்வதை எம்முடைய சிறிய செவ்வையான நாவு அறியாதது ஆயிற்று' எனப் பெருமிதத்துடன் உரைக்கின்றார்.

"பீடுஇல் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டி
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யாது ஆகின்றுஎம் சிறுசெந் நாவே" (148)

என்னும் வன்பரணரின் வாக்கு அவரது ஆளுமைப் பண்பினைப் பறைசாற்றுவதாகும். இங்கே பொய் கூறாமையால் தம் நாவினைச் 'செந்நா' என்கிறார் புலவர். 'தற்புகழ்ந்தார் ஆகாமல் சிறுநெந்நா என்றார்' என்பது இத் தொடரில் பழைய உரைகாரர் காணும் நயம்.

"பெரிதே உலகம் பேணுநர் பலரே" (புறநானூறு, 207) எனவும், "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" (புறநானூறு, 206) எனவும் வரும் சங்கச் சான்றோரின் வைர வரிகள் பயில்வோர் நெஞ்சில் தன்னம்பிக்கையை விதைப்பன ஆகும்.

இன்று பரவலாகப் பேசப்படும் ஆளுமை வளர்ச்சி (Personality Development) என்னும் நோக்கில் சங்க காலச் சான்றோர்களின் வாழ்க்கையை – அவர்களது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றை– அலசி ஆராயும் முயற்சி புதியது; அது இன்றைய சூழலில் ஒருவர் தமது ஆளுமைத் திறத்தினை வளர்த்துக் கொள்ளுவதற்கு வழி காட்டுவது; ஒருவரது ஆளுமைப் பண்பினைச் செதுக்கி நல்வழிப் படுத்துவதற்கும் உற்றுழி உதவுவது.

2

கோப்பெருஞ்சோழரின் கவித்திறம்

*"கோவேந்தராகிய இவர், பாவேந்தராகவும் விளங்கினார் ... உயிர் துறக்கும் நிலையிலும் உயிர் நண்பர்கள் தம்மோடு வடக்கிருக்கும் பெருநிலை பெற்றவர்." **

- இரா. இளங்குமரன்

சங்க காலத்தில் விளங்கிய அரசப் புலவர்களின் எண்ணிக்கை 31. இவர்களுள் பாண்டிய நாட்டு அரசப் புலவர்கள் 14 பேர்; சேர நாட்டு அரசப் புலவர்கள் 9 பேர்; சோழ நாட்டு அரசப் புலவர்கள் அறுவர். இவ் வகையில் பேராசிரியர் ந.சஞ்சீவியின் 'சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்' தரும் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் வருமாறு:

1. ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன் தமிழ்ப் புலவனாய் இருந்தமை எண்ணி மகிழத் தக்கது.
2. மதுரையில் அரசப் புலவர்கள் மிகுதியாக இருத்தல் குறிக்கத் தக்கது.
3. சோணாட்டு அரசப் புலவர்களைக் காட்டிலும் சேர நாட்டு அரசப் புலவர் மிகுந்திருத்தல் குறிக்கத்தக்கது.
4. வீர வாழ்வு வாழ்ந்த சோழர்களில் அறுவர் புலவர் என்பது மகிழ்வுக்குரியது (பக்.33-34).

சோழ நாட்டு அரசப் புலவர்கள்

1. கோப்பெருஞ்சோழன்
2. செம்பியனார்
3. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

----

* புறநானூறு: மக்கள் பதிப்பு, ப.31.

4. சோழன் நலங்கிள்ளி
5. சோழன் நல்லுருத்திரன்
6. மாவளத்தன்

ஆகியோர் சங்க காலத்தில் விளங்கிய சோழ நாட்டு அரசப் புலவர்கள் ஆவர்.

கோப்பெருஞ்சோழர்

பார்வேந்தராகிய இவர், பாவேந்தராகவும் விளங்கியவர். "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான், நட்பாம் கிழமை தரும்" (785) என்னும் குறட்பாவுக்கு எழுதிய உரை விளக்கத்தில் பரிமேலழகர், "'புணர்ச்சி': ஒரு தேயத்தார் ஆதல்... 'பழகுதல்' பலகால் கண்டும் சொல்லாடியும் மருவுதல். இவ்விரண்டும் இன்றிக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி ஒப்பின், அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாம். நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி ஒத்தல் என்னும் காரணம் மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்தென்பது இதனால் கூறப்பட்டது" (திருக்குறள், பரிமேலழகர் உரை, ப.223) எனக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் இடையே நிலவிய உணர்ச்சி ஒத்த நட்புக்குப் புகழாரம் சூட்டுவார்.

கோப்பெருஞ்சோழரின் நட்பு வட்டம் விழுமியது. பிசிராந்தை யாரும் பொத்தியாரும் இவர்பால் கொண்டிருந்த நட்பு 'நிலத்தினும் பெரிது, வானினும் உயர்ந்தது, கடலினும் ஆழம் மிக்கது.' அதே போல புலவர்பால் கோப்பெருஞ்சோழன் பூண்டிருந்த அன்பும் தனித் தன்மை வாய்ந்தது. தலைவன் பாங்கனை விளிப்பதாக இவர் படைத்துள்ள ஒரு குறுந்தொகைப் பாடலில்,

"எலுவ சிறாஅர் ஏமுறு நண்ப
புலவர் தோழ" (129)

என்று புலவர்களுக்குத் தோழனாக இருத்தலின் பெருமையைப் புலப்படுத்தி இருப்பது மனங்கொளத்தக்கது.

பிறிதொரு குறுந்தொகைப் பாடலில் (20) அரசர்களுக்கு இன்றியமையாத அருளும் அன்பும் தலைவனுக்கு இன்றியமையாத பண்புகள் என்று குறிப்பிடுவதால் இவரது செங்கோன்மை புலனாகும்.

புறநானூற்றில் இவர் பாடியனவாக மூன்று பாடல்கள் (214-216) காணப்படுகின்றன. அவை இவருடைய உயரிய மனப்பான்மையைப் பறைசாற்றுவனவாகும். அப் பாடல்களில் இவர் வலியுறுத்தியுள்ள விழுமியங்கள்- அறங்கள் - பலகால் படித்து இன்புறத்தக்கன; வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவன.

அகப் பாடல்களின் அமைப்பும் அழகும்

கோப்பெருஞ்சோழர் பாடியனவாகக் குறுந்தொகையில் நான்கு பாடல்கள் (20, 53, 129, 147) காணப்படுகின்றன. அவற்றுள் இரு பாடல்கள் தலைவன் கூற்றாக அமைந்தவை; தலைவி கூற்றாக ஒரு பாடலும், தோழி கூற்றாக ஒரு பாடலும் அமைந்துள்ளன.

குறுந்தொகை 20-ஆம் பாடல் தலைவி கூற்றாக அமைந்தது; 'செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்தது' என்பது அப் பாடலின் துறைக் குறிப்பு. தலைவனது பொருள்வயிற் பிரிதலை உணர்த்திய தோழியை நோக்கி, "தோழியே! அருளையும் அன்பையும் துறந்து, தம் துணைவியை விட்டுப் பொருள் தேடும் முயற்சியின் பொருட்டுப் பிரிந்து செல்லும் தலைவர், அறிவுடையவராயின், அந்த ஆற்றலை உடையோர் அறிவுடையவரே ஆகுக! அவரைப் பிரிந்திருத்தற் குரிய ஆற்றல் இல்லாத நாம் அறிவிலேம் ஆகுக!" என்று உரைக்கிறாள் தலைவி. தலைவியின் உள்ளத்து உணர்வினைத் தன்னகத்தே கொண்ட பாடல் இதோ:

"அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயின் பிரிவோர் உரவோர் ஆயின்,
உரவோர் உரவோர் ஆக;
மடவம் ஆக மடந்தை நாமே." *(20)*

அருள் - தம்மோடு ஒரு தொடர்பும் இல்லாதார் மட்டும் அவர் துயரம் கண்டால் உண்டாகும் இரக்கம். அன்பு – தொடர்பு உடையாரிடத்தும், தன்னால் புரக்கப்படுவார் மேலும் உளதாகிய காதல். 'பெண் என்னும் பொதுமை பற்றி என்பால் அருளேனும், துணைவி என்னும் சிறப்புப் பற்றி அன்பேனும் உளராயின் தலைவர் நீங்கார்' என்பது தலைவியின் உள்ளக் குறிப்பு. நிலையற்ற பொருளுக்காகத் துணைவியைத் துறந்து போவோர் அருளும் அன்பும் உடையவராதல் இல்லை என்பது பெறப்பட்டது. உரவோர் - அறிவுடையோர், வன்மையை உடையோர்; உரம் - அறிவு. "உரன் என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்" (24) என்னும் குறட்பா இங்கே நினைவுகூரத்தக்கது. மடவம்- அறிவில்லேம். "உரவோராக என்றது உரவோரல்லர் என்னும் நினைவிற்று" (குறுந்தொகை மூலமும் உரையும், ப.49) என்பர் உ.வே.சாமிநாதையர்.

குறுந்தொகை 53-ஆம் பாடல் தோழி கூற்றாக அமைந்தது. 'வரைவு நீட்டித்த வழித் தோழி தலைமகற்கு உரைத்தது' என்பது பாடலின் துறைக் குறிப்பு. தலைவன் 'நின்னை விரைவில் மணம் செய்து கொள்வேன்' என்று உறுதிமொழி கூறிய பின்பும் நெடுங்காலம் கழிந்தது கண்டு தலைவி வருந்துதலை அறிந்த தோழி தலைவனை நோக்கி, "நீ பலமுறை கூறிய உறுதிமொழிகள் எம்மை வருத்தின; அவை பிறழாமல் நீ இனி விரைவில் தலைவியை மணந்து கொள்ள வேண்டும்" என்று கூறுகிறாள்.

"எம் அணங் கினவே மகிழ்ந ...
... ... எம்ஊர் வியன்துறை
நேர்இறை முன்கை பற்றிச்
சூரர மகளிரொடு உற்ற சூளே." (53)

'வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்' என இப்பாடலில் இடம் பெற்றிருக்கும் வெறியாட்டு பற்றிய குறிப்பு சிறப்பானது. வேலன்- வெறியாட்டு எடுப்பவன்; முருகனைப் பூசை பண்ணும் தொழிலினன்; தன் கையில் வேலையுடைமையின் இப் பெயர் பெற்றான். வெறியயர்தல்-

மறியறுத்துக் குரவையாடி முருகனை வழிபடுதல். அங்ஙனம் வெறியயரும் களத்தில் பொரி சிதறுதல் உண்டு. களவுக் காலத்தில் தலைவியின் முன்கையைப் பிடித்து, தெய்வ மகளிரைச் சுட்டித் தலைவன் 'நின்னை விரைவில் மணம் செய்து கொள்வேன்' என்று சத்தியம் செய்து தரும் வழக்கினை இப் பாடல் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

குறுந்தொகை 129-ஆம் பாடல் தலைவன் கூற்றாக அமைந்தது. 'தலைமகன் பாங்கற்கு உரைத்தது' என்பது இப்பாடலின் துறைக் குறிப்பு. தலைவியோடு அளவளாவி மீண்ட தலைவனது வாட்டத்தைக் கண்ட பாங்கன், "நினக்கு இவ்வாட்டம் உண்டாதற்குக் காரணம் யாது?" என வினவுகிறான். அவனுக்கு மறுமொழியாகத் தலைவன், "பெரிய கடலின் நடுவில் எட்டாம் திதிக்கு உரிய இளைய வெள்ளிய திங்கள் தோன்றியதைப் போல, கூந்தலின் அருகில் விளங்குகின்ற ஓர் அழகிய மகளின் சிறிய நெற்றி, புதிதாகக் காட்டிலிருந்து பிடிக்கப்பட்ட யானையைப் போல, எம் உள்ளத்தைப் பிணித்தது" எனத் தன் காதல் அனுபவத்தை எடுத்துரைக்கிறான்.

"மாக்கடல் நடுவண் எண்ணாள் பக்கத்து
பசுவெண் திங்கள் தோன்றி யாங்கு
கதுப்புஅயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே." *(129)*

கோப்பெருஞ்சோழரின் ஆளுமைப் பண்பையும் உவமைத் திறத்தையும் ஒருங்கே அடையாளம் காட்டி நிற்கும் பாடல் இது. கோப்பெருஞ்சோழருக்குப் புலவர்பாலும் நட்பின் மீதும் உள்ள இமாலயப் பற்றினை இப்பாடலின் முதல் இரண்டு அடிகள் புலப்படுத்துகின்றன. 'எலுவ – நண்ப – தோழ' என நட்பினைக் குறிக்கும் மூன்று சொற்களை ஒரே பாடலில் கோப்பெருஞ்சோழர் கையாண்டிருப்பது ஒரு சிறப்பு; 'புலவர் தோழ' என்னும் விளியும் அவரது ஆழ்மனத்தைத் திறந்து காட்ட வல்லது. தலைவியின் கூந்தலுக்குக் கடலும் நெற்றிக்குத் திங்களும் உவமைகள்; சிறிய நெற்றிக்கு எட்டாவது திதிக்கு -

அட்டமிக்கு - உரிய இளைய திங்கள் - பொருத்தமான உவமை; அதேபோல, தலைவியின் அடர்ந்த கூந்தலுக்குப் படர்ந்த, பெரிய கடல்-நயமான உவமை. 'புதுக்கோள் யானையின் பிணித்தற்று' என்னும் உவமையும் தலைவனின் வித்தியாசமான காதல் அனுபவத்தைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றது. தலைவன் தான் முன்னர் இத்தகைய உள்ளக் கவர்ச்சியை அடைந்தவனல்லன் ஆதலின், புதுக்கோள் யானையை உவமை கூறுகிறான். "ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள், நண்ணாரும் உட்கும்என் பீடு" (1088) என்னும் குறட்பா இங்கே ஒப்புநோக்கத் தக்கது.

தலைவன் கூற்றாகக் கோப்பெருஞ்சோழர் பாடிய பிறிதொரு பாடலும் குறுந்தொகையில் உள்ளது. தலைவன் தலைவியைப் பிரிந்து சென்ற இடத்துத் துயிலும் பொழுது அவளைக் கனவில் கண்டு பிரிவாற்றாமல் சொல்லுவதாக அப்பாடல் வருகின்றது. 'கனவே! தலைவியைக் கொணர்ந்து கொடுத்தாயைப் போல இனிய துயிலி னின்றும் எழுப்புகின்றாய்; தம் துணைவியரைப் பிரிந்தோர் நின்னை இகழார்' என்னும் தலைவன் கூற்றைத் தாங்கி நிற்கும் பாடல் வருமாறு:

"நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல
இன்துயில் எடுப்புதி கனவே
எள்ளார் அம்ம துணைப்பிரிந் தோரே." (147)

'வேனிற் பாதிக் கூன்மலர் அன்ன, மயிர்ஏர்பு ஒழுகிய அங்கலுழ் மாமை' என இப் பாடலின் தொடக்கத்தில் கோப்பெருஞ்சோழர் கையாண்டிருக்கும் உவமை நுட்பமானது. வேனிற் காலத்தில் மலரும் பாதிரி மலரின் துய், தலைவியின் வயிற்றிடத்தே உள்ள மயிரொழுங்கிற்கு உவமை. உளவியல் அறிஞர் சிக்மண்ட் ஃபிராய்டின் 'கனவுகளின் விளக்கம்' என்ற நூல் ஆய்வுலகில் தடம் பதித்த ஒன்று.

அதன் ஒளியில் கோப்பெருஞ்சோழரின் இக் குறுந்தொகைப் பாடல் மேலும் ஆராயத்தக்கது.

இங்ஙனம் கோப்பெருஞ்சோழரின் குறுந்தொகைப் பாடல்கள் நான்கும் அவரது படைப்புத் திறத்தின் பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத்துவனவாய் விளங்குகின்றன.

புறப்பாடல்களின் நயமும் நுட்பமும்

உயர்ந்த உள்ளத்திற்கும் உணர்ச்சி ஒத்த நட்புக்கும் சொந்தக் காரராக விளங்கிய கோப்பெருஞ்சோழரின் வாழ்வில் ஓர் இன்னாச் சூழல் எழுந்தது; அவருக்குத் தம் மக்களுடன் கருத்து மாறுபாடு தோன்றியது; போர் எழக் கூடிய கடுமையான சூழலும் வாய்த்தது. இந்நிலையில் சான்றோர் கூறிய அறிவுரையை ஏற்று, கோப்பொருஞ் சோழர் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டார்; எனினும், வடக்கிருந்து உண்ணா நோன்பு மேற்கொண்டு உயிர் துறக்க முடிவு எடுத்தார். அந்நிலையில் அவர் இயற்றிய பாடல்கள் உருக்கமானவை.

புறநானூறு 215-ஆம் பாடல் கோப்பெருஞ்சோழர் 'பிசிராந்தையார் வாரார்' என்ற சான்றோர்க்கு அவர் வருவார் என்று சொல்லியது. "பிசிராந்தையார் தெற்கில் உள்ள பொதிய மலைநாட்டின் பிசிர் என்னும் ஊரினர் என்று சொல்லுவர். அவர், என் உயிரின் பாதுகாவலர்; அவர் யான் நாடாளும் வேந்தனாகச் செல்வத்தில் திளைத்த காலத்தில் வாராது இருப்பினும், மீளாத் துயரில் வருந்தும் இக் காலத்தில் வரத் தவற மாட்டார்; உறுதியாக வருவார்" என்னும் கோப்பெருஞ்சோழனின் நம்பிக்கை மொழியைத் தாங்கி நிற்கும் வைர வரிகள் வருமாறு:

"தென்னம் பொருப்பன் நன்னாட்டு உள்ளும்
பிசிரோன் என்பஎன் உயிர்ஓம்பு நனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லல் காலை நில்லலன் மன்னே" (215)

இப்பாடலில் இடம்பெற்றிருக்கும் 'உயிர் ஓம்புநன்' என்னும் தொடர், 'உயிர் நட்பு' என்பதன் அரிய விளக்கமாக அமைந்ததாகும்.

புறநானூறு 216-ஆம் பாடல், வடக்கிருந்த கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார்க்கு இடம் ஒழிக்க என்றது. "சான்றோர்களே! 'கேள்வியுற்ற

அளவே அல்லாமல், சிறிது போதும் காணுதல் இல்லாமல் ஆண்டுகள் பல சென்றன; குறையின்றிப் பழகிய உரிமை நண்பரே எனினும், முறை தவறாமல் நடத்தல் என்பது அருமையே' என்று ஐயம் கொள்ளாதீர்கள்; இகழத்தக்க பண்புகள் சிறிதும் இல்லாதவன்; இனியவன்; ஒன்றிப் பிணைந்த நட்பினன். புகழை அழிக்கும் பொய்யை ஒருபோதும் விரும்பாதவன்; அவன் பெயரைக் கூறக் கேட்கும் போதில், 'என் பெயர் தூய உள்ளம் அமைந்த சோழன்' என்று கூறும் சிறந்த காதல் உரிமை பூண்டவன்; அதற்கு மேல், யான் இத்தகைய துன்புறு பொழுதிலே வாராமல் இரான்; இப்பொழுதே வருவான்; அவனுக்கு இடம் ஒதுக்கி வைக்க!" என்னும் கோப்பெருஞ்சோழரின் மொழியைத் தன்னகத்தே கொண்ட பாடல் வரிகள் வருமாறு:

"ஐயம் கொள்ளன்மின் ஆரறி வாளீர்,
இகழ்விலன்; இனியன்; யாத்த நண்பினன்;
புகழ்கெட வருஉம் பொய்வேண் டலனே;
தன்பெயர் கிளக்கும் காலை, 'என்பெயர்
பேதைச் சோழன்' என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன்; அதன்தலை,
இன்னதோர் காலை நில்லலன்;
இன்னே வருகுவன்; ஒழிக்க அவற்கு இடமே." (216)

கோப்பெருஞ்சோழரின் நம்பிக்கைக்கு ஏற்பப் பிசிராந்தையாரும் வந்தார். சோழ மன்னர் மாய்ந்தது கண்டு தாமும் அதே இடத்தில் உயிர் நீத்தார். 'இன்னே- இப்பொழுதே – வருகுவன்' என்று சொன்ன வேந்தனது பெருமையை எண்ணி வியப்பதா? அச் சொல் பழுதுபடாமல் வந்து நின்ற புலவரது அறிவை எண்ணி வியப்பதா? கொள்கைச் சான்றோர் பொத்தியாரின் மொழியிலே குறிப்பிடுவது என்றால்,

"'வருவன்' என்ற கோனது பெருமையும்,
அது பழுது இன்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்புஇறந் தன்றே!' (217)

வியக்கும் தோறும் வியக்கும் தோறும் வியப்பின் எல்லை கடந்து நிற்கும் தனிப்பெரும் நிகழ்வு இது! பிசிராந்தையாரைப் போலவே

பொத்தியார் என்ற புலவரும் கோப்பெருஞ்சோழருடைய பிரிவுக்காக வருத்தி உண்ணா நோன்பு கிடந்து உயிர் விட்டார். பிசிராந்தையார், பொத்தியார் ஆகிய இரு புலவர்களும் அந்த நிகழ்ச்சியின் போது பாடிய உருக்கமான பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. பேராசிரியர் அரங்க. இராமலிங்கம் குறிப்பிடுவது போல், "கோப்பெருஞ் சோழனின் புலமை நலம் புலவர் பலரை அவனுக்கு நண்பராக்கியது; அவனது பண்புநலம் அவர்களை அவனுடன் வடக்கிருக்க வைத்தது" (சங்க இலக்கியத்தில் வேந்தர், ப.115).

புறநானூற்று 214-ஆம் பாடல் கோப்பெருஞ்சோழர் வடக்கிருந்த நிலையில் சொன்னதாகும். பொருள்மொழிக் காஞ்சித் துறையில் அமைந்த அப் பாடல் 'எவ்வகையாலும் நல்வினை செய்தலே நன்று' என்பதை வலியுறுத்துவதாகும். "குற்றம் அமைந்த உள்ளத்தினை உடைய தெளிவற்றோர், அறச்செயல் செய்வோமோ, மாட்டோமோ என்று எண்ணி மயங்கித் தம் ஐயப்பாடு நீங்கார். யானை வேட்டைக்குச் சென்றவன், யானையையும் எளிதாகப் பெறுவான்; சிறிய பறவை வேட்டைக்குப் போனவன், அதனைப் பெறாமல் வெறுங்கையுடனும் வருவான். இதனால் உயர்ந்தது உள்ளுவோர் வெற்றியும், சிறியது கருதுவோர் தோல்வியும் பெறுவர் என்பது தெளிவாகும். ஆதலால், உயர்ந்த விருப்பத்தை உடைய உயர்ந்தோருக்கு, அவர் செய்த நல்வினைக்குத் தக்க பயன் எய்துமாயின், விண்ணுலக இன்பமும் கூடும்; அவ் விண்ணுலக இன்பம் கிட்டாது போயினும், மீளப் பிறவாமை கூடும். மீளப் பிறவார் ஆயினும், இமயமலையின் உயர்ந்த சிகரம் போலத் தம் புகழை நிலைபெறச் செய்து, வசையில்லாத உடம்போடு கூடி நின்று இறத்தல் மிகத் தலையாயதாகும். ஆதலால், எவ்வகை யாலும் நல்வினை செய்தலே நன்றாம்" என அறுதியிட்டு உரைக்கின்றார் கோப்பெருஞ்சோழர்.

"யானை வேட்டுவன் யானையும் பெறுமே;
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே;
அதனால், உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கில் எய்தல் உண்டுஎனில்,

தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்;
தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனில்,
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்;
மாறிப் பிறவார் ஆயினும் இமயத்துக்
கோடுஉயர்ந்த தன்ன தம்இசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல்தவத் தலையே." (214)

'நல்வினை செய்தார் இம்மையில் புகழும் மறுமையில் இன்பமும் வீடுபேறும் பெறுவர்' என்பது கோப்பெருஞ்சோழரின் முடிந்த முடிபு. 'வாழச் செய்த நல்வினை அல்லது, ஆழும் காலைப் புணைபிறிது இல்லை' (புறநானூறு, 367) என்னும் ஔவையின் வாக்கு இங்கே ஒப்புநோக்கத்தக்கது.

சங்க கால அரசப் புலவருள் கோப்பெருஞ்சோழருக்குத் தனியிடம் உண்டு. நறுக்கான நான்கு அகப்பாடல்களையும் முத்தான மூன்று புறப்பாடல்களையும் இயற்றிய அவரது பெயர். உலகில் உயர்ந்த நட்பு உள்ளவரை நிலைத்து நிற்கும்; உணர்ச்சி ஒத்த நட்புக்கு உயிருள்ள இலக்கியமாகக் கோப்பெருஞ்சோழரும் பிசிராந்தையாரும் என்றென்றும் வாழ்ந்து வருவர்.

3

பொருள்வயிற் பிரிவு உணர்த்தும் வாழ்வியல் உண்மைகள்

*“தமிழ் நூல்கள் செல்வத்தை நன்கு ஈட்டித் திரட்டி நல்ல வழியில் தனக்கும் பிறர்க்கும் பயன்படுத்த வேண்டுமென்று கூறுமேயன்றிச் செல்வத்தைத் தேட வேண்டாம் என்று முயற்சியைத் தடுப்பதில்லை.”**

- வ.சுப. மாணிக்கம்

பழந்தமிழ்ச் சான்றோர்களின் பொருளியல் சிந்தனை தனித் தன்மை வாய்ந்தது; உலகியல் தழுவியது; பயன்பாட்டு நோக்கில் அமைந்தது. அவர்கள் இளமையைப் போல, யாக்கையைப் போல பொருளின் நிலையாமைப் பண்பினையும் நன்கு அறிந்திருந்தார்கள்; ஆனால், அதே வேளையில் அவர்கள் பொருளின் அருமையினையும் இன்றியமையாமையினையும் நன்கு உணர்ந்திருந்தார்கள். உணர்ந்த தோடு மட்டுமன்றி, ஒல்லும் வகை எல்லாம் தம் பாடல்களிலே அதனை அழுத்தமாகப் புலப்படுத்தவும் செய்தார்கள். ‘அறம் பொருள் இன்பம்’ என்றாலும் சரி - ‘இன்பம் பொருள் அறம்’ என்றாலும் சரி – பொருளுக்கு உரிய இடம் வரிசை முறையில் மாறவில்லை; அறமும் இன்பமும் தான் தங்கள் இடங்களை மாற்றிக் கொண்டுள்ளன. எங்ஙனம் ஆயினும், அற வழியில், தன் சொந்த முயற்சியில் ஈட்டிய பொருளைக் கொண்டு இன்பம் நுகர்வதே பழந்தமிழ்ச் சான்றோர் வலியுறுத்திய வாழ்வியல் நெறியாக – விழுமியமாக (Value) - இருந்தது.

----

* சங்க நெறி, ப.31.

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின்" (தொல்.பொருள். 1367)

என்னும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் வாக்கு - வாழ்த்து - இங்கே மனங்கொளத் தக்கதாகும். இதில் தெய்வத்துக்கு 'வழிபடு' என்ற அடையும், செல்வத்துக்குப் 'பழிதீர்' என்ற அடையும் வெல்லுஞ் சொற்களாக அமைந்துள்ளன.

தொல்காப்பியரின் பொருள் பற்றிய இந்தச் சிந்தனை மரபின் தொடர்ச்சியைத் திருவள்ளுவர், ஔவையார், பாரதியார் முதலான பின்னைத் தமிழ்க் கவிஞர்களிடமும் காண முடிகின்றது. திருவள்ளுவர் பொருட்பாலில் 'பொருள் செயல்வகை' (76) என ஓர் அதிகாரமே படைத்துள்ளார்; அவர் இவ்வதிகாரத்தை 'அரண்' (75), 'படை மாட்சி' (77) என்னும் அதிகாரங்களுக்கு இடையே வைத்திருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது. எதிரியின் செருக்கினை அறுக்கும் கருவி அதுபோல் வேறு இல்லை ஆதலால், 'செய்க பொருளை' (759) என்பது வள்ளுவர் நாட்டு மக்களுக்கு விடுக்கும் கட்டளை; வாழ்வியல் பாடம்

"அறன்ஈனும் இன்பம் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" (754)

என்னும் திருக்குறள் சிந்தனை, தொல்காப்பியத்தை அடியொற்றி எழுந்ததாகும்.

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதி நூல்களைப் படைத்துத் தமிழ் இலக்கிய உலகில் நிலையான இடம்பெற்ற ஔவைப் பெருமாட்டியார், 'பொருள்தனைப் போற்றி வாழ்' (85) என அண்மைக் காலத்திற்கும் பொருந்தி வரக் கூடிய வாழ்வியல் நெறியை அறிவுறுத்துவார்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை உலகின் தலை மகனான பாரதி தமது சுயசரிதையில்,

"பொருளி லார்க்குஇலை இவ்வுலகு என்றநம்
புலவர் தம்மொழி பொய்ம்மொழி யன்றுகாண்.
பொருளி லார்க்குஇனம் இல்லை, துணையிலை,
பொழுதெ லாம்இடர் வெள்ளம்வந்து எற்றுமால்.
பொருளி லார்பொருள் செய்தல் முதற்கடன்"

(பாரதி பாடல்கள்: ஆய்வுப் பதிப்பு,பக்.187-188)

எனப் பாடுவார்; மேலும் அவர்,

"பணத்தினைப் பெருக்கு" (ப.329)

எனப் 'புதிய ஆத்திசூடி'யும் படைப்பார். 'கனக்கும் செல்வம்' - 'நிறை செல்வம்' பெற்று நூறு ஆண்டு வாழ வேண்டும் என்று அவர் கனவு கண்டார்.

இங்ஙனம் தமிழ்ச் சிந்தனை மரபு காலங்காலமாக - வழிவழியாக - செல்வம் நிலையாமையைப் பற்றி மட்டும் பாடவில்லை; மாறாக, செல்வத்தின் நிலையாமைப் பண்பினை உணர்ந்து, செல்வத்தைத் தீதில்லாத, பழிவராத தன்முயற்சியில் ஈட்டுமாறும், அதை வைத்து இன்பம் நுகர்ந்து மண்ணில் நல்ல வண்ணம் வாழுமாறும் வலியுறுத்தி வந்துள்ளது.

குறுந்தொகையில் பதிவாகியுள்ள பொருளியல் சிந்தனைகள்

'உலகத்தில் வாழும் எல்லா உயிர்களும் இன்பத்தை விரும்புகின்றன; இன்பத்தை நுகர்வதற்குப் பொருள் தேவை; அப் பொருள் அற வழியில் ஈட்டப் பெற்றதாக இருத்தல் வேண்டும்' என்னும் நோக்கில் 'இன்பம் பொருள் அறம்' என்ற வரிசை முறையில் முப்பொருளையும் கையாண்டார் தொல்காப்பியர்.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"

(தொல்.பொருள். 1038)

என்பது தொல்காப்பியக் களவியல் நூற்பா.

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்" (28)

என்னும் புறநானூற்றுச் சிந்தனையில் 'அறம் பொருள் இன்பம்' என்ற வரிசை முறை இடம்பெற்றிருக்கக் காணலாம்.

சங்கத் தமிழில் 'இல்லோர்' என்ற சொல், பொருள் இல்லாத வரையே குறித்தது. பொருள் இன்மையையே 'இன்மை' என்றும், பொருள் இல்லோரையே 'இல்லோர்' என்றும் வழங்குதல் சங்க இலக்கிய மரபு ஆகும். அல்ல குறிப்பட்டு மீளும் ஒரு தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாகப் பரணர் பாடிய பாடல் ஒன்று குறுந்தொகையில் உள்ளது. அத் தலைமகன்,

"இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு
அரிதுவேட்ட னையால் நெஞ்சே!" (120)

எனத் தன் நெஞ்சை நோக்கிக் கூறுகிறான். 'பொருள் இல்லாத வறியவன் இன்பத்தை விரும்பினாற் போல, பெறுதற்கு அரிய ஒன்றை நீ விரும்பினை' எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறும் கூற்றில், இன்பம் நுகர்வதற்குப் பொருள் எவ்வளவு இன்றியமையாதது என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

பிறிதொரு குறுந்தொகைத் தலைவன் பொருள் தேட வேண்டும் என்று துணிந்த தன் நெஞ்சை நோக்கி,

"'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்' எனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி; அவ்வினைக்கு
அம்மா அரிவையும் வருமோ?
எம்மை உய்த்தியோ உரைத்திசின் நெஞ்சே!" (63)

என்று கூறுகின்றான்.

'இரவலர்க்குக் கொடுத்தலும் இன்பங்களை அனுபவித்தலும் பொருள் இல்லாத வறியவர்க்கு இல்லை' என்று கருதிய தலைவனின் நெஞ்சம், வேற்று நாட்டுக்குச் சென்று பொருள் தேட வேண்டும் என்று துணிகின்றது; இச் செயலுக்குத் தன் ஆருயிர்த் தலைவியைப் பிரிந்து

செல்ல வேண்டும் என்பதை உணரும் போது தலைவனின் நெஞ்சம் மயங்குகின்றது; கலங்குகின்றது; செலவழுங்குகின்றது.

'ஈதல் ஆகிய அறமும், துய்த்தல் ஆகிய இன்பமும் பொருளால் ஆகும்' என்பதைச் சங்கச் சான்றோர் நன்கு உணர்ந்திருந்தனர். 'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்' என உகாய்க்குடிகிழார் குறுந்தொகையில் சுருக்கமாக முன்மொழிந்த கருத்தினையே, 'வழுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவணது எய்த இருதலையும் எய்தும்' (114) என்று நாலடியார் வழிமொழிந்து பேசுகின்றது.

குறுந்தொகை 174-ஆம் பாடல் 'பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது' என்னும் துறையில் அமைந்தது; வெண்பூதி என்னும் புலவர் பாடியது. இப் பாடலில் பொருளைப் பற்றிய மாறுபட்ட– பயன்பாட்டுப் பார்வையில் அமைந்த – ஒரு சிந்தனை இடம் பெற்றுள்ளது. 'தோழி! கடத்தற்கு அரிய வழிகள் என்று கருதாமல் நம்மைப் பிரிந்து, பொருளைத் தேடும் பொருட்டு, நம் தலைவர் கொடிய பாலை வழியில் செல்வார் என்றால், நிச்சயமாக ஒன்று தெளிவாகின்றது. இந்த உலகத்தில் உறுதியாகப் பொருள் ஒன்றே – செல்வம் ஒன்றே– உறுதிப் பொருள் ஆவது; அருள் என்பது தன்னை ஏற்றுக் கொள்வார் யாரும் இல்லாதது' எனத் தலைவன் கொடிய பாலை வழியில் பொருள்வயிற் பிரியக் கருதி இருப்பதை அறிந்த தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

"... ... ... நம்துறந்து
பொருள்வயின் பிரிவார் ஆயின்இவ் வுலகத்துப்
பொருளே மன்ற பொருளே;
அருளே மன்ற ஆரும்இல் லதுவே' (174)

'இவ்வுலகத்துப் பொருளே மன்ற பொருளே'. ஏகாரங்கள் இரண்டனுள் முன்னது பிரிநிலை ஏகாரம்; பின்னது தேற்றம். சங்க இலக்கியத்துள் பொருளின் முதன்மை அழுத்தமாக உணர்த்தப்பட்டுள்ள இடம் இது! இதனைக் கருத்தில் கொண்டு வள்ளுவரும் 'அருளுடைமை' அதிகாரத்தில், 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' (247) எனப் பொருளின் இன்றியமையாமையினை அழுத்தமாகப் புலப்படுத்தி யுள்ளார்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ தம் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் பண்டைத் தமிழர் தம் வாழ்வில் பின்பற்றி வந்த பொருள் சார்ந்த ஓர் இன்றியமையாத விழுமியத்தினை (Value) அழகுறப் பதிவு செய்துள்ளார்.

"உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு." (283)

தாமாக, தம் முயற்சியின் பயனால் ஈட்டிய பொருள் இல்லாமல், முந்தையோர் தேடி வைத்த பொருளின் பயனைத் துய்த்து வாழ்க்கை நடத்தி வருவோரை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்ல பழந்தமிழ்ச் சமுதாயம்; அவர்களது வாழ்க்கை இரத்தலைக் காட்டினும் இழிவுடையதாகக் கருதப்பெற்றது. "தம் முயற்சி ஒன்று இன்றியே பெற்ற பொருளால் வாழ்தலினும், இரத்தலாகிய சிறுமுயற்சியேனும் செய்து பொருள் பெற்று வாழும் இரவு உயர்ந்ததாயிற்று" (குறுந்தொகை மூலமும் உரையும், ப.521) என்னும் உ.வே.சாமிநாதையரின் உரை விளக்கம் இங்கே நினைவுகூரத் தக்கதாகும்.

பாலைக் கலி தரும் பொருளியல் சிந்தனைகள்

"நாளது சின்மையும் இளமையது அருமையும்
தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்
அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்"

என்பது தொல்காப்பிய அகத்திணையியலில் இடம்பெற்றுள்ள நூற்பாவின் ஒரு பகுதி (தொல்.பொருள்.987). தலைவன் தனது பலவகைப்பட்ட பிரிவுகளின போது நிகழ்த்தும் கூற்றுக்களைத் தொகுத்துக் கூறும் நூற்பா இது. "வாழ்நாள் சிறிது, இளமை அரிது (சென்றால் திரும்பாது). முயற்சி உயர்வு; குல மேம்பாடு அடைதல் சிறந்தது. வறுமை இளிது (தாழ்வு); செல்வம் உடைமை உயர்வு. அன்பு பெரிது; பிரிவு துயர் மிகுந்தது. இவ்வாறு ஒன்றுடன் ஒன்று ஒவ்வாத, இரண்டுமே தேவையென இரு பக்கமும் இழுக்கின்ற நிலையில் பொருள் தேட ஊக்குகின்ற

ஊழினை நினைந்து பேசுவான் தலைவன்'' (தொல்காப்பியம்: மூலமும் கருத்துரையும், ப.304) என்பது பேராசிரியர் தமிழண்ணல் இவ்வடிகளுக்கு வரையும் எளிய விளக்கம் ஆகும்.

தொல்காப்பியத்தின் இந்த அகத்திணையியல் நூற்பாவின் ஒளியில் பெருங்கடுங்கோவின் பாலைக் கலிப் பாடல் ஒன்றினை ஆராய்வோம். பொருள் ஈட்டுவதற்காகத் தலைவியைப் பிரியத் திட்டமிடும் ஒரு தலைவன், தோழியிடம், “பொருள் தேடுவோர், மனிதனுக்கு வாழ்நாள் குறைவானது என்றும், இன்ப நுகர்ச்சிக்கு உரிய இளமை நிலையில்லாதது, கிடைத்தற்கு அரியது என்றும், முயற்சி கடினமானது என்றும், மனையறம் பேணும் தகுதியை நினைப்போர் பொருளை விரும்பலாகாது என்றும் எண்ணாமல், வறுமையின் இழிவினை எண்ணி, பொருளின் உயர்வினை உணர்ந்து, மேன்மேலும் பொருள் ஈட்ட வேண்டும் என்றும் - அவர்கள் அன்பு மிகுதியால் தாம் விரும்பியவரைப் பிரிய முடியாது - அகன்று செல்லும் பிரிவின் துயரம் கருதி விரும்பி யவருடன் தங்கி விடக் கூடாது' என்றும் கூறுகிறான். அந்நிலையில் தோழி, பொருளின் இயல்புகளைத் தலைவன் மனங்கொள்ளுமாறு எடுத்துக் கூறி, அவன் பிரிவைத் தவிர்க்கச் செய்கிறாள்; தலைவனின் பயணத்தைத் தள்ளிப் போட வைக்கிறாள்.

“ஐய! நீ பொருள் தேடும் ஆசையால் உந்தப்பட்டுத் தலைவியைப் பிரிந்து வாழ எண்ணாதே! நீ தலைவியின் தோளில் அன்போடு எழுதிய தொய்யிலையும், நீ தழுவுவதால் அவள் மார்பில் பரவிய தேமலையும் நினைத்துப் பார்.

நீ பொருள் தேட எண்ணித் தலைவியைப் பிரிகிறாய். நீ உடனே பொருளை அள்ளிக் கொண்டு வருவதற்கு அது ஓர் இடத்தில் ஆயத்தமாகக் குவிந்து கிடக்காது. அவரவர் நிலைக்குத் தக்கவாறே கிடைக்கும்; சில நாள் தங்கி இருந்தே அதைச் சேர்க்க வேண்டும். பொருளை முயன்று சேர்க்கப் பிரிந்து போகாமல் இருந்தவர்கள் எல்லோரும் உண்ணாமல் பட்டினி கிடப்பதும் இல்லை. இளமையும் காதல் அன்பும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர்களுக்கு, செல்வம் வாழ்க்கைத் துணையிலும் மேலாக விரும்பக் கூடிய தகுதி படைத்தது

அன்று. உள்ள நாள் வரையில் ஒரு கையால் ஒருவர் மற்றவரைத் தழுவிக் கொண்டு, மற்றொரு கையால் ஓர் ஆடையை இரண்டாகப் பகுத்து உடுத்திக் கொள்ளும் வறிய வாழ்க்கையை உடையவரே யானாலும், வாழ்நாளின் இறுதி மூச்சு வரை இணை பிரியாமல் சேர்ந்து வாழும் வாழ்க்கையே உண்மையான வாழ்க்கையாகும். கழிந்த இளமை திரும்பக் கிடைப்பது என்பது அரிதினும் அரிது." தோழியின் பொருள் பொதிந்த இக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட பாலைக்கலிப் பாடல் வருமாறு:

"அரும்பொருள் வேட்கையின் உள்ளம் துரப்பப்
பிரிந்துறை சூழாதி ஐய; விரும்பி நீ
என்தோள் எழுதிய தொய்யிலும், யாழநின்
மைந்துஉடை மார்பில் சுணங்கும் நினைத்துகாண்;
சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது;
ஒழிந்தவர் எல்லாரும் உண்ணாதும் செல்லார்;
இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைதக்கது உண்டோ? உளநாள்
ஒரோஒகை தம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன்கூறு ஆடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை; அரிதுஅரோ
சென்ற இளமை தரற்கு." *(பாலைக் கலி, 18)*

வாழ்வில் உண்மையான இன்பம் என்பது, ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதிலேயே உள்ளது. எத்தனை இடர்கள் அணிவகுத்து வந்து தாக்கினாலும், ஓர் ஆணும் பெண்ணும் ஒருவருக்கு ஒருவர் துணையாய் இருந்து, ஒன்றுசேர்ந்து வாழும் வாழ்வே மனத்திற்கு ஆறுதல் தருவதாக இருக்கும். ஆண், பெண் இருவரும் பிரிந்து தனித்தனியே வாழும் வாழ்வில், எத்தனைச் செல்வங்கள் குவிந்து காணப்பட்டாலும், உள்ளத்து உணர்வு அளவில், வறுமையே தட்டும்; இருவர் இடையே ஆழ்ந்த சோகமே கவிந்து நிற்கும். பொருளின் இயல்பும், வாழ்க்கைத் துணையோடு என்றும் பிரியாமல் இணைந்து வாழ்வதில் கிட்டும் இன்பமும் இப் பாலைக் கலிப் பாட்டில் பயில்வார் நெஞ்சை அள்ளும் விதத்தில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

பெருங்கடுங்கோ படைத்துள்ள பிறிதொரு பாலைக் கலிப் பாடலும் இங்கே மனங்கொளத்தக்கதாகும். 'தலைமகனால் பிரிவுணர்த்தப் பட்ட தோழி... அவன் செலவு அழுங்கக் கூறியது' என்பது இப் பாடலின் துறைக் குறிப்பு ஆகும். முன்பை விடச் சிறப்பாகத் தலைவியின் நலத்தைப் பாராட்டிய தலைமகனை நோக்கித் தோழி கேள்விக் கணைகளை ஒன்றன் பின் ஒன்றாகத் தொடுக்கிறாள்.

"பெரும! முன்னை விட மிகுதியாகத் தலைவியின் நலங்களைப் பாராட்டினாய்; இனிய சொற்களை வாயால் கூறினாய். ஆனால், முடிவில் துன்பம் தரும் செயலைச் செய்கின்றாய்; தலைவியைப் பிரியவும் திட்டமிட்டுள்ளாய். உண்மையில் தலைவியின் மீது உனக்கு ஆழ்ந்த அன்பு இல்லை என்பது இப்பொழுதுதான் தெரிந்தது.

உன் அறிவு மயங்கிய நிலையில், 'செல்வம் தவிர, வேறு பொருள் இல்லை' என்று எண்ணி அன்பை மறந்தாயோ?

'பொருள் இல்லாதாரை அன்புடையாரும் மதியார்' என்று அயலார் கூறுவதை அப்படியே நம்பினாயோ? அறம் தவறி ஈட்டிய பொருள், இப் பிறப்பிலும் மறுபிறப்பிலும் பகை என்பதை நீ அறியாயோ? நீ பாடுபட்டுச் சேர்க்க நினைக்கும் பொருளின் இயல்பு இத்தகையது. எனவே, தலைவியோடு சேர்ந்து வாழ்வதையும் பொருளாகக் கருதுவாயாக. தலைவியோடு கூடி வாழும் வாழ்க்கையில், பிரிவை உண்டாக்கும் பொருளை நீ விரும்பாது இருப்பின், அதுவே பொருள். அதுவே நீ செய்வதற்கு உரிய செயல்.'

"பலபல கட்டுரை பண்டையின் பாராட்டி
இனிய சொல்லி, இன்னாங்குப் பெயர்ப்பது
இனிஅறிந் தேன்அது துனிஆ குதலே;

'பொருள் அல்லால் பொருளும் உண்டோ' என, யாழநின்
மருளிகொள் மடநோக்கம் மயக்கப்பட்டு அயர்த்தாயோ?

'காதலர் எவன்செய்ய பொருளில்லா தார்க்கு' என
ஏதிலார் கூறும்சொல் பொருளாக மதித்தாயோ?

அதனால்,

எம்மையும் பொருளாக மதித்தீத்தை; நம்முள்நாம்
கவவுக்கை விடப்பெறும் பொருள்திறத்து
அவவுக்கை விடுதல்; அதுமனும் பொருளே."

(பாலைக் கலி, 14)

இப்பாடலில், 'பொருள்' என்னும் சொல் மூவகைப் பொருளில் ஆளப்பட்டிருத்தல் பெரிதும் இன்பம் பயப்பதாகும். 'பொருள் அல்லால் பொருளும் உண்டோ?', 'ஏதிலார் கூறும் சொல் பொருளாக மதித்தாயோ?', 'அதுமனும் பொருளே!' என வரும் தொடர்கள் இவ்வகையில் மனங்கொளத்தக்கனவாகும். 'பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும், பொருள் அல்லது இல்லை பொருள்' (751) என்னும் வள்ளுவரின் கருத்துக்கு முன்னோடி பெருங்கடுங்கோ என்பது இதனால் விளங்கும்.

சங்கச் சான்றோரின் நெஞ்சை அள்ளிய துறை

ஓதற் பிரிவு, பகைவயிற் பிரிவு, தூதிற் பிரிவு, நாடு காவற் பிரிவு, பரத்தையிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு என அகத்திணை சுட்டும் பிரிவு வகைகள் பலவாகும். இப் பிரிவுகள் யாவற்றிலும் பொருள்வயிற் பிரிவே பரந்தது; மக்கள் எல்லோருக்கும் உரியது; களவிற்கும் கற்பிற்கும் பொதுவானது. மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் தம் 'தமிழ்க் காத'லில் குறிப்பிடுவது போல், "பொருள்வயிற் பிரிவு என்னும் இத் துறை சங்கப் புலவர்களின் நெஞ்சை அள்ளிய துறைகளுள் ஒன்று. இன்பமும் கடமையும் போராடும் இடமாக, நல்ல உணர்ச்சிகள் மோதிக் கொள்ளும் இடமாக இத்துறை அமைந்திருப்பதைக் காணலாம்" (ப.79).

4

குறுந்தொகைப் பதிப்பு வரலாறு: ஒரு பறவைப் பார்வை

*"... குறுகிய அடிகளையுடைய இந்நூல் குறுந்தொகை எனப்படுவதாயிற்று. அளவில் இது குறுந்-தொகையாயினும், சுவையில் நற்றொகையாம்." **

- அ. சிதம்பரநாதன்

எட்டுத் தொகை நூல்களின் வரிசையில் முதலில் தொகுக்கப் பெற்றது - இரண்டாவதாகச் சுட்டப்படுவது – குறுந்தொகை. எட்டுத் தொகை நூல்களின் பெயர்களைத் தொகுத்துக் கூறும் பழைய வெண்பா, 'நல்ல குறுந்தொகை' எனச் சிறப்பு அடைமொழி நல்கி இந்நூலைப் பாராட்டுகின்றது. இளம்பூரணர் முதலான பண்டைய உரையாசிரியர்கள் தத்தம் உரைகளில் ஏனைய சங்கத் தொகை நூல்களைக் காட்டிலும் குறுந்தொகையில் இருந்தே மிகுதியான பாடல்களை மேற்கோள் காட்டியுள்ளனர். "இந்நூலுள் இப்பொழுது தெரிந்த வரையில் 165 செய்யுட்களே பிற நூல் உரைகளில் மேற்கோளாகக் காட்டப் பெறாதவை" (முகவுரை, குறுந்தொகை மூலமும் உரையும், ப.xiii) என்பர் 'பதிப்பு வேந்தர்' உ.வே.சாமிநாதையர்.

பழைய உரைகள்

குறுந்தொகையில் 380 பாடல்களுக்குப் பேராசிரியர் தமது நுண்மாண் நுழைபுலம் விளங்க உரை வரைந்திருந்தார் என்று தெரிய வருகின்றது. உச்சி மேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் பேராசிரியர் உரை எழுதாதுவிட்ட இறுதி இருபது பாடல்களுக்கு உரை எழுதி

----

* தமிழ் காட்டும் உலகு, ப.109.

அப் பணியை முற்றுப்பெறச் செய்தார் என்பர். எனினும் இவ்விரு உரையாசிரியர்களாலும் எழுதப் பெற்ற பழைய உரைகள் இன்று நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. இது தமிழ் கூறு நல்லுலகிற்கு நேர்ந்த ஒரு பேரிழப்பே ஆகும்.

1. முதல் உரை நூல்

கி.பி.1915-ஆம் ஆண்டில் குறுந்தொகைக்கு உரை எழுதி வெளியிட்ட பெருமைக்கு உரியவர் திருக்கண்ணபுரத் தலத்தான் திருமாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கன் ஆவார். இதுவே குறுந் தொகைக்கு நூல் வடிவில் வெளிவந்த முதல் உரை நூல் ஆகும். சௌரிப் பெருமாள் அரங்கனுக்கு ஆசிரியராய் அமைந்தவர் சோழ வந்தான் அரசன் சண்முகனார் ஆவார். அரங்கனார் தமக்கு அருந்தமிழ் கற்பித்துப் பேருதவி புரிந்த சோழவந்தான் கிண்ணிமடம் தவத்திரு சிவப்பிரகாசம் சுவாமிகளுக்கு உரை நூலைக் காணிக்கையாக்கி யுள்ளார்.

மேலும் அவர், 'குறுந்தொகைப் பதிப்பிற்கு உறுதுணையாக அருந்தொகை உதவிய பெருந்தகைச் செல்வர்' என ஒரு பெயர்ப் பட்டியலையும் நூலின் உள்ளே தந்து தம் நன்றியறிதலைப் புலப்படுத்தியுள்ளார். சௌரிப் பெருமாள் அரங்கனார் வாணியம்பாடி பள்ளி ஒன்றில் பணியாற்றிய தமிழாசிரியர் என்பது இங்கே மனங்கொளத்தக்க செய்தி ஆகும்.

ஒவ்வொரு பாடலுக்கும் திணை, உள்ளுறை, இறைச்சி, மேற்கோள், இலக்கணக் குறிப்பு, அருஞ்சொற்பொருள், மெய்ப்பாடு, பயன் ஆகியன தந்து, சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதே தி.சௌ.அரங்கனாரின் உரை நெறி ஆகும். குறுந்தொகைப் பாடல் களுக்கு முதன்முதலாகத் திணை வகுத்துத் தந்து, உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி உரை எழுதிய பெருமை அரங்கனாரையே சாரும். தி.சௌ. அரங்கனாரின் குறுந்தொகை உரை சென்னை முல்லை நிலையத்தின் சார்பில் 2000-ஆம் ஆண்டில் மறுபதிப்பாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2. இராமரத்தின ஐயர் உரை

வழக்கறிஞர் டி.என்.சேஷாசல ஐயர் தாம் நடத்தி வந்த ‘கலா நிலையம்’ வார இதழில் குறுந்தொகையை உரையுடன் வெளியிட்டார். 1930-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை வாராவாரம் தொடராக வெளிவந்த அவ்வுரையை எழுதியவர் இராமரத்தின ஐயர் ஆவார். நீண்ட காலமாக நூல் வடிவில் வெளிவராமல் இருந்த அவ்வுரை, 2002-ஆம் ஆண்டில் சென்னை கங்கை புத்தக நிலையத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளது. பாடலின் திணையைச் சுட்டி, சுருங்கிய பொழிப்புரையைத் தந்து, அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறி, இறைச்சிப் பொருளைப் புலப்படுத்திச் செல்லும் போக்கினைத் தம் உரைநெறியாகக் கையாண்டுள்ளார் இராம இரத்தின ஐயர். மேலும், பிணர் – சருச்சரை, வழுவழுப்பாயிராமல் கரடுமுரடாயிருத்தல் (being of very rough, uneven surface), ஏதிலாளர் (அந்நியர், அயலார், உறவிலார்; (stranger) என்றாற் போல் (குறுந்தொகை மூலமும் உரையும், பக்.15 & 209) ஆங்காங்கே ஆங்கிலத்தில் இணையான சொற்களைக் குறித்துச் செல்லும் போக்கினையும் அவரது உரையில் சிறப்பாகக் காணமுடிகின்றது.

3. உ.வே.சாமிநாதையர் பதிப்பு

உ.வே.சாமிநாதையரின் ‘குறுந்தொகை மூலமும் உரையும்’ 1937-ஆம் ஆண்டில் வெளிவந்தது; சௌரிப்பெருமாள் அரங்கன் உரை வெளிவந்து 22 ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்வுரை வெளிவந்தது. இந்நூலைப் பதிப்பிக்கும்போது உ.வே.சா.வுக்கு வயது 82 என்பது குறிப்பிடத்தக்கது. தியாகராச விலாச வெளியீடாக முதற்பதிப்பினைக் கண்ட இந்நூலின் ஐந்தாம் பதிப்பு 2000-ஆம் ஆண்டில் வெளி வந்துள்ளது. ‘மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் பல பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து நூதனமாக எழுதிய உரை ஆராய்ச்சி முதலியவற்றுடன் கூடியது’ என்னும் சிறப்புக் குறிப்பு நூலின் முகப்புப் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது. கூற்று. கூற்று விளக்கம், மூலம், ஆசிரியர் பெயர், பிரதிபேதம், பழைய கருத்து, பதவுரை, முடிபு, கருத்து, விசேட உரை,

மேற்கோளாட்சி, ஒப்புமைப் பகுதி என்னும் பன்னிரண்டு கூறுகளை உள்ளடக்கியதாக உ.வே.சா.வின் உரை நெறி காணப்படுகிறது. உ.வே.சா. தம் குறுந்தொகைப் பதிப்பில் 'நூலாராய்ச்சி' என்னும் தலைப்பில் 88 பக்க அளவில் எழுதியிருக்கும் பகுதி, குறுந்தொகை ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன் நல்குவதாகும். மேலும், 'பாடினோர் வரலாறு', நூலின் பிற்பகுதியில் இடம்பெற்றுள்ள செய்யுள் முதற்குறிப்பு அகராதி, அரும்பத முதலியவற்றின் அகராதி நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பு அகராதி ஆகியவற்றை அரிதின் முயன்று தொகுத்துத் தந்துள்ளார் உ.வே.சா.

'நிலத்தினும் பெரிதே' எனத் தொடங்கும் தேவகுலத்தாரின் குறுந்தொகைப் பாடலுக்கு எழுதிய விசேடவுரையில் உ.வே.சா., "குறிஞ்சி: இது பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை மலரும் என்றும், அம்மலரில் இருந்து ஈக்களால் எடுக்கப்படும் தேன் மிகக் சுவையை உடையது என்றும், நீலகிரியில் உள்ள தொதுவர் என்னும் ஒரு வகைச் சாதியார் இது மலரும் காலத்தைக் கொண்டே தம்முடைய பிராயத்தைக் கணக்கிடுவர் என்றும் சொல்லுவர்" (குறுந்தொகை மூலமும் உரையும், ப.12) எனக் குறிப்பிட்டிருப்பது அவரது பரந்து பட்ட அறிவுத் திறத்தினைப் பறைசாற்றுவதாகும்; மேலும், ஒப்புமைப் பகுதியில் நிலம் வான் கடல் என்ற மூன்றும் பெருமைக்கு எல்லையாகக் கூறப்படுவதற்கு மூன்று குறட்பாக்களைச் (102, 103, 272) சுட்டிக்காட்டி இருப்பது அவரது ஆழ்ந்த இலக்கியப் புலமையை எடுத்துக் காட்டுவதாகும்.

"தமிழ் அன்னையின் திருவடித் துணைகளில் இப் பதிப்பும் ஒரு மணமற்ற சிறு மலராகவேனும் கிடந்து நிலவும் என்பது எனது கருத்து" (ப.xxi) என முதற்பதிப்பின் முகவுரையில் தம் அடக்கமும் பணிவும் நனி விளங்க எழுதியுள்ளார் உ.வே.சா.

4. ரா.இராகவையங்காரின் 'குறுந்தொகை விளக்கம்'

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1946-ஆம் ஆண்டில் மகா வித்துவான் ரா.இராகவையங்கார் குறுந்தொகையில் கடவுள் வாழ்த்து உள்ளிட்ட 112 பாடல்களுக்கு எழுதிய உரையினைக் 'குறுந்தொகை

விளக்கம்' என்னும் பெயரில் வெளியிட்டுள்ளது. இந் நூலின் நான்காம் பதிப்பு 1983-ஆம் ஆண்டில் வெளிவந்தது. பேராசிரியர் அ.சிதம்பரநாதச் செட்டியார் தம் முகவுரையில் இராகவையங்காரின் உரையில் காணலாகும் பல்வேறு நயங்களை எடுத்துக்காட்டியுள்ளார்; அதே வேளையில், இராகவையங்கார் கொண்டுள்ள பாடங்கள் சில இடங்களில் பொருத்தம் இல்லாமல் இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ்கூறு நல்லுலகின் தவப்பயன் காரணமாக மகாவித்துவான் ரா.இராகவையங்காரின் 'குறுந்தொகை விளக்கம்' முழுமையான வடிவில் (நானூறு பாடல்களுக்கும்) அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக 1993-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடலின் முகப்பில் புலவரின் பெயரைச் சுட்டி, அதன் கீழே பாடலைத் தந்து, தொடர்ந்து விளக்கம் எழுதிச் செல்வது இராகவை யங்காரின் உரைப் பண்பாகும். முன்னைய குறுந்தொகைப் பதிப்புக்களில் 'செங்களம் படக்கொன்று' எனத் தொடங்கும் முதற்பாடலை இயற்றிய புலவரின் பெயர் 'திப்புத்தோளார்' எனவும், 'திட்புத் தோளார்' (திண்மையை உடைய தோளினர்) எனவும் காணப்பட, இராகவையங்கார் புலவரின் பெயரைத் 'தீப்புத்தோளார்' (அங்கியங் கடவுள்) எனத் திருத்தி வழங்கியிருப்பது அவரது உரைத் திறத்திற்கு ஒரு பதச்சோறு. 'சேது சமத்தான மகாவித்துவான் பாஷா கவிசேகரர் ரா.இராகவையங்கார் இயற்றிய குறுந்தொகை விளக்கம் முற்றும்' என்பது உரையின் இறுதியில் காணப்பெறும் சிறப்புக் குறிப்பு ஆகும்.

5. பொ.வே. சோமசுந்தரனார் உரை

பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் எழுதிய உரையுடன் கூடிய குறுந்தொகைப் பதிப்பு 1955-ஆம் ஆண்டில் வெளி வந்துள்ளது. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் இதனை வெளியிட்டுள்ளனர். பெரும்பான்மை யும் உ.வே.சாமிநாதையரின் பதிப்பினை அடியொற்றி இப் பதிப்பு விளங்குகின்றது. 'அணிந்துரை' என்னும் பெயரில் 28 பக்க அளவில் இப் பதிப்பில் இடம்பெற்றுள்ள பகுதி நெற்றித் திலகம் போல் அமைந்து குறுந்தொகையின் மாண்பினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

6. சாமி.சிதம்பரனாரின் 'குறுந்தொகைப் பெருஞ்செல்வம்'

தமிழறிஞர் சாமி.சிதம்பரனார் சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் 'தமிழ் முரசு' நாளிதழில் 'குறுந்தொகைப் பெருஞ்செல்வம்' என்னும் தலைப்பில் 10.04.1955 முதல் 20.07.1958 வரை குறுந்தொகைப் பாடல் களின் அடிப்படையில் தொடர் கட்டுரைகள் எழுதி வந்தார். இக் கட்டுரைகள் அவரது மறைவுக்குப் பின்னர் அவரது துணைவியார் திருமதி சிவகாமி சிதம்பரனாரின் அருமுயற்சியால் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை நல்கிய நிதியுதவியால் 1983-ஆம் ஆண்டில் 'குறுந்தொகைப் பெருஞ்செல்வம்' என்னும் பெயரில் நூல் வடிவம் பெற்றன. சிலம்பொலி சு.செல்லப்பன் நூலுக்கு எழுதிய அணிந்துரையில், "தமிழறிந்தார் அனைவருமே கற்றுணர்தற்கேற்ற வகையில் சாமி.சிதம்பரனாரின் உரை எளிமையானதாகவும் தெளிவானதாகவும் அமைந்துள்ளது" (p.xlix) என்று சாமி. சிதம்பரனாரின் உரைப் போக்கிற்குப் புகழாரம் சூட்டியுள்ளார். பதிற்றுப் பத்து போல குறுந் தொகைப் பாடல்களின் உயிர்ப்பான கருத்துப் புலனாகும் வண்ணம் சிறுசிறு தொடர்களை முகப்பில் தலைப்புக்களாகத் தந்திருப்பது இந்நூலின் தனிச் சிறப்பாகும். சான்றாக, ஔவையாரின் 'அகவன் மகளே! அகவன் மகளே!' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலுக்கு 'இன்னும் பாடுக! இனிதே பாடுக! என்னும் அழகிய தலைப்பினைச் சூட்டியுள்ளார் சாமி.சிதம்பரனார்.

சாமி. சிதம்பரனாரின் உரைப் போக்கிற்கு ஓர் எடுத்துக்காட்டு: 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' எனத் தொடங்கும் குறுந் தொகைப் பாடலை 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என நக்கீரர் வாதிட்ட கதைக்கு அடிப்படையாகக் கூறுவர். 'பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா?' என்னும் பாண்டிய மன்னனின் ஐயமே இப்பாடல் எழுந்ததற்கான காரணம் எனவும் குறிப்பிடுவர். சாமி சிதம்பரனார் நக்கீரர் கதையோடு இக் குறுந்தொகைப் பாடலை இணைப்பது பொருத்தமற்றது என்பதைத் தக்க சான்று தந்து நிறுவியுள்ளார் (குறுந்தொகைப் பெருஞ்செல்வம், பக்.9-12). 'ஒருவன் காதல் மிகுதியால், தன் காதலியின் கூந்தலைப் புகழ்ந்து கூறியது

இப்பாடல். இதில் கூந்தலுக்கு இயற்கை மணமா? செயற்கை மணமா? என்ற வழக்கிற்கே இடமில்லை' என்பது அவரது முடிந்த முடிபு.

7. மு.சண்முகம் பிள்ளையின் 'ஆய்வுப் பாடல் நுண்பதிப்பு'

'பழைய உரைகளினுடைய திட்பத்தைப் பாதுகாத்து, இக் காலத்தார் எளிதில் அறியக்கூடிய நடையில் இந்நாளைய புத்துரை அமைதல் வேண்டும்' என்னும் கருத்திற்கு இணங்கத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஓலைச்சுவடித் துறைத் தலைவர் பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளையின் குறுந்தொகைப் பதிப்பு 'குறுந்தொகை மூலமும் உரையும்' (பல்வகை ஆய்வுப் பகுதிகளுடன்) என்னும் தலைப்பில் 1985-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. 'ஆய்வுப் பாடல் நுண்பதிப்பு' என இப்பதிப்பு சுட்டப்பெற்றுள்ளது. 'பாட வேறுபாடு - ஒப்புநோக்கு அட்டவணை' என்னும் பகுதி ஏறத்தாழ இருநூறு பக்க அளவில் அமைந்து பதிப்பாசிரியரின் அரிய உழைப்புத் திறத்தினையும் ஆய்வுப் போக்கினையும் பறைசாற்றி நிற்கின்றது.

"இப் பதிப்புடன் ஐயரவர்கள் பதிப்பினை ஒப்புநோக்கிய போது 234 இடங்களில் புதிய பாடங்களைப் பதிப்பாசிரியர் கொண்டிருப்பது தெரிய வந்தது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வழி வெளிவரும் இப் பதிப்பு டாக்டர் ஐயரவர்கள் பதிப்பிலிருந்து 260 இடங்களில் வேறுபட்டுப் புதிய பாடங்களைத் தருகின்றது. சங்க இலக்கியப் பதிப்பிற்கும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பிற்கும் 225 இடங்கள் வேறுபடுகின்றன. டாக்டர் ஐயர் அவர்கள் பதிப்பிலும் சங்க இலக்கியப் பதிப்பிலும் இடம்பெறாத 131 புதிய பாடங்கள் இப் பதிப்பில் இடம்பெற்றுள்ளன. இப் பாடங்களைத் தேர்ந்தமைக்கான ஏதுக்களை உரிய இடங்களில் விளக்கியிருத்தல் காணலாம்" (பக்.27-28) என்னும் முகவுரைக் குறிப்பு இப் பதிப்பின் தனித்தன்மையை உணர்த்துவதாகும்.

'குறுந்தொகை - சில புள்ளி விவரங்கள்' என்னும் தலைப்பில் இப் பதிப்பில் இடம்பெற்றுள்ள ஐந்தாம் இணைப்பு ஆய்வு நோக்கில் இன்றியமையாததாகும். "இத் தொகை தொகுக்கப்பட்ட பாடல் வரிசை முறை விளங்கவில்லை. தலைவன், தலைவி, தோழி போன்ற கிளவிக்குரியார் முறையிலோ, குறிஞ்சி, பாலை, முல்லை போன்ற

திணை முறையிலோ, பாடிய புலவர் முறையிலோ, பாடல் அடிவரையறையின் முறையிலோ, கால அடைவிலோ, கூற்றை விளக்கும் துறைகளின் முறையிலோ பிற ஏதுக்களின் முறையிலோ முறைப்படத் தொகுக்கப் பெற்றதாகத் தோன்றவில்லை. இத் தொகுப்பின் முதல் பாடலைக் குறிஞ்சித் திணையில் தோழி தொடங்கி வைக்க, நெய்தல் திணையில் தலைவி முடித்து வைக்கின்றாள்'' (குறுந்தொகை மூலமும் உரையும், ப.64) என அதன் முடிவில் குறுந்தொகைப் பாடல் தொகுப்பு முறை குறித்துத் தரப்பட்டிருக்கும் சிறப்புக் குறிப்பு சிந்தனையைத் தூண்டுவதாகும்.

8. மு.கோவிந்தசாமியின் 'குறுந்தொகை நயவுரை'

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு.கோவிந்தசாமியின் 'குறுந்தொகை நயவுரை' சிதம்பரம் வாசுகி பதிப்பக வெளியீடாக 2000-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. "பாடல் வேறுபாடுகளைக் கண்டு தேர்ந்து உரியதைக் காரணத்துடன் தெளிவு படுத்துகிறது. பாடலில் வரும் உரிப்பொருளுக்கு முதற்பொருளும் கருப்பொருளும் துணையாதலை விளக்கிச் செல்கிறது. குறுந்தொகைப் பாக்களை ஐந்திணையாக வகைப்படுத்தி ஒவ்வொரு திணைக்கீழ் அதற்குரிய பாடலெண்களைத் தந்திருப்பது திணை ஆராய்ச்சிக்கு உறுதுணையாயிருக்கும்'' (ப.356) என இப் பதிப்பின் தனிச்சிறப்புக் களைத் தம் அணிந்துரையில் பட்டியல் இட்டுள்ளார் பேராசிரியர் இரா. சாரங்கபாணி. மேலும் அவர், "நச்சினார்க்கினியர்பால் கொண்ட ஈடுபாட்டால் தம் மகனுக்கு அவர் பெயரைச் சூட்டிய அன்பர் மு.கோ. அவ்வினியரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இந்நயவுரை எழுதியுள்ளார்'' (ப.356) எனக் குறிப்பிடுவது இங்கே நினைவுகூரத் தக்கதாகும்.

9. நியூ செஞ்சுரி புத்தக நிறுவனப் பதிப்பு

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் 1981-ஆம் ஆண்டில் சங்க இலக்கிய மூலத்தை (மர்ரே பதிப்பு) மறுபதிப்புச் செய்து வெளியிட்டது; தொடர்ந்து சங்க இலக்கியங்களுக்கு எளிய முறையில் உரை எழுதி

வெளியிடும் முயற்சியிலும் ஈடுபட்டது. இவ்வகையில் குறுந்தொகைக்கு இரு தொகுதிகளில் உரை எழுதியவர் பேராசிரியர் வி.நாகராசன் ஆவார். இப் பதிப்பு 2004-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. பாடற் பொருள், விளக்கம், சொற்பொருள், மேற்கோள், பொருள் முடிவு என்னும் கூறுகளைத் தன்னகத்தே கொண்டதாக இவ்வுரை நெறி விளங்குகின்றது.

10. கோவிலூர் மடாலயத்தின் 'மக்கள் பதிப்பு'

கோவிலூர் மடாலயம் பழந்தமிழ் இலக்கியங்களை இன்றைய தலைமுறையினரும் புரிந்து கொண்டு இன்பம் அடையவும் வாழ்வில் அவற்றைப் பயன்படுத்தவும் துணைபுரியும் நோக்கில் வெளியிட்டிருப்பது 'சங்க இலக்கிய மக்கள் பதிப்பு வரிசை' ஆகும். இவ் வரிசையில் குறுந்தொகை மக்கள் பதிப்பின் உரையாசிரியராகப் பேராசிரியர் தமிழண்ணல் விளங்குகின்றார். இப் பதிப்பில் சீரமைப்புப் பிறழாது பிரித்த மூல வடிவமும், வாக்கியம் போல் வசன நடையில் எழுதிய கொண்டுகூட்டும், அதை மேலும் விளங்க வைக்கும் தெளிவுரையும் பொருத்தமுறத் தரப்பட்டுள்ளன. தொடர்ந்து, அருஞ்சொற்பொருளும் சிறப்புக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று, செவிலித்தாய் கூற்று, காதற் பரத்தை கூற்று என்றாற் போல் கூற்று அடிப்படையில் பாடல்களுக்குத் தலைப்பிடப் பெற்றிருப்பது இப பதிப்பின் சிறப்புப் பண்பாகும்.

இலண்டன் நகரில் பூமிக்கு அடியில் ஓடும் சுரங்கத் தொடர் வண்டியில் செம்புலப் பெயல் நீராரின் 'யாயும் ஞாயும் யாரா கியரோ' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல், பேறறிஞர் ஏ.கே.இராமனுசனின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் பொறித்து வைக்கப்பட்டிருத்ததையும், அதனை அவ்வாறே படம் எடுத்து 'இந்து' ஆங்கில நாளிதழ் 01.07.2001-இல் வெளியிட்டிருந்ததையும், விக்கிரம் சந்திரா என்பார் 'Red Earth and Pouring Rain' என்னும் தலைப்பில் ஓர் ஆங்கில நாவல் படைத்திருப்பதையும் இப் பதிப்புக்கு எழுதிய முன்னுரையில் பேராசிரியர் தமிழண்ணல் பதிவு செய்துள்ளமை (பக்.20-21) உலகத் தமிழர் அனைவரையும் பெருமிதம் கொள்ளச் செய்வதாகும்.

11. தெளிவுரைப் பதிப்புகள்

இவை தவிர, எளிய தெளிவுரை வடிவில் நான்கு குறுந் தொகைப் பதிப்புகள் வெளிவந்துள்ளன. 1965-ஆம் ஆண்டில் புலியூர்க்கேசிகனின் எளிய தெளிவுரையைக் கொண்ட குறுந்தொகைப் பதிப்பு வெளிவந்தது. இதனுள் பாடலின் உயிர்த் தொடர்கள் தலைப்புக்களாக இடம்பெற்றுள்ளன. இது இலக்கிய ஆர்வலர் யாவரும் எளிதில் படித்துப் பயன் பெறும் வகையில் அமைந்த ஓர் எளிய உரைப் பதிப்பாகும். 1986-இல் இரா.பிரேமாவின் தெளிவுரையுடன் கூடிய குறுந்தொகை மலிவுப் பதிப்பு சென்னை வர்த்தமானன் பதிப்பகத்தின் சார்பில் வெளிவந்தது. 2005-இல் சென்னை திருமகள் நிலையம் புலவர் துரை.இராமசாமியை உரையாசிரியராகக் கொண்டு ‘குறுந்தொகை தெளிவுரைப் பதிப்பு’ ஒன்றனை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

12. குறுந்தொகை மூலப் பதிப்புகள்

பேராசிரியர் கா.நமச்சிவாய முதலியார் குறுந்தொகை மூலப் பதிப்பு ஒன்றினை வெளியிட்டமை பற்றிய தகவல் மட்டும் தெரிய வருகின்றது. ஆயின், இப் பதிப்பு பற்றிய முழு விவரம் உறுதியாகத் தெரியவில்லை.

1933-ஆம் ஆண்டில் சோ.அருணாசல தேசிகர் மூலம் மட்டும் கொண்ட குறுந்தொகைப் பதிப்பினை வெளியிட்டுள்ளார். முந்திய பதிப்புகளை விடவும் இதில் பாடங்களிலே பல திருத்தங்கள் வெளிப்பட்டன.

சைவ சித்தாந்த மகா சமாசம் ‘சங்க இலக்கியம்’ என்னும் பெயரில் எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் அடங்கிய ஒரு தொகை நூலினை 1940-ஆம் ஆண்டில் வெளியிட்டது. பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளையைப் பதிப்பாசிரியராகக் கொண்ட இந்த அடக்க மூலப் பதிப்பு இன்றளவும் அறிஞர் உலகால் பெரிதும் மதிக்கப் பெற்று வருகின்றது. முந்திய பதிப்புகளையும் கிடைத்த சுவடிகளையும் ஆராய்ந்து தக்க பாடங்களைத் தேர்ந்தெடுத்துத் தந்திருப்பது இப் பதிப்பின் தனிச்சிறப்பாகும். இவ்வரிய பதிப்பு சென்னை முல்லை

நிலையத்தின் சார்பில் 2005-இல் மீண்டும் வெளிவந்திருப்பது இலக்கிய ஆர்வலர்களின் நெஞ்சங்களிலே இன்பத் தேனைப் பாய்ச்சுவதாகும்.

மர்ரே எஸ்.ராஜம் 'இலக்கியச் செல்வம்' வரிசையில் குறுந்தொகை மூலப் பதிப்பினை 1952-ஆம் ஆண்டில் வெளியிட்டார். உரையின் துணையின்றியே விளங்கிக் கொள்ளும் வகையில் பாடல்களைச் சந்தி பிரித்துக் கொடுத்திருப்பதும், உரிய இடங்களில் நிறுத்தற் குறியீடுகளைக் கையாண்டிருப்பதும் இப் பதிப்பின் சிறப்புக் கூறுகள் ஆகும். 'பதிப்பு ஆசிரியக் குழுவினரால் பல பிரதிகளை ஒப்புநோக்கி, பரிசோதித்து வெளியிடப் பெற்றது' என்னும் சிறப்புக் குறிப்பு நூலின் முகப்புப் பக்கத்தில் காணப்படுகின்றது. நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் சார்பில் இதன் இரண்டாம் பதிப்பு 1981-இல் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

13. சுஜாதாவின் '401 காதல் கவிதைகள்'

எழுத்தாளர் சுஜாதா '401 காதல் கவிதைகள்' என்னும் தலைப்பில் 2006-இல் குறுந்தொகைக்கு ஓர் உரைநூலை வெளியிட்டார். 'குறுந்தொகை ஓர் எளிய அறிமுகம்' என்னும் குறிப்புடன் உயிர்மைப் பதிப்பகம் இந் நூலை வெளியிட்டது. "ஒவ்வொரு பாடலையும் ஆஸ்பத்திரி சுத்தத்துடன் அணுகாமல் கண்ணீரும் வியர்வையும் பிரிவும் பரிவும் துரோகமும் நட்பும் காதலும் கொண்ட நவ கவிதைகளாகப் பார்க்க வைப்பதே இந்த நூலின் குறிக்கோள். இப்படிப் பார்க்கும் போது இன்று தமிழில் எழுதுப்படும் அத்தனை காதல் கவிதைகளும் குறுந்தொகையிலிருந்து பிறந்தவை என்பது புரியும்" (ப.13) என்னும் முன்னுரைக் குறிப்பு, உரையாசிரியர் என்ற முறையில் சுஜாதாவின் உள்ளக் கருத்தினைப் புலப்படுத்த வல்லதாகும். பதச்சோறாக, 'காலே பரிதப்பினவே' என்ற வெள்ளிவீதியாரின் குறுந்தொகைப் பாடல், சுஜாதாவின் கைவண்ணத்தில் எடுத்திருக்கும் புதுக்கோலத்தினை இங்கே காணலாம்.

"அவர்களை மட்டும் காணவில்லை
கால்கள் நடந்து அலுத்தன,

கண்கள் பார்த்து பார்த்து மயங்கின,
வானத்து நட்சத்திரங்களைவிட
அதிகம் உலகத்தில் மற்றவர்' (ப.36)

சுஜாதாவின் அடிச்சுவட்டில் இரா.சரவணமுத்து குறுந் தொகைக்கு உரை வீச்சாகக் 'குறுந்தொகை நறுமணம்' என்னும் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். "அந்தப் பெருமையான இலக்கியத்தை, இந்த நூற்றாண்டின் பறக்கும் 'றெக்கை' மனிதர்களும் படிக்க, மகிழ ஏதுவாய், தமிழிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்திருக் கிறேன்" (p.vi) என்பது ஆசிரியரின் 'என்னுரை'யில் காணலாகும் சிறப்புக் குறிப்பு ஆகும். சென்னை சாரதா பதிப்பகம் 2006-இல் இந் நூலை வெளியிட்டுள்ளது.

'உவமை என்னும் தவலருங் கூத்தி, பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து, காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி, யாப்பறி புலவர் இதயம், நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிப்பது' போல் குறுந்தொகை எனும் கவின்மிகு காரிகையும் தெளிவுரை, விளக்கவுரை, நயவுரை, நுண்பொருள் உரை, எளிய உரை, மக்கள் உரை, உரை வீச்சு எனப் பல்வேறு உரைக் கோலங்களைப் பொலிவுறப் பூண்டு தமிழ் கூறு நல்லுலகில் பீடுடன் உலா வந்து கொண்டிருக்கின்றது. வேறு எத்தொகை நூலுக்கும் இல்லாத அளவிற்குக் குறுந்தொகைக்கு மட்டும் இத்துணை உரைகள் நூறாண்டுக் காலமாக எழுந்திருப்பதற்கான காரணங்கள் அதன் அழகும் ஆற்றலும் எளிமையும் இனிமையும் அழகும் ஈர்ப்புமே எனலாம். ■

5

தொல்காப்பிய - சங்க இலக்கிய உவமையியல் கோட்பாடு

*"பிற்காலத்து நூல்களில் வரும் உவமைகள் பலவும் சங்கப் பாட்டுகளுக்குக் கடன்பட்டவை எனலாம். சங்க நூல்களில் அந்த உவமைகள் இயல்பாக அமைந்து காணப்படுகின்றன." **

- மு.வரதராசன்

இலக்கியத்திற்கு எழிலும் ஏற்றமும் சேர்க்கும் முதல் அணி உவமை. அது காலத்தால் மிகவும் தொன்மையானது; எனவே அதனைத் 'தாயணி' என்பர் ஆன்றோர். தொல்காப்பியர் 'அணியியல்' எனச் சுட்டாது, 'உவமையியல்' என்னும் பெயரில் ஓர் இயலை வகுத்திருப்பது மனங்கொளத்தக்கது. அவர் உவமையை 'அணி' என்று கொள்ளாது, பொருளுறுப்பாகவே கொள்கிறார். பிற்காலத்தில் அணி இலக்கணக் கோட்பாடு பெருவளர்ச்சி பெற்றுள்ளது. அதற்கு ஏற்பத் தொல்காப்பியரின் கருத்தை விளக்கியும், மேலும் வளர்த்தும் தமிழில் அணிக்கோட்பாடு வளர வழிவகை செய்யாதது ஒரு குறையே ஆகும். பேராசிரியர் மு.வ. 'அணியிலக்கணம்' என்னும் தம் கட்டுரையில், "தமிழ் மொழி வளம் பெறுவதற்கு ஏற்ற வகையில் அணியிலக்கணத்தின் வளர்ச்சி அமையவில்லையே என்பதுதான் வருத்தம் விளைக்கின்றது" (மேற்கோள் : தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, இலக்கியக் கொள்கைகள், பக்.125-126) எனக் குறிப்பிடுவர். தொல்காப்பியர் உவமை எனச் சுட்டுவது, தமிழ் மரபுப்படி எங்ஙனம் அணியிலக்கணமாகக் காலந்தோறும் வளர்ச்சி பெற்றது என்பது விரிவாக ஆராயத் தக்கதாகும்.

----

* தமிழ் இலக்கிய வரலாறு, ப.63.

உவமையியல் அமைப்பும் பாகுபாடும்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ஏழாம் இயலாக அமைவது உவமையியல். இது 37 நூற்பாக்களைத் தன்னகத்தே கொண்டது. இந் நூற்பாக்கள் ஐந்து பகுதிகளாகப் பகுத்து நோக்கத்தக்கன. அவை:

1. உவமையின் இயல்பு: முதல் 10 நூற்பாக்கள்
2. உவமை உருபுகள்: அடுத்த 7 நூற்பாக்கள்
3. உவமையைப் புரிந்து கொள்ளும் முறை: தொடரும் 5 நூற்பாக்கள்
4. உள்ளுறை வகையும் வரையறையும்: பின்னைய 9 நூற்பாக்கள்
5. உவமையில் சிறிது வேறுபட வருவனவும் அடுக்கி வருவனவும்: இறுதி 6 நூற்பாக்கள்

உவமை பற்றிய பல அடிப்படையான விளக்கங்களைத் தொல்காப்பியர் இவ்வியலில் தெளிவுபடுத்தியுள்ளார். பிற்காலத்தில் தண்டியாசிரியர் உவமை அணி ஒன்றனுக்கே நாற்பது வகைகள் காட்டியுள்ளார்; உருவகத்திற்கு மட்டும் இருபத்தொரு வகைகளைக் குறிப்பிட்டுள்ளார்; இவ்வணிகள் பிற அணிகளுடன் விரவி வரும் கலப்பு அணிகளையும் வகைப்படுத்தியுள்ளார். பேராசிரியர் தமிழண்ணல் குறிப்பிடுவது போல், “இவை அனைத்தும் வேண்டாத உட்பிரிவுகள். தொல்காப்பியரின் உவமையியல் கருத்துக்களை மட்டுமே மேலும் சிறப்பாக விளக்கியிருந்தால், இன்று நமக்கு விளங்காத பகுதிகள் பல நன்கு விளங்கியிருக்கும்” (சங்க இலக்கிய ஒப்பீடு: இலக்கியக் கொள்கைகள், ப.128).

உவமை பற்றிய உரையாசிரியர்களின் விளக்கங்கள்

‘புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்’ உவமையின் பயன்கள் என்பர் தொல்காப்பிய முதல் உரையாசிரியர் இளம்பூரணர். ‘ஆப் போலும் ஆமா’ என உணர்த்திய வழி, அதனைக் காட்டகத்துக் கண்டான் முன் கேட்ட ஒப்புமைபற்றி இஃது ஆமா அன்று அறியும். ‘தாமரை போல் வாள்

முகத்துத் தையலீர்' என்ற வழி அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயக்கும் (தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணம், ப.395).

பேராசிரியர் 'உவமையியல்' என இயலின் பெயரைச் சுட்டுவர்; 'உவமம் என்பது ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதல்' (தொல்காப்பியம் - பொருளதிகாரம், பேராசிரியம், ப.57) என்பது அவர் தரும் எளிய விளக்கம் ஆகும்.

உவமை வகைகள்

"வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்"

(உவமையியல், நூ.1)

என்பர் தொல்காப்பியர். 'உவமை வினை (செயல்), பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்) என்னும் நான்கு அடிப்படைகளில் பொதுப் பண்பு காரணமாகத் தோன்றும்' என்பது இந் நூற்பாவின் பொருள்.

'புலி போலப் பாய்ந்தான்' என்பது வினை (செயல்)
'மாரி யன்ன வண்கை' என்பது பயன்
'துடி போலும் இடை' என்பது மெய் (வடிவம்)
'தளிர் போலும் மேனி' என்பது உரு (நிறம்)

மேலும், மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்புலன்களாலும் மனத்தினாலும் அறியப்படும் உவமை வகைகளும் உள என்பர் இளம்பூரணர்.

'தீப் போலச் சுடும்' மெய்யினால் அறியப்பட்டது
'வேம்பு போலக் கைக்கும்' நாவினால் அறியப்பட்டது.
'பவளம் போல் சிவந்த வாய்' கண்ணால் அறியப்பட்டது
'ஆம்பல் நாறும் துவர்வாய்' மூக்கால் அறியப்பட்டது
'குயில் போன்ற மொழி' செவியால் அறியப்பட்டது.
'தம்இல் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு' (திருக்குறள் 1107)

என்பது மனத்தால் அறியப்படும் உவமை என்பர் இளம்பூரணர். 'தலைவியைத் தழுவிக் கொள்வதால் அடையும் இன்பம், தமது சொந்த வீட்டில் இருந்து, தாமே பாடுபட்டுத் தேடிய பொருளைக் கொண்டு, பகுத்து உண்ணும்போது பெறும் இன்பம் போன்றது' என்கிறான் தலைவன்.

'உள்ளிய வினை முடித்தன்ன இனியள்'

எனச் சங்க இலக்கியத்துள் இடம்பெறும் உவமையும் மனத்தால் அறியப்படுவதாகும்.

உயர்ந்தவற்றையே உவமையாகக் கையாளல்

'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை'

(உவமையியல், நூ. 3)

என்பது தொல்காப்பியரின் உவமைக் கோட்பாடு. உவமை கூறும்போது, உயர்ந்தவற்றையே உவமையாகக் கூறவேண்டும்.

தொல்காப்பியக் கோட்பாட்டினை அடியொற்றிச் சங்கச் சான்றோர்கள் எப்பொழுதும் உயர்ந்தவற்றையே உவமையாகக் கையாண்டுள்ளனர். இதற்கான சான்றுகளைச் சங்க இலக்கியத்துள் பரக்கக் காணலாம். இவ் வகையில் குறிப்பிடத்தக்க சில உவமை களைக் காணலாம்.

'அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்' (208) என்பது பட்டினப் பாலை. இங்கே துப்புடையன (வலியுடையன) பலவற்றிலும் அரிமா (சிங்கம்) உயர்ந்தது. ஆகலின், அதனைச் சோழன் கரிகாற்பெரு வளத்தானுக்கு உவமையாகக் கையாண்டுள்ளார் கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

'தாமரை புரையும் காமர் சேவடி'

என்பது குறுந்தொகைக் கடவுள் வாழ்த்தின் முதலடி. சிவப்புடைய பலவற்றினும் தாமரை உயர்ந்தது. ஆகலின் அதனை உவமையாகக் கூறியுள்ளார் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

உயர்ந்தவர்களின் நட்பு எப்பொழுதும் உயர்வுடையதாகவே இருக்கும். தாமரை மலரில் மகரந்தப் பொடிகளை எடுத்துச் சந்தன மரத்தில் தேனீக்கள் கூடு கட்டினால் எப்படி இருக்குமோ அது போல உயர்ந்தவர் நட்பும் உயர்ந்ததாகவே விளங்கும் என நற்றிணை முதற் பாடலில் கபிலர் உவமை வடிவில் கூறுவது இங்கே மனங்கொளத் தக்கது.

"தாமரைத் தண்தாது ஊதிச்
சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை" (1)

உலகத்தார் மகிழும் வகையில் உவமை கூறல்

'உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்'
(உவமையியல், நூ.8)

என்பது தொல்காப்பியர் குறிப்பிடும் பிறிதொரு உவமைக் கோட்பாடு. உவமையும் உவமிக்கப்படும் பொருளும் (உவமேயமும்) தம்மின் ஒப்புமை உடையன என உலகம் ஒப்ப வேண்டும். உலகத்தார் ஏற்குமாறு உவமை கூறுவதே மரபு.

'உவமானமும் பொருளும் தம்மின் ஒத்தன என்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும்' என இந்நூற்பாவிற்கு உரை விளக்கம் வரைவர் பேராசிரியர். அவர் தம் கருத்திற்கு அரண் செய்யும் வகையில் இரு அழகிய உதாரணங்களையும் காட்டுவர்.

'மயிற் றோகை போலும் கூந்தல்'
என்பதன்றிக்,

'காக்கைச் சிறகன்ன கருமயிர்'

என்று சொல்லின், அஃது ஒத்தது எனப் படாது.

'புலி போலப் பாய்ந்தான்'

என்பதன்றிப் பிழையாமற் பாயும் என்பதே பற்றி,
'பூசை (பூனை) போலப் பாய்ந்தான்'

எனின், அதுவும் ஒப்பு என்று கொள்ளாது உலகம் (பேராசிரியம், ப.68).

உலகத்தார் மகிழும் வகையில் பொருந்திய, புதிய, வித்தியாசமான, தனித்தன்மை வாய்ந்த உவமைகளைக் கையாளுவதில் சங்கச் சான்றோர்கள் செவ்வி தலைப்பட்டுள்ளனர்.

சங்க இலக்கியத்தில் உவமை

"சங்க இலக்கியங்களுள் பெரும்பாலும் அமைந்த அணிகள் தன்மை நவிற்சியும் உவமையுமாம்... சங்கப் புலவர் காணும் உவமைகள், பொருளோடு ஒத்த தன்மையால் நெருக்கம் உடையனவாய் நின்று, உணர்வுக்கு இன்பஞ் செய்வனவாம்" (உரைநடைக் கோவை: இரண்டாம் பகுதி, ப.101) எனக் குறுந்தொகை மாநாட்டில் நிகழ்த்திய தலைமையுரையில் குறிப்பிடுவர் பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார். பதிப்பு வேந்தர் உ.வே.சாமிநாதையரும், "உவமையின் நயம், சங்க நூல்களில் போலப் பிற்கால நூல்களில் காணல் இயலாது" (குறுந் தொகை மூலமும் உரையும், p.ci) என அறுதியிட்டுக் கூறுவர். சான்றோர்களின் இக் கருத்துக்களுக்கு இலக்கியமாக விளங்கும் சங்க இலக்கிய உவமைகள் சிலவற்றை இங்கே காணலாம்.

பொருள்களைத் தெளிவுறுத்துவது உவமையாகும். இவ்வகையில் மனைவிக்கு அஞ்சி நடக்கும் ஓர் ஆடவனின் இயல்பினைக் குறுந்தொகைப் பாடல் ஒன்று,

"..   ...   ...   *ஊரன்*
எம்இல் பெருமொழி கூறித் தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே'   *(8)*

என்னும் அழகிய உவமையின் வாயிலாகத் தெளிவுறுத்தியள்ளது. கண்ணாடியின் முன்னே நிற்பவர், தம் கையையும் காலையும் தூக்கினால் அக் கண்ணாடியில் தோன்றும் எதிருருவாகிய பாவையும் அங்ஙனமே தூக்கும் என்பது எளிதில் காணக் கூடியதே. அதனால், 'ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே' என்பது போல, தலைமைப்

பண்பு மிக்க தலைவி இயக்கியவாறு இயங்கும் ஒரு தலைவனின் இயல்பு பொருத்தமான உவமை வாயிலாக இங்கே தெளிவுறுத்தப் பட்டுள்ளது. இவ்வுவமை காதற்பரத்தையின் கூற்றில் இடம்பெற்றிருப்பது சாலவும் பொருத்தமானது. அழகும் இளமையுமே காதற் பரத்தையின் மூலதனங்கள். அதற்கு வாயிலாக அமைவது ஆடி (கண்ணாடி). எனவே காதற்பரத்தை அடிக்கடி பயன்படுத்தும் பொருளான ஆடியை மையமாகக் கொண்டே ஆலங்குடி வங்கனார் உவமையைக் கையாண்டிருப்பது இப பாடலில் ஒரு சிறப்பு; நயம்.

காதல் வயப்பட்ட ஒரு தலைவனைப் பாங்கன், 'பேராற்றல் படைத்த நீ ஒரு சிறுமகளால் இத்தன்மையை அடைதல் நின் பெருமைக்கு இழுக்காகும்' என்று இடித்துரைக்கிறான்; பாங்கனுக்குத் தலைவன் எதிர்மறுத்து உரைப்பதாகக் குறுந்தொகையில் வெள்ளி வீதியாரின் ஒரு பாடல் உள்ளது. 'கழற்றெதிர்மறை' என்னும் துறையில் அமைந்த அப்பாடல் வருமாறு:

"இடிக்கும் கேளிர் நும்குறை யாக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற்கு அரிதே" (58)

இப் பாடலில் ஓர் அழகிய உவமை கையாளப்பட்டுள்ளது. 'கதிரவனது கடுமையான வெயில் சுட்டெரிக்கும் வெப்பம் மிக்க பாறையில், கையில்லாத ஊமன் ஒருவன் தன் கண்ணினாலே பாதுகாக்கும் படி வைக்கப்பட்ட வெண்ணெய் உருகுவது போல, தலைவனின் காதல் நோய் பரந்துள்ளது; பொறுத்தற்கு அரிதாகவும் உள்ளது' என்பது அவ்வுவமை.

ஊமனின் இலக்கணத்தைத் திருத்தக்கதேவர் சிந்தாமணியில்,

"கையி னாற்சொலக் கண்களிற் கேட்டிடும்
மொய்கொள் சிந்தையின் மூங்கை"

எனக் குறிப்பிடுவர். பிறர் கையினால் கூறும் செய்திகளை ஊமன் தன் கண்களால் கேட்கும் எனவும், பேச இயலாமையினால் நினைத்த கருத்துக்கள் அளவற்றனவாக அவனது உள்ளத்தில் நிறைந்திருக்கும் என்பதை உணர்த்தும் வகையில் 'மொய்கொள் சிந்தையின் மூங்கை' எனவும் கூறுவர் சிந்தாமணி ஆசிரியர். இங்ஙனம் பேச இயலாமையோடு கையும் இல்லையானால் வெண்ணெய் உருகிப் பரத்தலைக் கண்ணினால் கண்டும் பிறர்க்கு அதனைத் தெரிவிக்க இயலாமையோடு, அவ்வெண்ணெயைப் பெயர்த்தெடுத்துப் பிறிதோர் இடத்தில் வைக்கவும் அவ்வூமனுக்கு இயலாதாம். அது போல, 'இக் காதல் நோயைப் பொறுத்துக் கொள்ளவும், பிறர்க்கு வெளிப்படுத்திக் கூறி ஆறுதல் அடையவும் இயலாதவன் ஆயினேன்' எனவும், 'என்னை இடித்துரைக்கும் நண்பரே, நும் காரியமாக இதனை நிறுத்தலைச் செய்யின் நன்றாகும்' எனவும் தலைமகன் பாங்கனிடம் கூறுகிறான். ஒரு சிறந்த உவமை பொருளுக்கு அழுத்தத்தையும் ஆழத்தையும் தரும் என்பதற்குக் கட்டியம் கூறி நிற்கும் பாடல் இது!

அளளூர் நன்முல்லையார் தம் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் தலைவனின் பண்பு நலனை ஓர் அழகிய உவமையின் வாயிலாகப் புலப்படுத்துகிறார். அவ் உவமையே பொருளோடு ஒன்றிணைந்து பாடலின் உயிர்க் கருத்தாக விளங்குகிறது. நெருஞ்சி மலர் தொலைவில் இருந்து பார்க்கும் போது கண்ணுக்கு இனிமையாகத் தோன்றுகிறது; அதைக் கண்டு அக மகிழ்ந்து அருகில் சென்றாலோ காலில் சுரீரென்று குத்துகிறது. அதுபோலத் தலைவனும் களவொழுக்கத்தின் போது தலைவியன்பால் மிகுந்த காதல் உடையவனாக இருந்தான்; திருமணமான பின் பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்டு துன்பம் தருபவனாகிவிட்டான்.

"நோம்என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே!
புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்குஇன் புதுமலர் முள்பயந் தாஅங்கு
இனிய செய்தநம் காதலர்
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே!' (202)

"கவிஞன் கையாளும் உவமையே அவன் கற்பனை வளத்துக்குச் சாட்சி கூறும். கவிதைக்கு வலக்கை போல் பணிபுரிவது உவமையே" (க.வீரகத்தி, கடலும் படகும், ப.30) என்னும் அறிஞர் கூற்றுக்கு இலக்கியமாக விளங்குகின்றது இக் குறுந்தொகைப் பாடல்.

அகப் பாடல்களில் மட்டுமன்றிப் புறப்பாடல்களிலும் உவமையின் ஆட்சி சிறப்பாக இடம்பெற்றிருக்கக் காண்கிறோம். குறிப்பாக, அதியமான் நெடுமான் அஞ்சியின் பண்புநலன்களைக் குறித்து ஔவையார் புறநானூற்றுப் பாடல்களில் கையாண்டிருக்கும் உவமைகள் தனித்தன்மை வாய்ந்தவை. 'வைகல் எண்தேர் செய்யும் தச்சன் திங்கள் வலித்த கால் அன்னோன் அதியமான்' (புறநானூறு, 87) என்னும் உவமை இவ்வகையில் மனங்கொளத்தக்கது. பிறிதொரு புறப்பாடலில் ஔவையார் அதியமானின் பண்பையும் வீரப் பெற்றியையும் ஒருங்கே இரத்தினச் சுருக்கமான முறையில் புலப்படுத்த விழைகிறார். அவரது மனக்கண்ணில் அடிக்கடி காணும் ஒரு யானைக் காட்சி தோன்றுகிறது. ஊர்ச்சிறு பிள்ளைகள் நீர்த்துறையிலே படிந்து குளிக்கும் யானையின் மீது நீரை வாரி இறைத்தும், அதன் வெண்கோட்டினைக் கழுவியும் விளையாடுவர். அதே யானைக்கு மதம் பிடித்துவிட்டது என்றால் யாரும் அதன் பக்கத்தில் அணுகக் கூட முடியாது. அதியமான் நெடுமான் அஞ்சியும் அப்படிப்பட்ட யானையைப் போன்றவன்தான். அவன் பரிசிலர்க்கு மிகவும் இனியவன்; பகைவர்க்கோ பெரிதும் இன்னாதவன். அதியமானின் இரு வேறுபட்ட பண்புநலன்களை – அவனது எளிமையையும் அருமையையும் - இங்கே பொருத்தமான ஓர் உவமையின் வாயிலாகத் திறம்படப் புலப்படுத்தியுள்ளார் ஔவையார்:

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனிய பெரும எமக்கே! மற்றுஅதன்
துன்னரும் கடாஅம் போல
இன்னாய் பெரும நின்ஒன்னா தோர்க்கே." *(94)*

"கவிஞனுடைய அம்பறாத் தூணியிலே மிகச் சிறந்த பாணம் எது என்று கேட்டால், 'உவமை தான்' என்று தயங்காமல் சொல்லிவிடலாம்" (எஸ்.மகராஜன், ஒலிச் செல்வம், ப.21) என்னும் அறிஞர் கருத்திற்கு அரண் சேர்க்கும் வகையில் சங்கச் சான்றோர் பாடல்களில் உவமை அமைந்துள்ளது எனலாம்.

அக மாந்தர் உவமை கூறுவதற்கு உரிய மரபுகள்

தலைவி உவமை கூறினால், தனது நிலத்துள்ளும் தான் அறிந்த இட எல்லை வரையே அல்லது தான் அறிந்த கருப் பொருள்களால் மட்டுமே உவமை கூறுவாள். தோழி தன் நிலம் பற்றி அனைத்தும் அறிந்தவள். அவள் தனது நிலம் தவிர்த்துப் பிற நிலத்துக் கருப்பொருள்களைக் கொண்டு உவமை கூற மாட்டாள். அவ்வாறு கூறுவதாகப் பாடுவது மரபு அன்று. இதனை,

> "*கிழவி சொல்லின் அவளறி கிளவி*
> *தோழிக் காயின் நிலம்பெயர்ந்து உரையாது*' *(26-27)*

என்னும் உவமையியல் நூற்பாவில் எடுத்துரைப்பார் தொல்காப்பியர்.

சங்க இலக்கியத்துள் அகத்திணை மாந்தர் உவமை கூறுவனவாக வரும் இடச் சூழல்களை ஆராய்ந்தால், தொல்காப்பிய மரபு அவ்விடங்களில் செம்மையாகப் பின்பற்றப்பட்டிருத்தலைக் காணலாம். ஓர் எடுத்துக்காட்டு:

> "... ... ... *சாரல்*
> *சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்குஇவள்*
> *உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே*' *(18)*

என்பது கபிலரின் குறுந்தொகைப் பாடல்; 'இரவுக் குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவு கடாயது' என்னும் துறையில் அமைந்தது. இப் பாடலில் குறிக்கப்படும் சாரல், தலைவிக்கு உரிய மலையிடத்தது. தாம் நன்கு அறிந்த பொருள்களை உவமை கூறுதல் உலகத்தார் இயல்பாதலின் இங்கே தோழி, தான் அறிந்த தன் மலைப்

பலவின் பழத்தை உவமை கூறுகிறாள். "தோழிக் காயின் நிலம் பெயர்ந்து உரையாது" என்னும் தொல்காப்பிய உவமவியல் மரபு இங்கே பின்பற்றப்பட்டிருப்பது நோக்கத்தக்கது.

"பாதுகாப்பு இலதாகித் தன்னைத் தாங்குதற்குரிய கொம்பும் சிறியதாகித் தானும் பெரியதாகி இருக்கும் பழம் கனிந்து கொம் பினின்றும் உகும்; அன்றிப் பிறரால் கொள்ளவும் படும்; அது போலத் தன்னை வேற்று வரைவினின்றும் பாதுகாப்பார் இலளாகி உயிரும் சிறியளாகிய இவளிடத்துக் காமம் பின்னும் கனியின் இவள் உயிர் விடுதலும் நேரும்; அன்றிப் பிறர் வரைந்து கொள்ளவும் முயல்வர் என்று உவமையை விரித்துக் கொள்க. பழம் மிகக் கனிந்து உகுவதன் முன் உரிய காலத்தே உரியார் கொள்வதைப் போல இவள் உயிர் நீப்பதற்குள் உரிய பருவத்தே இவளுக்குரியையாகிய நீ வரைந்து கொள்வாயாக என்பது குறிப்பு. இயல்பாகவே பாதுகாப்புடையதாகியும் வேரில் பழுத்தலின் கீழ் உகும் நிலையிலதாயும் உள்ள பலாப் பழத்தையே நின் மலையிற் கண்டாயாதலின், நீ சிறுகோட்டிற் பெரும்பழந் தூங்கும் நிலையை உணராயாயினாய்! அதனை உணர்க என்று தோழி அறிவுறுத்தினாள் ஆயிற்று" (குறுந்தொகை மூலமும் உரையும், ப.45) என்னும் 'பதிப்பு வேந்தர்' உ.வே.சாமிநாதையரின் நுண்ணிய உரை விளக்கம் இங்கே நினைவுகூரத்த கதாகும்.

உவமையால் பெயர் பெற்ற சங்கச் சான்றோர்

சங்கச் சான்றோருள் தம் பாடல்களில் விளங்கும் விழுமிய உவமைகளால் பெயர் பெற்றோர் உள்ளனர். குறுந்தொகையில் தாம் கையாண்ட உவமையால் பெயர் பெற்றோர் பதினொருவர் ஆவர். செம்புலப் பெயல் நீரார், ஓரேருழவர், கல்பொரு சிறுநுரையார், அணிலாடு முன்றிலார், வில்லக விரலினார். கவைமகனார், கயமனார், குப்பைக் கோழியார், விட்ட குதிரையார், மீனெறி தூண்டிலார் ஆகியோர் இவ்வகையில் சிறப்பாக நினைவுகூரத்தக்கவர்கள் ஆவர். பதச் சோறாக, அணிலாடு முன்றிலாரின் குறுந்தொகைப் பாடலில் இடம்பெற்றுள்ள உவமையின் நயத்தினையும் நுட்பத்தினையும் இங்கே காணலாம்.

'தலைவர் பக்கத்தில் இருக்கும் போது, மிகவும் மகிழ்ச்சியுற்று, திருவிழாக் கொண்டாடும் ஊரினர் மகிழ்வதைப் போல, நான் விரும்பி மகிழ்வுடன் விளங்குவேன்; அவர் என்னைப் பிரிந்து சென்ற காலத்தில், பாலை நிலத்தில் பொருந்திய, அழகிய குடியை உடைய சிறிய ஊரில், மனிதர் நீங்கிச் சென்ற, அணில் விளையாடுகின்ற முற்றத்தை உடைய, தனிமையான வீட்டைப் போலப் பொலிவிழந்து வருந்துவேன்' என்பது அணிலாடு முன்றிலார் படைக்கும் ஒரு குறுந்தொகைத் தலைவியின் கூற்று. இக் கூற்றினைத் தன்னகத்தே கொண்ட பாடல் வருமாறு:

"காதலர் உழையர் ஆகப் பெரிதுவந்து
சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற;
அத்த நண்ணிய அங்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணிலாடு முன்றில்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழிஅவர் அகன்ற ஞான்றே." *(41)*

அணிலாடு முன்றில் - மக்கள் பயிலாமையின் அணில் ஆடித் திரியும் முற்றம்; மக்கள் உள்ள வழி அணில் வராது. மக்கள் போகிய வீட்டு முற்றத்தை 'அணிலாடு முன்றில்' என்று சிறப்பித்துப் பாடியதால், இப் பாடலை இயற்றிய புலவர் 'அணிலாடு முன்றிலார்' என்னும் பெயர் பெற்றார்.

"இப்பாடலில் 'அணிலாடு முன்றில் புலப்பில் போல' என வரும் பகுதி எண்ணுந்தோறும் இனிப்பது. வீட்டின் முன்பகுதியில் சிறுவர்கள் விளையாடுவர்; பசு, நாய், கோழி முதலிய வளர்ப்புயிர்கள் நிற்கும்; மக்கள் நடமாட்டம் காணப்படும். ஆதலின் அவ்விடத்தை (முன்றிலை) அணில் நெருங்கவும் அஞ்சும், ஓரோருகால் திகிலோடு தான் ஓடி வரும். உரிமையோடு வருதற்கு ஒருப்படாது. ஆனால் மக்கள் போகிய சீறூரில், யாரும் இல்லாத் தனி இல்லில், சிறிதும் அச்சமின்றி அணில் முழு உரிமையுடன் ஓடியாடும் விளையாட்டு அரங்கமாக முற்றம் மாறிவிட்டது. அணிலின் விளையாட்டினைத் தவிர அங்கு வேறு மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள் இல்லை; அணிலைத்

தவிர ஏனைய வளர்ப்புயிர்களோ, மனிதப் பிஞ்சுகளோ இல்லை; ஆள் நடமாட்டமும் இல்லை; வெறிச்சோடிக் கிடந்தது முன்றில். தன் வனப்பும் மகிழ்வும் சிறிது சிறிதாக அரிக்கப் பெற்றுத் தனிமைத் துயரில் தத்தளிக்கும் தலைவியின் உருவத்தை நம் மனக்கண் முன்னர் நிறுத்தும் சொல்லோவியம் 'அணிலாடு முன்றில்' என்ற தொடரேயாகும். ஆதலின் இப் பாடலை யாத்த ஆசிரியருக்கு 'அணிலாடு முன்றில்' என்ற அரும்பெயர் சூட்டினர்" (தமிழிலக்கியச் செல்வம்: தொகுதி 1, ப.64) என இவ்வுவமையின் நலத்தினைப் பாராட்டுவர் பேராசிரியர் சோ.ந. கந்தசாமி.

உருவகமும் உவமையே

"பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் அஃது உவமம் ஆகும்"

(உவமையியல், நூ.9)

என்பர் தொல்காப்பியர். 'பொருளை (உவமேயத்தை) உவமமாக ஆக்கி, உவமையை உவமேயமாம் பொருள் போலச் செய்து சொன்னாலும், அது குற்றமற்ற சிறப்பினை உடைய உவமையாகவே கொள்ளப்படும்' என்பது இந் நூற்பாவின் பொருள்.

இவ்வாறு வருவனவற்றைப் பிற்காலத்தார் 'உருவகம்' என ஓர் அணியாக்குவர். தொல்காப்பியர் கருத்தில் உருவகமும் உவமையே – உவமையின் வேறு ஒரு வடிவமே– உவமை வகைகளுள் ஒன்றே.

சங்கச் சான்றோருள் தம் பாடலில் இடம்பெற்ற அழகிய உருவகத்தால் பெயர் பெற்றோரும் உள்ளனர். வினை முற்றிய தலைவன் தேர்ப் பாகனுக்கு உரைப்பதாக வரும் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் (323) 'பதடி வைகல்' என்ற அழகிய உருவகம் காணப்படுகின்றது.

பதடி – கருக்காய், பதர். தலைவியைப் பிரிந்திருக்கும் நாள் நன்னாள் அன்று. அது பயனற்றது; இன்பம் என்னும் உள்ளீடு

இல்லாதது. தலைவியோடு கூடி இன்புறாத நாட்களைப் 'பதடி வைகல்' எனத் தலைவன் கூறியதாக அமைத்த சிறப்பால் இப் பாடலின் ஆசிரியர், 'பதடி வைகலார்' என்னும் பெயர் பெற்றார்.

"எல்லாம் எவனோ பதடி வைகல்...
அரிவை தோள்இணைத் துஞ்சிக்
கழிந்த நாள்இவண் வாழு நாளே."

வள்ளுவரும் பயனில் சொல் பாராட்டுவானை 'மக்கட் பதடி' (திருக்குறள், 196) என இடித்துரைத்தல் இங்கே ஒப்புநோக்கத்தக்கது.

பிரிவுத் துன்பத்தால் வேதனைப்படும் தலைவி பகற் பொழுதை எப்படியோ ஒரு வகையாகக் கழித்து விடுவாள். ஆயின், மாலைப் பொழுது அவளது தனிமைத் துயரை மிகுவிக்கும். அடுத்து வரும் இரவு வெள்ளமோ அவளுக்குக் கடலை விடப் பெரியதாகத் தோன்றும்; அதனைக் கடக்கும் வழி அறியாது அவள் மயங்குவாள்; கலங்குவாள்; துன்புறுவாள்.

"என்கொல் வாழி தோழி
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே" (387)

இப்பாடலின் 'கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே' என்ற ஈற்றடியில் இடம்பெற்றுள்ள 'கங்குல் வெள்ளம்' என்னும் அரிய உருவகம், பாடலைப் பாடிய புலவருக்குக் 'கங்குல் வெள்ளத்தார்' என்னும் சிறப்புப் பெயரைத் தேடித் தந்துள்ளது.

அடுக்கிய உவமைகளின் ஆட்சி

"அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே"
(உவமையியல், நூ.38)

என்பார் தொல்காப்பியர். உவமைகளை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக் கூறுதல் தவறு. பால் போலும் வெண்கொக்கு; வெண்கொக்குப் போலும் சுண்ணம்(சுண்ணாம்பு); சுண்ணம் போலும் வெண்மதி; வெண்மதி போலும் வாள். முகம் என்றாற் போல் அடுக்கிக் கூறுதலைத் தவிர்த்தலே

நல்லது. உவமைக்கு உவமையைத் தான் அடுக்கிக் கூறக் கூடாது; பல உவமைகள் அடுக்கி வரலாம். மதி போன்ற முகம், மலர் போன்ற கண், சங்கு போன்ற கழுத்து என்றாற் போல் பல உவமைகள் அடுக்கி வரலாம். ஓர் உவமைக்கே இன்னொரு உவமை என அடுக்கி வருவதே கைவிடத்தக்கது. 'மதி போன்ற முகம் போலும் தாமரை', 'பால் போலும் கொக்குப் போன்றது வெண்மை' என அடுக்கிக் கூறுதல் தவறு. அவ்வாறு கூறுவதைத் தவிர்த்தல் நன்று.

சங்க இலக்கியத்தைப் பொறுத்த வரையில், உவமைகள் பலவற்றை அடுக்கிக் கூறும் மரபினைச் சிறப்பாகக் காண முடிகின்றது. பாலை பாடிய பெருங்கடுங்கோ படைக்கும் பாலை நிலக் காட்சி ஒன்று இவ்வகையில் நினைவுகூரத்தக்கது. வறியவனது இளமைப் பருவ உடல் போல வாடிய கொம்புகள், கொடுக்க மனம் இல்லாத வனுடைய செல்வம் போலச் சேர்ந்தவர்க்கு தீங்கு செய்து பழிசேர்த்த ஒருவன், இறுதிக் காலத்தில் உறவினரோடு அழிவது போல வேரோடு கருகிச் சாய்ந்தது.

"வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்ச்,
சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழல்இன்றி,
யார்கண்ணும் இகந்துசெய்து இசைகெட்டான்
இறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப..." (10)

இங்கே மூன்று உவமைகள் அணிவகுத்து வந்திருக்கக் காணலாம்.

பிறிதொரு பாலைக் கலிப் பாடலில் (32) இளவேனில் பருவத்தின் வருகைக்கு நெஞ்சை அள்ளும் ஏழு அழகிய உவமைகளை அடுக்கிக் கையாண்டுள்ளார் பெருங்கடுங்கோ.

கலிப்பாவின் தாழிசை ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருவது. இப் பகுதியில் அடுக்கிய உவமைகளின் ஆட்சி பயின்று வரக் காண்கிறோம். பாலைக் கலியில் இருந்து ஓர் எடுத்துக்காட்டு:

"தோள்நலம் உண்டு துறக்கப் பட்டோர்
வேண்நீருண்ட குடைஓ ரன்னர்;

நல்குநர் புரிந்து நலன்உணப் பட்டோர்
அல்குநர் போகிய ஊர்ஓ ரன்னர்;
கூடினர் புரிந்து குணன்உணப் பட்டோர்
சூடினர் இட்ட பூஓ ரன்னர்" (23)

பனை ஓலையில் செய்து நீர் பருகிய பின் கீழெ போடப்படும் குடை, வாழ்ந்த மக்கள் வெற்றிடமாக விட்டுச் செல்லும் ஊர், மகளிர் சூடிக் கழித்த பூ - இளமை நலம் அனுபவித்து முடிந்ததும் ஆடவரால் கைவிடப்படும் மகளிரின் அவல நிலைக்குப் பெருங்கடுங்கோ இங்கே கையாண்டிருக்கும் உவமைகள் உணர்ச்சி மிக்கவை; பொருள் பொதிந்தவை.

சங்கச் சான்றோர்களின் உவமைப் பயன்பாட்டில் காணலாகும் புதுமைக் கூறுகள்

சங்கச் சான்றோர்களின் உவமை ஆர்வம் சிறந்து விளங்கும் இடம் ஒன்று உண்டு. புறச் செய்திகளை அகப்பாடலில் உவமை வடிவில் கூறிச் செல்லும் புதுமையே அது. இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் பரணர். அவரது குறுந்தொகைப் பாடலில் வரும் ஒரு தோழி, தலைவன் பகலில் வருவதை மறுத்துரைத்து இரவில் வரச் செய்து, பின்னர் அதனையும் மறுத்து, அவன் தலைவியை வரைந்துகொள்ளும் பொருட்டு அங்ஙனம் செய்வதன் இன்றியமை யாமையைத் தலைவிக்கு உணர்த்துகிறாள். பகற்குறியும் இரவுக் குறியும் மறுத்தால் தலைவன் விரைவில் மணந்து கொள்வான் என்பது தோழியின் எண்ணம்.

"ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கண் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே" (73)

என்னும் தோழியின் கூற்றில் கோசர் பற்றிய வரலாற்றுச் செய்தி இடம்பெற்றிருப்பது நோக்கத்தக்கது. இத்தகைய அரிய வரலாற்றுக் குறிப்புக்கள் சங்கச் சான்றோர்களின் அகப் பாடல்களில் உவமை வடிவில் பயின்று வரக் காணலாம்.

சங்கச் சான்றோர்களின் உவமைத் திறத்தினைப் பறைசாற்றும் பிறிதோர் இடமும் உண்டு. மகளிரின் அழகுக்கு நாடு-நகர் - ஊர்களை உவமைகளாகக் கூறும் புதுநெறியினைச் சங்க இலக்கியத்துள் பரக்கக் காணலாம்.

குன்றியன் என்னும் புலவர் பாடிய குறுந்தொகைப் பாடலில் ஓர் இடம். பரத்தையினிடத்தில் இருந்து மீண்டு வந்த ஒரு தலைவன் தோழியின்பால் சூள் கூறித் தெளிவிக்க முற்படுகிறான். தோழி, “தொண்டி என்னும் பட்டினத்தைப் போன்ற எம் பெண்மை நலனைத் தந்து நின் சூளைப் பெற்றுக்கொண்டு செல்” என்று கூறித் தலைவனுக்கு வாயில் மறுக்கிறாள்.

“தொண்டி அன்னஎன் நலம்தந்து
கொண்டனை சென்மோ மகிழ்நநின் சூளே.” (238)

பரணரின் குறுந்தொகைப் பாடலில் வரும் பிறிதொரு தோழி, பரத்தையிற் பிரிந்த தலைமகனுக்கு வாயில் மறுக்கும் போது,

“வாரல்எம் சேரி தாரல்நின் தாரே...
அழிசி ஆர்க்காடு அன்னஇவள்
பழிதீர் மாணலம் தொலைதல் கண்டே” (258)

எனக் கூறுகிறாள். இங்கே தலைவியின் அழகுக்கு இளையர் பெருமகன் அழிசியின் ஆர்க்காடு என்னும் நகரம் உவமையாகக் கூறப்பட்டிருத் தலைக் காணலாம்.

இங்ஙனம், ‘உவமை என்னும் தவலரும் கூத்தி, பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து’ பொலிவுடன் திகழ்வதைச் சங்க இலக்கியத்துள் பரக்கக் காண்கிறோம்.

நிறைவாக, பேராசிரியர் ரா.சீனிவாசன் குறிப்பிடுவது போல், 'தொல்காப்பிய உவம இயலோடு சங்கப் பாடல்களில் வரும் உவமைகள் நெருங்கிய தொடர்பைப் பெற்றுள்ளன; மற்றும் இவ்வடிப்படைகளே பிற்கால அணி நூல்களுக்கு முன்மாதிரியாக விளங்கியுள்ளன' (சங்க இலக்கியத்தில் உவமைகள், ப.9).

6

கணினி யுகத்திற்குத் திருக்குறளின் பொருத்தப்பாடு

*"'எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்' என்றபடி உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் வள்ளுவர் வாய்மொழியிற் காணப்படுவனவேயாம்." **

- பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார்

தமிழ் இலக்கிய வரலாற்றைக் கருத்தியல் அடிப்படையில் இயற்கை நெறிக் காலம், அறநெறிக் காலம், பக்தி நெறிக் காலம், தத்துவ நெறிக் காலம், அறிவியல் நெறிக் காலம் என ஐந்து கால கட்டங்களாகப் பகுப்பர் அறிஞர். இவற்றுள் இயற்கை நெறிக் காலத்தை அடுத்த அறநெறிக் காலத்தில் - சங்கம் மருவிய காலத்தில் - தோன்றிய தலையாய அற நூல் திருக்குறள். தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலத்தை அடுத்த சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். இவற்றுள் 11 நூல்கள் அறநூல்கள் ஆகும். இப் பதினொரு அற நூல்களுள் திருக்குறளும் நாலடியாரும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவ்விரு நூல்களையும் 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' எனச் சிறப்பித்துக் கூறுவர் முன்னோர்.

முன்னைப் பழமையும் பின்னைப் புதுமையும்

பெரும்பாலான தமிழறிஞர்களின் கருத்துப்படி திருக்குறள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆகும். திருக்குறளுக்குப்

----

* உரைநடைக் கோவை: இரண்டாம் பகுதி, ப.59.

பழங்காலத்தில் பரிமேலழகர், மணக்குடவர் முதலான பத்துப் பேர் உரைகள் எழுதியுள்ளனர்; அண்மைக் காலத்திலும் தெளிவுரை, புத்துரை, நயவுரை, எளிய உரை, மரபுரை, மெய்யுரை என்ற பெயர்களில் திருக்குறளுக்குப் பல்வேறு உரைகள் வந்த வண்ணம் உள்ளன. முன்னைப் பழமைக்குப் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் திருக்குறள் விளங்கி வருவது ஆழ்ந்து நோக்கத்தக்கது ஆகும். வேறு சொற்களில் கூற வேண்டும் என்றால், திருக்குறள் இன்றைய அறிவு யுகத்திற்கும் - கணினி யுகத்திற்கும் - ஏற்புடைய, பொருந்தக் கூடிய சிந்தனைகளை வழங்கியுள்ளது எனலாம். இச் சிந்தனைகளை அடையாளம் காண்பதும், இவற்றின் அடிப்படையில் திருக்குறள் கருத்துக்களை அலசி ஆராய்வதும் இவ் ஆய்வின் நோக்கம் ஆகும்.

இன்றைய அறிவு யுகம் விவாதிக்கும் ஐந்து பொருள்கள்

இன்றைய அறிவு யுகத்தில் பரவலாகப் பேசப்பட்டும், விவாதிக்கப்பட்டும் வரும் பொருள்கள் ஐந்து. அவையாவன:

1. ஆளுமை வளர்ச்சி (Personality Development)
2. மனித வள மேம்பாடு (Human Resource Development)
3. விழுமியக் கல்வி (Value Education)
4. தொடர்பியல் திறன்கள் (Communicative Skills)
5. உடன்பாட்டுச் சிந்தனை (Positive Thinking)

ஆளுமை வளர்ச்சி

'ஆளுமை வளர்ச்சி' என்ற நோக்கில் திருக்குறளை ஆராய்வதற்கு நிறைய இடம் உள்ளது. குறிப்பாக, 'இடுக்கண் அழியாமை' (63) என்ற அதிகாரமும், 'ஆள்வினையுடைமை' (62) என்ற அதிகாரமும் இவ் வகையில் நுண்ணிதின் ஆராயத்தக்கவை. துவண்டு விடாமல் துன்பத்திற்கு எவர் துன்பம் தருகிறாரோ, அவரே ஆளுமையாளராக வாழ்வில் உயர முடியும்.

'இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்' (623)

என்னும் குறட்பா இவ் வகையில் குறிப்பிடத்தக்கது ஆகும். இதே போல் விடாமுயற்சியால் ஊழினையும் வெற்றி கொள்ள முடியும் என ஆழமாக நம்புகின்றார் திருவள்ளுவர்.

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்' (620)

என்னும் குறட்பா இவ்வகையில் மனங்கொளத்தக்கதாகும். இதே போல் வள்ளுவர் வலியுறுத்தும் ஆளுமைப் பண்புகளை ஒருவர் வளர்த்துக் கொண்டால், அவர் வாழ்வில் சாதனையாளராக (Achiever) உயர முடியும்; வாழ்வில் தடம் பதிக்கவும் முடியும்.

மனித வள மேம்பாடு

நீர் வளம், நில வளம், கனிம வளம் முதலான வளங்களினும் முக்கியமானது மனித வளம் (Human Resource). இம் மனித வளத்தின் மாண்பு குறித்தும் வள்ளுவர் பேசியுள்ளார். இன்னும் சொல்லப் போனால்,

'நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு' (739)

என்பது இலட்சிய நாடு (Ideal Nation) பற்றிய வள்ளுவரின் சிந்தனை ஆகும். ஃபிரான்சிஸ் பேகன் பதினேழாம் நூற்றாண்டில் 'Knowledge is Power' என்ற அரிய சிந்தனையை முன்வைத்தார். வள்ளுவரோ பேகனுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே 'அறிவு அற்றம் காக்கும் கருவி' (421) என மொழிந்துள்ளார்; 'அறிவுடைமை' என்னும் தலைப்பில் பத்துக் குறட்பாக்கள் கொண்ட ஓர் அதிகாரமே படைத்துள்ளார். 'அறிவுடையார் எல்லாம் உடையார்' (430). 'கேடில் விழுச்செல்வம் கல்வி'' (400). 'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' (457) என்றாற்போல் மனிதவள மேம்பாடு குறித்துத் திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துக் களைக் கண்டறிதல் கூடும்.

விழுமியக் கல்வி

இன்று கல்வித் துறையில் பரவலாகப் பேசப்படுவது விழுமியக் கல்வி (Value Education) ஆகும். இந் நோக்கிலும் திருக்குறளை விரிவாக ஆராயலாம். சான்றாக, 'அறம்' என்னும் விழுமியத்திற்குத் திருவள்ளுவர் தரும் விளக்கம் இரத்தினச் சுருக்கமானது; இதுவரை எவரும் சொல்லாதது.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற' (34)

என்னும் குறட்பா இங்கே நினைவுகூரத்தக்கது. பிற அற நூலாசிரியர் களைப் போல் 'பொருள்' நிலையில்லாதது என்ற நோக்கில் திருவள்ளுவர் எதுவும் கூறவில்லை; 'பொருள் செயல்வகை' (76) என ஓர் அதிகாரம் படைத்து, 'செய்க பொருளை' (759) என அறிவுறுத்து கின்றார்; தீதில்லாத நேரிய வழியில் பொருளை ஈட்டுமாறு மக்களை வலியுறுத்துகின்றார்.

'அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்' (754)

என்பது அவரது கருத்து. 'இன்பம்' என்ற விழுமியம் குறித்தும் திருவள்ளுவருக்குத் தனிப்பட்ட கருத்து உள்ளது. அவரது பார்வையில் வெறும் புலன் சார்ந்த உடல் இன்பம் (Pleasure) மட்டும் முக்கியமானது அன்று; அதற்கும் மேலாக மனம் சார்ந்த மகிழ்ச்சியே (Happiness) முக்கியமானது ஆகும்.

'தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு' (1107)

என்னும் குறட்பா இவ்வகையில் மனங்கொளத்தக்கது ஆகும். இதுபோல் விழுமிய நோக்கில் திருக்குறளைத் திட்பமாகவும் நுட்பமாகவும் ஆராய்வதற்கு இடமுள்ளது.

தொடர்பியல் திறன்கள்

'தொடர்பியல் திறன்கள்' குறித்தும் அவற்றின் இன்றியமை யாமை குறித்தும் இன்றைய அறிவுலகம் விரிவாகப் பேசி வருகின்றது. வாழ்வில் எல்லா நிலைகளிலும் - எல்லாத் துறைகளிலும் - எல்லோருக்கும் கட்டாயம் தேவைப்படுவன தொடர்பியல் திறன்கள் ஆகும். மொழி ஆளுமையோடு உரையாடும் திறம் பெற்ற ஒருவரே வாழ்வில் வெற்றி வாகை சூட முடியும். திருவள்ளுவர் 'சொல்வன்மை' (65) அதிகாரத்தில் பத்துக் குறட்பாக்களில் தொடர்பியல் திறன்கள் குறித்துப் பேசுகின்றார்.

'விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்' (648)

என்னும் குறட்பா உணர்த்தும் கருத்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. 'திறனறிந்து சொல்லுதல்', 'மாசற்ற சில சொல்லுதல்', 'வெல்லும் சொற்களைக் கண்டறிந்து கையாளல்' என்றாற் போல் வள்ளுவர் முன்மொழியும் தொடர்பியல் சிந்தனைகள் இவ்வகையில் அறியத் தக்கவை ஆகும்.

உடன்பாட்டுச் சிந்தனை

உடன்பாட்டுச் சிந்தனை (Positive Thinking) குறித்தும் அதன் ஆற்றல் குறித்தும் இன்று நிறையத் தன்முன்னேற்ற நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. கூர்ந்து நோக்கினால், திருவள்ளுவரும் ஓர் உடன்பாட்டுச் சிந்தனையாளராகவே விளங்குகின்றார். தத்துவ அறிஞர் ஆல்பர்ட் சுவைட்சர் 'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' (Indian Thought and its Development) என்ற நூலில் குறிப்பிடுவது போல், திருக்குறளில் எதிர்மறைச் சிந்தனையை எங்கும் காணமுடியாது; இல்லறத்தை - பெண்மையை - வாழ்க்கையை- உலகத்தை உடன்பாட்டு நோக்கிலும், உயர்வாகவுமே திருவள்ளுவர் பாடியுள்ளார்.

'அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை' (49)
'பெண்ணின் பெருந்தக்கது இல்' (1137)

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்' (50)

என வரும் குறட்பாக்கள் இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

இங்ஙனம் திருக்குறள் கருத்துக்கள் இன்றைய அறிவு யுகத்திற்குப் பொருந்தி வரும் பாங்கினைக் குறித்து விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்வதற்கு மிகுந்த இடம் உள்ளது. இவ் ஆய்வின் மூலம் திருவள்ளுவர் இன்றைய அறிவு யுகத்திற்கு என்னென்ன நற் செய்திகளை வழங்கியுள்ளார் எனக் கண்டறிந்து வெளிப்படுத்தலாம்; பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழில் தோன்றிய திருக்குறள், தேசிய இலக்கியமாகவும் (National Literature) உலகப் பொதுறையாகவும் (World Literature) விளங்கும் பான்மையைத் தக்க சான்றுகள் காட்டி நிறுவலாம். சுருங்கக் கூறின்,

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

என்ற கவியரசர் பாரதியாரின் மதிப்பீடு உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை எனலாம். ■

7

திருவள்ளுவரும் சர்வக்ஞரும்

*“திருவள்ளுவரும் சர்வஞ்ஞரும் ஏறக்குறைய ஒரே வகையான சூழ்நிலைகள் அமைந்து இருந்த காலத்தில் வாழ்ந்தனர். இவர்கள் வாழ்ந்த காலத்தை நிலைமாறுபாட்டுக் காலம் (Transitional Period) எனலாம்.” **

- க.த. திருநாவுக்கரசு

“தமிழன் திருக்குலத்தில் தமிழ்த்தாய் திருவயிற்றில்
தமிழ்த்திரு வள்ளுவனார் – கிளியே
தமிழாய்ப் பிறந்தா ரடி!”

என்பது திருவள்ளுவர் கிளிக்கண்ணி (1). ஆம்; தமிழன் திருக்குலத்தில்- தமிழ்த் தாய் திருவயிற்றில் - தமிழாய்ப் பிறந்தவரே தமிழ்த் திரு வள்ளுவனார். சுருங்கக் கூறின், தமிழ்த் தாயின் தலைமகன் - தவமகன் - திருவள்ளுவர் ஆவார். கன்னட அற இலக்கியத்தின் தந்தையாகப் போற்றப்படுபவர் சர்வக்ஞர். செம்மொழித் தமிழில் திருவள்ளுவரைப் போலவும், சுந்தரத் தெலுங்கில் வேமனரைப் போலவும் கவின்மிகு கன்னடத்தில் சர்வக்ஞர் விளங்குகின்றார். அறிஞர் உலகம் ‘திராவிட மொழிகளின் மும்மூர்த்திகள்’ எனத் திருவள்ளுவர் – வேமனர்– சர்வக்ஞர் ஆகிய மூவரையும் மதிப்புடனும் மரியாதையுடனும் குறிப்பிடுகின்றது. இக் கட்டுரை ஒப்பியல் நோக்கில் திருவள்ளுவர், சர்வக்ஞர் என்னும் இருவரது அறக்கருத்துக்களையும் ஆராய முற்படு கின்றது.

----

* சான்றோர் கண்ட திருவள்ளுவர், ப.51.

முடிந்த முடிபான தகவல்கள் கிடைக்கப் பெறாமை

திருவள்ளுவரைப் போலவே சர்வக்ஞருக்கும் அவரது பிறப்பு. இயற்பெயர், பெற்றோர் பெயர், வாழ்க்கை வரலாறு ஆகியன பற்றி முடிந்த முடிபான தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை. இருவரைக் குறித்தும் தமிழ் மற்றும் கன்னட இலக்கிய உலகில் பல்வேறு கட்டுக் கதைகள் வழங்கி வருகின்றன. எனினும், பேராசிரியர் மு.வ. குறிப்பிடுவது போல், திருவள்ளுவரைப் பொறுத்த வரையில், "பல நூல்களைக் கற்றவர், இல்வாழ்க்கையைச் செம்மையாக நடத்தி மகிழ்ந்தவர், அரசியலில் தேர்ந்த அறிவு பெற்றவர், நீண்ட நாள் அமைதியாக வாழ்ந்தவர், பல சமயத்தாரோடும பழகினாலும் பொதுமை நாட்டமே உடையவர், அறத்தில் அசையாத நம்பிக்கை உடையவர், சமய வேடங்களையும் மூட நம்பிக்கைகளையும் புறக்கணித்தவர் முதலான குறிப்புகள் அவருடைய நூலால் தெரிகின்றன" (தமிழ் இலக்கிய வரலாறு, பக்.65-66). இம் மதிப்பீடு சர்வக்ஞருக்கும் பெரும்பாலும் பொருந்தி வருவதே ஆகும்.

நீண்ட கால இடைவெளி

திருவள்ளுவருக்கும் சர்வக்ஞருக்கும் இடையே நீணட கால இடைவெளி உள்ளது. பெரும்பாலான தமிழறிஞர்களின் கருத்துப்படி, திருவள்ளுவர் கி.பி.2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் ஆவார்; சர்வக்ஞர் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் விசய நகரப் பேரரசின் காலத்தில் வாழ்ந்தவ ராகக் கருதப்படுகின்றார். எனவே, இருவருக்கும் இடையே ஏறக்குறைய ஆயிரத்து நானூறு ஆண்டுக் கால இடைவெளி உள்ளது.

குறுகிய பா வடிவத் தேர்வு

திருவள்ளுவர் தமது அறக் கருத்துக்களை உலகிற்கு வழங்கு வதற்குத் தேர்ந்தெடுத்துக் கொணட பா வடிவம், ஈரடியால்- சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் ஒன்றே முக்கால் அடியால் - அமைந்த குறள் வெண்பா ஆகும். இதன் மேலடி நான்கு சீர்களால் ஆனது; கீழடி மூன்று சீர்களால் ஆனது. 'கடுகைத் துளைத்து எழுகடலைப்

புகட்டி, குறுகத் தறித்த குறள்' என்னும் ஔவையின் புகழாரம் இவ் வகையில் நினைவுகூரத்தக்கது ஆகும். திருவள்ளுவரைப் போலவே சர்வக்ஞரும் கன்னட மொழிப் பா வகையில் குறுகிய வடிவமான மூன்றடிப் பாட்டினை — திரிபதியம் (திரிபதம்) என்பதனை— தேர்ந் தெடுத்துக் கொண்டார். 'திரிபதிய விக்கிரமன்' என்பது கன்னட இலக்கிய உலகில் சர்வக்ஞரைக் குறித்து வழங்கி வரும் சிறப்புப் பெயர் ஆகும். அறக் கருத்துக்களை வெளியிடுவதற்கு ஏற்றதொரு குறுகிய பா வடிவினைத் தேர்ந்து கொண்டதில் திருவள்ளுவரும் சர்வக்ஞரும் ஒன்று படுகின்றனர்.

ஒன்றுபடும் இடங்கள்

திருவள்ளுவரும் சர்வக்ஞரும் கொள்கை அளவில் ஒன்றுபடும் இடங்கள் பல உண்டு. அனைத்துலகக் கோட்பாடு,: உலக சகோதரத் துவம், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், அருள் நெறி போற்றல், அறக்கோட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருத்தல், மாசிலா மனத்தின் மாண்பு போற்றல், வாய்மையைச் சிறந்த அறமாக மதித்தல், கல்வியின் விழுப்பம் கூறல், நட்பின் மேன்மையைப் பாராட்டல், உணவில் கட்டுப்பாட்டினை வலியறுத்தல், உழவுத் தொழிலின் உயர்வினை உணர்த்தல், பொருளற்ற சடங்குகளைச் சாடல், சாதி வேற்றுமை பாராட்டாமை முதலான பல்வேறு கருத்துக்களில் இருவருக்கும் இடையே நெருக்கமான ஒற்றுமைப் பண்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே சுட்டிக்காட்டலாம்.

இல்வாழ்க்கையின் இனிமையைப் பாராட்டல்

திருவள்ளுவர் 'அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை' (49) என இல்வாழ்க்கையின் மாண்பினைப் போற்றுவார்; 'மங்கலம் என்ப மனைமாட்சி' (60) என மனைவியின் நலத்தினைப் பாராட்டுவார்; இல்வாழ்க்கையின் 'நன்கலம் நன்மக்கட் பேறு' (60) எனக் குறிப்பிடுவார்.

இவ் வகையில் ஒப்புநோக்கத்தக்க சர்வக்ஞரின் சிந்தனைகள் வருமாறு:

"மனமொப்பிய மனைவியைப் பண்போடு விளித்து
மனம்விரும்பி இல்லறம் ஆற்றின் - அமுதக்
கன்னல் சுவைத்தன்ன சர்வக்ஞ" *(962)*

"அறுசுவையற்ற உணவு பூப்பந்தலற்ற திருமணம்
குறுநடை பயிலும் மக்களற்ற மனை
குறையே காண் சர்வக்ஞ" *(95)*

இல்வாழ்க்கையின் ஏற்றம், மனைவியின் மாண்பு, மழலைச் செல்வத்தின் மேன்மை ஆகியவற்றைப் போற்றுவதில் திருவள்ளுவர், சர்வக்ஞர் இருவருக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமைப் பண்புகள் காணப்படு கின்றன.

மாசிலா மனத்தின் மாண்பு போற்றல்

'அறன் வலியுறுத்தல்' அதிகாரத்தில் 'மனம் பிழையின்றி நட; அதுவே அறம்; மற்றவை யெல்லாம் வெளிப் பகட்டு' என இரத்தினச் சுருக்கமான முறையில் அறத்திற்கு வரைவிலக்கணம் வகுப்பார் வள்ளுவர்:

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற" *(34)*

வள்ளுவரின் கண்ணோட்டத்தில் மாசிலா மனமே அறத்தின் அடிப்படை ஆகும்.

வள்ளுவர் அறத்தின் அடிப்படைப் பண்பாய்ச் சுட்டிய மாசிலா மனத்தையே ஞானத்தின் தலையாய பண்பாகக் குறிப்பிடுகிறார் சர்வக்ஞர். அவரது கருத்தில் காசி நகருக்குப் பயணம் மேற்கொள்வதால்-காசினியில் பல்வேறு புனிதத் தலங்களுக்கு அலைந்து திரிவதால் - ஒரு பயனும் இல்லை.

"காசிப் பயணத்தின் காரணம் என்னய்யா?
மாசிலான் மனத்துள் இருக்க – அலைவது
காசினியில் ஏனோ சர்வக்ஞ?" *(247)*

எனப் பொருள் பொதிந்த கூரிய வினாவினைத் தொடுக்கின்றார் சர்வக்ஞர்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்" (280)

என்னும் வள்ளுவர் வாய்மொழியை வழிமொழிவது போல்,

"நிதமும் நியதிகளேன்? ஆசாரப் பூசையுமேன்?
பதமாய் மழிப்பதுமேன்? சடையேன்? மெய்யறிவில்
பதமானோர்க்கு நாளும் சர்வக்ஞ" (308)

எனக் குறிப்பிடுவார் சர்வக்ஞர். குணம் இருப்பின் - உலகம் பழித்தது ஒழித்து விடின் - நியதிகள், ஆசாரப் பூசை, தலை மழித்தல், சடை நீட்டல் என எவையும் தேவை இல்லை என வள்ளுவரும் சர்வக்ஞரும் ஒருமித்த குரலில் முழங்குவர்.

அறக் கோட்பாட்டின் அடிப்படை

பல்லக்கில் இருப்பவனையும் சுமப்பவனையும் பார்த்து அறத்தின் பயனை மதிப்பிடக் கூடாது என்பது வள்ளுவரின் அழுத்தம் திருத்தமான கருத்து. இதனை உணர்த்தும் குறட்பா:

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை" (37)

உரையாசிரியர்கள் இடையே பல்வேறு கருத்து வேறுபாடுகளையும் விளக்கங்களையும் தோற்றுவித்த அரிய குறட்பா இது! இக் குறட்பாவின் எதிரொலி போல் சர்வக்ஞரிடம் காணப்படும் சிந்தனை வருமாறு:

"குடைநிழலில் வலம் வருவாரைக் கண்டு
எடை போடற்க என்பயன் செய்தார் இவரென
கொடையின் முன்பயனது சர்வக்ஞ" (314)

வள்ளுவர் 'அறத்தாறு இதுவென வேண்டா' எனச் சுட்ட, சர்வக்ஞர் 'கொடையின் முன்பயன் அது' எனக் குறிப்பிடுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

ஈத்துவக்கும் இன்பம்

திருவள்ளுவரின் கருத்தில் ஈகை என்பது ஏழைகளுக்குக் கொடுப்பதே; 'வறியார்க்கொன்று ஈவதே ஈகை' (221) என இரத்தினச் சுருக்கமாக மொழிவார் அவர். மேலும் 'ஈத்துவக்கும் இன்பம்' (228) என இல்லாதவர்களுக்குக் கொடுத்து மகிழும் இன்பத்தினைச் சுட்டுவார் வள்ளுவர். சர்வக்ஞரோ,

"வேண்டுமுன் ஈவோன் உத்தமனே உலகில்
வேண்டியபின் ஈவோன் இடையினன் - கடையனே
வேண்டியும் ஈயான் சர்வக்ஞ" (330)

என ஈவதன் அடிப்படையில் மக்களை மூவகையினராகப் பகுத்துக் கூறுவார்.

நட்பின் உயர்வினை மொழிதல்

நட்பின் உயர்வைப் போற்றுவதில் திருவள்ளுவரும் சர்வக்ஞரும் ஒருமித்த கருத்து உடையவர்களாக விளங்குகின்றனர். திருவள்ளுவர் பொருட்பாலில் 'நட்பு', 'நட்பாராய்தல்', 'பழைமை', 'தீ நட்பு', 'கூடா நட்பு' (79-83) என்னும் ஐந்து அதிகாரங்களில் - ஐம்பது குறட்பாக்களில் - உடன்பாட்டு நோக்கிலும் எதிர்மறை நோக்கிலும் நட்பின் பல்வேறு பரிமாணங்களை விளக்கியுரைப்பார். அவரது கருத்தியலில் 'முகம் இனிக்கப் பழகுவது நட்பாகாது; மனம் இனிக்கப் பழகுவதே நட்பு'.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு" (786)

'பழகப் பழகப் பண்புடையவர் நட்பு, படிக்கப் படிக்க நூலின்பம் போலும்' எனப் பண்புடையாளர் தொடர்புக்கு அழகிய உவமை வடிவில் புகழாரம் சுட்டுவார் வள்ளுவர்.

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடைய யாளர் தொடர்பு" (783)

என்னும் அவரது வாக்கு இங்கே மனங்கொளத்தக்கதாகும். அதே வேளையில் அவர் தீ நட்பால் - கூடா நட்பால் - விளையும் கேடு களையும் அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக்காட்டுவார்.

சர்வக்ஞரும் திருவள்ளுவரது சிந்தனையுடன் ஒன்றுபடும் வகையில் மேலோர் நட்பின் மேன்மையினையும் கீழோர் நட்பின் கேட்டினையும் குறித்து நல்லதோர் உவமை வடிவில் எடுத்துரைக்கின்றார்:

“கணமாயினும் குணமுடையோர் நட்பே நட்பாம்
குணமிலார் நட்பு – உடலில் தீப்புண்
கண்டது போலாம் சர்வக்ஞ”

உணவில் கட்டுப்பாட்டினை வலியுறுத்தல்

‘மருந்து’ எனத் தனியொரு அதிகாரமே படைத்து அதில் உணவு உட்கொள்ளும் முறை பற்றிய அடிப்படையான உண்மை களைத் தெளிவுபடுத்துவார் வள்ளுவர். இவ்வகையில் நினைவுகூரத்தக்க ஒரு குறட்பா வருமாறு:

“அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து” (944)

‘செரித்தது பார்த்து அம்முறை பற்றி ஒத்துக்கொள்ளுவதை நன்கு பசித்த பின் உண்க’ என்பது இக் குறட்பாவின் தெளிவுரை.

“உண்பதில் நாவடக்கி தூய்மையில் நின்றோரும்
உண்பது செறித் துண்பாரும் வலியரென்ப
ஆன்றோர் பழமொழியாம் சர்வக்ஞ” (1157)

என்னும் சர்வக்ஞரின் சிந்தனை வள்ளுவரின் சிந்தனையுடன் ஒட்டி வருவதாகும்.

வேறுபடும் இடங்கள்

ஒப்பியல் நெறியின் அடிப்படைப் பண்பு இருபெருங் கவிஞர் களுக்கு இடையே காணலாகும் ஒற்றுமைகளை மட்டும் காண்பதன்று;

இருவரும் கொள்கை அளவில் வேறுபடும் இன்றியமையாத இடங்களையும் ஒப்பியல் ஆய்வில் நுண்ணிதின் கண்டறிதல் வேண்டும். மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் குறிப்பிடுவது போல், "முழுதும் ஒப்புமையான பொருள்களை ஒத்திட்டுக் காண்பதிற் பயனுமில்லை; அறிவுமில்லை. அடிப்படையில் ஒற்றுமையும் கூறுபாட்டில் வேற்றுமையும் உடைய பொருள்களே ஒத்து உறழ்ந்து காணற்கு உரியவை என்று தெரிந்து கொள்ள வேண்டும்" (காப்பியப் பார்வை, ப.231).

இவ் வகையில் நோக்கும் பொழுது, திருவள்ளுவருக்கும் சர்வக்ஞருக்கும் இடையே சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. பதச்சோறாக, ஊழ்வினைக் கொள்கையைப் பொறுத்த வரையில் இருவருக்கும் இடையே பெருத்த வேறுபாடு காணப்படுகின்றது.

ஊழையும் உப்பக்கம் காணலாம்

அனைவரும் விதிக்கு உட்பட்டோரே என்பது சர்வக்ஞரின் கருத்து; மேலும் அவர்,

"நேர்நின்று யார்தடுப்பினும் தொடரும் ஊழ்
யாரிடத்தும் எங்கிருப்பினும் ஆங்கிருக்கும் ஊழ்
போரிட்டு நிறுத்துவார்யார் சர்வக்ஞ?" (476)

என ஊழின் வலிமையை - 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' தன்மையை – எடுத்துரைப்பார். அறத்துப் பாலில் 'ஊழ்' என ஓர் அதிகாரமே படைப்பார் திருவள்ளுவர்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" (380)

என ஊழின் வலிமையை எடுத்து மொழிவதில் திருவள்ளுவர் சர்வக்ஞருடன் ஒன்றுபடுவார். அதே வேளையில் பொருட்பாலில் 'ஆள்வினை உடைமை' அதிகாரத்தில் திருவள்ளுவர் முயற்சிக்கு

மகுடம் சூட்டுவார்; 'முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்' (619) என முடிந்த முடிபாக உரைப்பார்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்" *(620)*

என்னும் திருவள்ளுவரின் சிந்தனை சர்வக்ஞரின் சிந்தனையோடு முற்றிலும் மாறுபட்டது; திருவள்ளுவரின் தனித்தன்மையை அடையாளம் காட்டுவது.

பெண்ணின் பெருந்தக்கது இல்

தன்மைகளின் அடிப்படையில் பெண்களைக் காமினி, சிந்தினி, சங்கினி, பத்மினி, அசுவினி எனப் பாகுபடுத்துவார் சர்வக்ஞர். இத்தகைய பாகுபாடு எதுவும் வள்ளுவத்தில் இல்லை. 'பெண்ணை நம்புதல் என்றுமே கேடுடைத்தாம்' (1005) என்றாற் போல் பெண்ணைத் தூற்றும் போக்கினைத் திருவள்ளுவரிடம் மருந்துக்குக் கூடக் காண இயலாது. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள?' (54) என 'வாழ்க்கைத் துணைநலம்' அதிகாரத்தில் வினவும் வள்ளுவரே. 'நாணுத் துறவுரைத்தல்' அதிகாரத்தில் 'பெண்ணின் பெருந்தக்கது இல்' (1137) என முடிந்த முடிபாக மொழிவார். 'வாழ்க்கைத் துணைநலம்' அதிகாரத்தில் இடம்பெறும் பிறிதொரு குறட்பாவில் 'மனைவிக்குப் பண்பிருப்பின் எது இல்லை? மனைவிக்குப் பண்பில்லை எனின் எது உண்டு?' என வினவுவதன் வாயிலாக இருவேறு பட்ட மனைவியரை – மாண்புடைய மனைவி, மாண்பிலா மனைவி என இரு வகையினரை – அடையாளம் காட்டுவார் திருவள்ளுவர்.

"இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?" *(53)*

சர்வக்ஞரும் அடிக்கடி சண்டையிடும் செருக்குடைய மனைவி யால் ஒருவனுக்கு வாழ்வில் நேரும் கேட்டினைக் குறித்துத் தமக்கே உரித்தான பாணியில் சுட்டிக்காட்டுவார்.

*"கடிக்கும் செருப்பினும் நாய்க்கடியே மேலாம்
தடித்துப் பேசும் மனைவியினும் - தீயில்
மடிதலே நன்றாம் சர்வக்ஞ." (986)*

செருப்புக் கடியை விட – நாய்க் கடியை விட – பொல்லாததாம் மனைவி கடி! தடித்துப் பேசும் மனைவியுடன் வாழ்வதை விடத் தீயில் வெந்து மடிதலே நன்றாம்!

பொதுமை நோக்கு

பரிமேலழகர் குறிப்பிடுவது போல், 'எல்லா நூலினும் நல்லன எடுத்து எல்லோர்க்கும் பொதுப்பட மெழிவது' திருவள்ளுவரின் தனித்தன்மை. சாதி மதம் நிறம் மொழி இனம் முதலான அனைத்து அடையாளங்களையும் தாண்டி, உலகளாவிய பொதுமை நோக்குடன் அறம் உரைப்பார் திருவள்ளுவர். சர்வக்ஞரோ சிவ மேன்மை, சிவ யோகம், சிவமயம், சிவனடியார், சிவனருள், சிவ பூசை, சிவ வழிபாடு முதலான பொருள்களில் பாடித் தம்மைத் தனியொரு சமயம் சார்ந்தவராக அடையாளப் படுத்திக் கொண்டுள்ளார்; 'அனைத்தும் சிவமே', 'சிவனினும் சத்தான பொதுக்கடவுளும் இல்' (163), 'தெய்வத்துள் சிவனுக்குத் தன்னிகரில்லர்' (165) என்றாற் போல் சிவ மேன்மையை வலியுறுத்தியும் பாடியுள்ளார்.

திருவள்ளுவர் 'பெரியர்', 'நிறைமொழி மாந்தர்', 'அறவோர்' என்றாற் போல் பொதுப்பட விழுமிய அறக் கருத்துக்களைக் கூறிச் செல்கின்றாரே ஒழிய, சர்வக்ஞரைப் போல் குருவின் தேவை, இலக்கணம், பெருமை, குருவருள் பற்றித் தனிப்படத் தம் நூலுள் எங்கும் பேசவில்லை.

திருவள்ளுவர் 'யாம்' என்னும் தன்மைப் பன்மை நடையில் மூன்றே மூன்று குறட்பாக்களை (61, 300, 1071) மட்டுமே இயற்றியுள்ளார்; 'பெறுமவற்றுள் யாமறிவது இல்லை' (மக்கட்பேறு), 'யாமெய்யாக் கண்ட வற்றுள் இல்லை' (வாய்மை), 'அவரன்ன ஒப்பரி யாங்கண்டது இல்' (கயமை) என்றாற் போல் பொதுநோக்கிலேயே தம்மை உளப்படுத்திப் பாடியுள்ளார். 'பார் மாந்தரிடம் பற்பல கற்று – பட்டறிவின் பர்வதமே

யான்' (15) எனச் சர்வக்ஞரைப் போல் திருவள்ளுவர் தம் நூலுள் எங்கும் தம்மைச் சிறிதளவும் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

தமிழில் சர்வக்ஞர் பற்றிய அறிமுகம்

தமிழ் கூறு நல்லுலகிற்குச் சர்வக்ஞரைப் பற்றிய அறிமுகம் இதுவரை ஓரளவே கிடைத்துள்ளது. புதுதில்லி சாகித்திய அகாதெமி 'இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை'யில் கன்னட மொழியில் சர்வக்ஞரைக் குறித்து ஓர் அறிமுக நூலை வெளியிட்டுள்ளது. இந் நூலின் தமிழாக்கமும் வெளிவந்துள்ளது. பேராசிரியர் க.த.திருநாவுக்கரசு 'சான்றோர் கண்ட திருவள்ளுவர்' (1979) என்ற நூலில் 'திருவள்ளுவரும் சர்வக்ஞரும்' என்ற தலைப்பில் 11 பக்க அளவில் ஒரு சிறுகட்டுரை எழுதியுள்ளார்.

இறையடியான் 'சர்வக்ஞர் உரைப்பா' என்னும் தலைப்பில் சர்வக்ஞரின் திரிபதிகளைத் தமிழில் மொழிபெயர்த்து நூல் வடிவில் தந்துள்ளார். இந்நூல் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடாக 2001-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. இந்நூலில் 1198 உரைப்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

அண்மையில் தமிழக அரசும், கருநாடக அரசும் திருவள்ளுவர், சர்வக்ஞர் ஆகிய இருவருக்கும் உருவச் சிலைகளை முறையே கரு நாடகத்திலும் தமிழகத்திலும் எடுத்திருப்பது வரலாற்றில் பொன் னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க தனிப்பெருஞ் சாதனை ஆகும். இச்சாதனை நிகழ்வைப் போற்றும் வகையில் 'செந்தமிழ்ச் செல்வி', 'புதுகைத் தென்றல்' முதலான இலக்கிய இதழ்கள் சர்வக்ஞரைக் குறித்துக் கட்டுரைகள் வெளியிட்டுச் சிறப்பித்துள்ளன.

'திராவிட மொழிகளின் மும்மூர்த்தி'களாகத் திகழும் திருவள்ளுவர், வேமனர், சர்வக்ஞர் என்னும் மூவரையும் குறித்து எதிர்காலத்தில் ஒப்பியல் நோக்கில் விரிவாக ஆய்வுகள் நிகழ்த்தப் பெறவேண்டியது காலத்தின் தேவை ஆகும்; ஒப்பியல் ஆய்வாளர்களின் தலையாய கடனும் ஆகும்.

8

சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்புத் திறன்

*"சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தங்கள் கதையை எம்மொழியிலிருந்தும் எந்நாட்டவரிடமிருந்தும் பெறவில்லை. அவை தமிழ்நாட்டிற்கேயுரியவை; இந்நாட்டிலே தோன்றி வளர்ந்து நிலவிய கதைகள். இக் காப்பியங்களுக்கு இது ஒரு தனிச் சிறப்பாகும்."**

- வி.அய். சுப்பிரமணியம்

சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதல் காப்பியம்; முத்தமிழ்க் காப்பியம்; நாடகக் காப்பியம்; குடிமக்கள் காப்பியம்; புதுமைக் காப்பியம்; புரட்சிக் காப்பியம்; நாட்டுக் காப்பியம்; சமுதாயக் காப்பியம்; ஒற்றுமைக் காப்பியம்; கொடியவன் இல்லாக் காப்பியம்; அவலக் காப்பியம். "காப்பியம் என்பது பேரிலக்கிய மாளிகை. அதன் சிறப்பு உரிய இடத்து உரிய பொருளை உரிய அளவில் அமைக்கு முறையில் உள்ளது" (கம்பர், ப.96) என்பர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கம். இவ்வரை விலக்கணத்தின் வழி நின்று, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரக் காப்பியத்தின் கட்டமைப்புத் திறனைக் கோடிட்டுக் காட்டுவது இக் கட்டுரையின் நோக்கம்.

காப்பியக் கதை அமைப்பும் கட்டமைப்புத் திறனும்

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு' என்பது கவியரசர் பாரதியாரின் புகழாரம். இப் புகழாரத்திற்கு முற்றிலும் தகுதி படைத்த காப்பியமாகச் சிலப்பதிகாரம்

---

* *காப்பியக் கட்டுரைகள், ப.53.*

விளங்குகின்றது. இத் தகுதிப்பாடு சிலப்பதிகாரத்திற்கு அமைவதற்கான முழுமுதற் காரணங்கள் இரண்டு. ஒன்று, அதன் கதை அமைப்பு. சோழ நாட்டுப் பெண் ஒருத்தி, பாண்டிய நாட்டில் தன் கணவனை இழந்து, சேர நாட்டில் பத்தினித் தெய்வமாக உயருவதைப் பாடும் கதை அமைப்பினைக் கொண்டதாகச் சிலப்பதிகாரம் விளங்குவது அதற்கு இயல்பாக அமைந்த தனிப்பெருஞ் சிறப்பாகும். மற்றொன்று, மிகவும் சிக்கலான இக் காப்பியக் கதையினை இளங்கோ அடிகள் கட்டமைத்துச் சென்றிருக்கும் தனித்திறம். 'விழைவு வெறுப்பற்ற ஒரு சேர முனி' என்பதால் அரிதினும் அரிதான இத் திறம் அவருக்குக் கைகூடியது எனலாம்.

மூன்று என்ற எண்ணின் செல்வாக்கு

சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்பில் மூன்று என்ற எண் பெறும் இடம் முதன்மையானது; சிறப்பானது. சாத்தனார், 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது, அடிகள் நீரே அருளுக!' என இளங்கோ அடிகளிடம் விடுத்த வேண்டுகோள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. 'அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆகும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' (வரி.55-57) என்னும் முப்பெரும் உண்மைகளே சிலப்பதிகாரக் காப்பியத்தின் பாவிகம் ஆகும். சிலப்பதிகாரம் புகார், மதுரை, வஞ்சி என்னும் மூன்று காண்டங்களால் - முப்பது காதைகளால் - ஆனது. கரிகாலன், நெடுஞ்செழியன், செங்குட்டுவன் என மூவேந்தர்கள்; சோழ நாடு, பாண்டிய நாடு, சேர நாடு என மூன்று நாடுகள்; புகார், மதுரை, வஞ்சி என மூன்று நகரங்கள்; காவிரி, வையை, பொருநை என மூன்று ஆறுகள்; கண்ணகியின் சிலம்பு, பாண்டிமா தேவியின் சிலம்பு, பொற்கொல்லன் கவர்ந்து வைத்திருக்கும் தேவியின் சிலம்பு என மூன்று சிலம்புகள்; 'அடைக்கலக் காதை'யில் மாடல மறையோன் 'இம்மைச் செய்தன யானறி நல்வினை' எனத் தொடங்கி நினைவுகூரும் கோவலனுடைய வாழ்வில் நிகழ்ந்த மூன்று நிகழ்ச்சிகள்; மாதவி ஆடலும் பாடலும் அழகும் என்று இக் கூறிய மூன்றின் ஒன்று குறைபடாத சிறப்பிற்கு உரியவள்; காப்பியக் கதை அமைப்பில்

முடிகெழு வேந்தர் மூவர்க்கு நிகராக முதன்மை பெறும் எளிய மக்களான வேட்டுவர், இடையர், குறவர் ஆகிய மூவர். இங்ஙனம் சிலப்பதிகாரக் காப்பியம் முழுவதும் மூன்று எண் தனி ஆட்சி செலுத்தக் காண்கிறோம்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் மூன்றுக்கு அடுத்த இடத்தைப் பெறுவது இரண்டு என்ற எண். கோவலன் கண்ணகியோடும் மாதவியோடும் வாழ்ந்த இரு வகை வாழ்க்கை, இரு வகை நிலவு, 'இந்திர விழவூரெடுத்த காதை'யில் கண்ணகி, மாதவி இருவரும் வடிக்கும் இரு வகைக் கண்ணீர், கோவலன் கண்ணகியைப் புகழ்ந்து உரைக்கும் இருவகைப் பாராட்டு மொழிகள், மாதவி கோவலனுக்கு எழுதும் இரு வகைக் கடிதங்கள், கோவலன் கண்ணகியைப் பிரிவும் இரு வகைப் பிரிவுகள் என்றாற் போல் சிலப்பதிகாரக் காப்பியத்தில் இரண்டு என்ற எண் பெறும் இடம் மிகவும் இன்றியமையாதது.

நாயகி காப்பியம்

சிலப்பதிகாரம் நாயகிக்குச் சிறப்புத் தரும் காப்பியம்; நாயகனை விட நாயகிக்கு ஒரு படி மேலாகத் தலைமை இடத்தினை நல்கும் தனித்தன்மை வாய்ந்த காப்பியம். இதற்கு ஏற்ற வண்ணம் காப்பிய நிகழ்வுகளைக் கட்டமைத்துச் செல்கின்றார் இளங்கோ அடிகள். ஓர் உதாரணம்:

சிலப்பதிகாரத்தின் முதல் காதையான 'மங்கல வாழ்த்துப் பாட'லில் இயற்கை வாழ்த்து, புகார்ச் சிறப்பு ஆகிய இரண்டினையும் தொடர்ந்து காப்பிய மாந்தர் அறிமுகம் இடம்பெறுகிறது. இதில் காப்பிய நாயகனான கோவலனை முதலில் அறிமுகம் செய்யாமல், நாயகியான கண்ணகியையே அறிமுகம் செய்கின்றார் இளங்கோ அடிகள். வயது அடிப்படையில் பார்த்தாலும் பதினாறு வயதான கோவலனின் பண்பு நலனைப் பற்றி முதலில் பேசாமல், பன்னிரண்டே வயதான கண்ணகியின் பெருமையையே விதந்து பேசுகின்றார் அடிகள். இதன் குறிப்பினைச் சிலப்பதிகார உரையாசிரியர்கள் இருவரும் நன்கு எடுத்துக் காட்டியுள்ளனர். "கண்ணகியை முன் கூறிற்று, கதைக்கு நாயகியாதலின்"

(சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், ப.34) என்கிறார் அரும்பத உரையாசிரியர். "கண்ணகியை முற்கூறினார், பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்" (மு.நூ., ப.40) என்பது அடியார்க்கு நல்லார் தரும் அரிய உரை விளக்கம்.

நாயகி காப்பியம் - அதிலும் சிறப்பாகப் பத்தினிக் காப்பியம்- என்பதற்கு ஏற்ற வகையில், கண்ணகியின் பாத்திரப் படைப்பினைத் திட்பமும் நுட்பமும் ஒட்பமும் விளங்கச் செதுக்கியுள்ளார் இளங்கோ அடிகள். கண்ணகி பின்னாளில் பத்தினித் தெய்வமாக உயரப் போவதை முன்னரே குறிப்பாகப் புலப்படுத்துவது போல் - கோடிட்டுக் கட்டுவது போல் - 'மங்கல வாழ்த்துப் பாட'லிலேயே மூன்று இடங்களில் கண்ணகியைக் கற்பில் சிறந்த அருந்ததியுடன் ஒப்பிட்டு அடிகள் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"*தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்...*"

(மங்கல வாழ்த்துப் பாடல், வரி.27)

"*சாலி ஒரு மீன் தகையாள்*" *(ம.வா.பா., வரி.51)*

"*அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை*"

(ம.வா.பா., வரி.63)

'கண்ணகியின் திறம் தீதிலா வடமீனின் திறம்' எனக் கூறாது, 'தீதிலா வடமீனின் திறம் இவள்திறம்' எனக் கண்ணகிக்கு உயர்வு கொடுத்து அடிகள் பாடி இருப்பது ஒரு சிறப்பு; நுட்பம்.

காப்பிய நாயகியான கண்ணகி மதுரைக் காண்டத்தில் கணவனை இழந்த கைம்மை நிலையிலும் நாடாளும் மன்னனுடன் வழக்குரையாடிச் சிலம்பின் வென்ற சேயிழை ஆகிறாள். வஞ்சிக் காண்டத்தில் அவள் பத்தினிக் கடவுள் என்னும் உயர்நிலையை அடைகிறாள். இதற்கான ஆயத்தத்தைப் புகார்க் காண்டத்திலேயே நன்கு திட்டமிட்டுச் செய்துள்ளார் இளங்கோ அடிகள். புகார்க் காண்டத்தில் கண்ணகி பேசும் இடங்கள் மிகவும் குறைவு; இன்னமும் துல்லியமாகச் சொல்ல வேண்டும் என்றால் மூன்றே மூன்று இடங் களிலேயே கண்ணகி புகார்க் காண்டத்தில் பேசுகிறாள்; அதுவும்

சில சொற்களே அவள் பேசுகிறாள். 'சிலம்புள கொணம்' (கனாத்திறம் உரைத்த காதை, வரி.73), 'பீடு அன்று' (கனாத் திறம் உரைத்த கதை, வரி.64), 'மதுரை மூதூர் யாது?' (நாடு காண் காதை, வரி.41) என மூன்று இடங்களில் ஏழு சொற்களின் அளவிலேயே புகார்க் காண்டத்தில் கண்ணகியின் பேச்சு அமைந்துள்ளது. ஆனால், மதுரைக் காண்டத்திலோ கண்ணகியின் சொல்லாடல் திறன் பன்மடங்கு வெளிப்படு கின்றது; 'வழக்குரை காதை'யில் 'தேரா மன்னா' (வரி.50) எனப் பாண்டிய மன்னனை விளிப்பதிலேயே அதன் முழுப் பரிமாணமும் புலனாகி விடுகின்றது. இங்ஙனம் புகார்க் காண்டத்தில் 'பேசா மடந்தை'யாக இருந்த கண்ணகியை, மதுரைக் காண்டத்தில் பேச்சுத் திறத்தாலேயே நாடாளும் மன்னனை வெற்றி கொள்ளும் ஒரு வீர நங்கையாகப் படைத்துக் காட்டி இருப்பது இளங்கோ அடிகளின் காப்பியக் கட்டமைப்புத் திறனின் மணிமகுடம் எனலாம்.

காப்பியக் கட்டமைப்பில் வெளிப்படும் இளங்கோ அடிகளின் தனித்தன்மை

சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்பில் இளங்கோ அடிகளின் தனித்தன்மை பளிச்சிட்டு நிற்கும் செல்நெறி ஒன்று உண்டு. அது, ஒருகாதையில் கையாளும் சொல்லையோ தொடரையோ பொருளையோ பல காதைகள் தாண்டி - பல நூறு வரிகளுக்கும் அப்பால் - இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்பப் பொன்னேபோல் போற்றிக் கையாளுவது ஆகும். இதற்கான சான்றுகளைச் சிலப்பதிகாரத்தில் பரக்கக் காணலாம்.

'மங்கல வாழ்த்துப் பாட'லின் முடிவில் கோவலன் - கண்ணகி இருவரையும், 'காதலற் பிரியாமல், கவவுக்கை ஞெகிழாமல், தீது அறுக!' (வரி.61-62) என மகளிர் வாழ்த்துகின்றனர். சிலப்பதிகாரத்தின் ஏழாவது காதையான 'கானல் வரி'யில் கோவலன் ஊழ்வினையால் மனம் மாறுபட்டு, மாதவியைப் பிரிந்து செல்வதைப் பாடும் இடத்தில்,

> *"யாழ்இசைமேல் வைத்து, தன் ஊழ்வினை வந்து*
> *உருத்தது ஆகலின்,*

உவவு உற்ற திங்கள் முகத்தாளைக்
கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்'' (பா.52)

ஏவலாளர் உடன் சூழ்தர எழுந்து போனான் எனக் குறிப்பிடுவார் இளங்கோ அடிகள். முதல் காதையில் இடம்பெற்ற 'கவவுக்கை ஞெகிழாமல்' என்னும் தொடரை ஆறு காதைகள் தாண்டி ஏழாவது காதையில் நினைவாகக் 'கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்' என இளங்கோ அடிகள் கையாண்டிருக்கும் சதுரப்பாடு போற்றத் தக்கதாகும்.

இளங்கோ அடிகளின் காப்பியக் கட்டமைப்புத் திறனுக்குப் பிறிதொரு சான்று: புகார்க் காண்டத்தின் முதல் காதையான 'மங்கல வாழ்த்துப் பாட'லில்,

"மண்தேய்த்த புகழினான்; மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
'கண்டுஏத்தும் செவ்வேள்' என்று
இசைபோக்கிக் காதலால்
கொண்டு ஏத்தும் கிழமையான்; கோவலன்
என்பான் மன்னோ!' (வரி.36-39)

என்று கோவலனை அறிமுகம் செய்வார் இளங்கோ அடிகள். 'மண்தேய்த்த புகழ்' என்பதற்குப் 'பூமி சிறுகும்படி வளர்ந்த புகழ்' (ப.35) என்பர் அரும்பத உரையாசிரியர்.

மதுரைக் காண்டத்தின் உயிர்நிலைக் காதையான 'கொலைக் களக் காதை'யின் முடிவில் கல்லாக் களிமகன் ஒருவன் வாளால் எறிய, கோவலன் குருதி சோர, மண்ணின் மேல் மாண்டு வீழ்வதைப் பாடும்போது,

"மண்ணக மடந்தை வான்துயர் கூரக்
காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்துஎன்"
(வரி.215-217)

எனக் குறிப்பிடுவார் இளங்கோ அடிகள். 'மண் தேய்த்த புகழினான்' எனத் தொடங்கும் கோவலனின் அறிமுகம், அவன் 'மண்ணக மடந்தை வான்துயர் கூர' வீழ்வதைச் சுட்டுவதோடு நிறைவு பெறுவது நோக்கத் தக்கது. மண்ணில் தொடங்கிய கோவலன் அறிமுகம், மண்ணில் முடிவடைவது ஒரு நயம்; நல்ல இயைபு. காப்பியக் கட்டமைப்புத் திறனில் இளங்கோ அடிகள் எத்துணைக் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்பதற்குக் கட்டியம் கூறும் இடம் இது!

நாடகக் குறிப்பு முரணின் நயத்தகு ஆட்சி

சிலப்பதிகாரக் காப்பியத்தில் இளங்கோ அடிகள் திறம்படக் கையாண்டிருக்கும் ஓர் உத்தி நாடகக் குறிப்பு முரண் (Dramatic Irony) ஆகும். பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இதனை 'நாடகக் கீழறை' எனச் சுட்டுவார்.

அவலக் காப்பியமான சிலப்பதிகாரம் கோவலன் - கண்ணகி திருமணத்துடன் மங்கலமாகத் தொடங்குவது ஓர் அழகிய முரண். 'மங்கல வாழ்த்துப் பாட'லில் நாடகக் குறிப்பு முரண் சிறந்து விளங்கும் ஓர் இடம்: திருமணத்தின் போது கோவலனையும் கண்ணகியையும் வாழ்த்துகின்ற மகளிர்,

> *"காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்*
> *தீது அறுக'* (வரி.61-62)

என்று வாழ்த்துகின்றனர்; 'காதலர்ச் சேர்ந்து, கவவுக்கை பிணைந்து. நலம் விளைக' என உடன்பாட்டு வாய்பாட்டால் கூறாமல், "பிரியாமல்', 'ஞெகிழாமல்' என எதிர்மறை வாய்பாட்டால் கூறுகின்றனர். இப் பிரிவும் ஞெகிழ்வுமே கூடிய விரைவில் கண்ணகி வாழ்வில் நேரப் போகின்றன என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துவன போல அச்சொற்கள் அமைந்துள்ளன. வாழ்த்துரைக்கும் மகளிர், கண்ணகி வாழ்வில் நடக்கப் போகும் துன்பத்தை முன்னமே உணர்த்துவது போல் கூறுகின்றனர்.

'கனாத் திறம் உரைத்த காதை'யில் கோவலன் மதுரை சென்று பொருள் ஈட்ட எண்ணியுள்ள தனது கருத்தை வெளியிட்டு,

விடியுமுன் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்பட்டுச் செல்ல எண்ணு கிறான்.

"சிலம்பு முதலாகச்சென்ற கலனோடு
உலந்தபொருள் ஈட்டுதல் உற்றேன் மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச் சென்று; என்னோடு இங்கு
ஏடுஅலர் கோதாய் எழுக" *(வரி.74-76)*

என அவன் கண்ணகியிடம் கூறுகிறான். இங்கே 'சிலம்பை முதலாகக் கொண்டு இழந்த பொருளை எல்லாம் ஈட்டுவேன்' என நம்பிக்கையோடு கண்ணகியிடம் மொழிகிறான் கோவலன். ஆயின், விதியின் கையோ வேறு விதமாக எழுதி மேற்செல்கின்றது; சிலம்பே கோவலனின் வாழ்க்கை முடிவுக்கு - இறப்புக்கு - காரணமாக அமைந்து விடுகின்றது. கோவலன் எதை *முதலாகக்* கருதினானோ, அதுவே அவனது வாழ்க்கையை *முடிவுக்குக்* கொண்டு வருவதாகப் படைப்பது சிறந்த நாடகக் குறிப்பு முரண் ஆகும்.

'பதியெழுபு அறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகார்' *(வரி.15-16)*

என 'மங்கல வாழ்த்துப் பாட'லில் புகார் நகரின் பெருமையை விதந்து கூறுகிறார் இளங்கோ அடிகள். ஆயின், எந்த நகரம் குடிமகள் பெயர்ந்தறியாத சிறப்பினை உடையது என அடிகள் உயர்வாக உரைத்தாரோ, அந் நகரினின்று தான் காப்பிய நாயகன், நாயகி ஆகிய இருவரும் பெயர்ந்து செல்ல நேரிடுகின்றது. இதேபோல், மதுரை மாநகரைப் பற்றிக் குறிப்பிடும் போதும், இளங்கோ அடிகள் 'தீதுதீர் மதுரை' (நாடு காண் காதை, வரி.58; அடைக்கலக் காதை, வரி.9) என நெஞ்சாரப் பாராட்டிக் கூறுகின்றார்; ஆயின், அம்மதுரை மாநகர் தான் கண்ணகியின் வாழ்வில் 'தீது சேர் மதுரை'யாக அமைந்தது. இதுவும் ஒரு நுட்பமான நாடகக் குறிப்பு முரண் ஆகும்.

'கொலைக்களக் காதை'யில் கண்ணகியிடம் விடை பெற்றுச் செல்லும் நிலையில் கோவலன்,

"சீறடிச் சிலம்பில் ஒன்றுகொண்டு யான்போய்
மமாறி வருவன் மயங்காது ஒழிக' (வரி.92-93)

என்று ஆறுதல் கூறிப் பிரிந்து செல்கிறான். இங்கும் 'யான் போய் மாறி வருவன்' என்னும் வரியில் நாடகக் குறிப்பு முரணின் நயமான ஆட்சியைக் காண்கிறோம்.

காதைகளின் வரிசை முறையில் காணலாகும் நயமும் நுட்பமும்

சிலப்பதிகாரக் காப்பியம் முப்பது காதைகளைத் தன்னகத்தே கொண்டது. இக் காதைகளின் வரிசை முறையினை நயமும் நுட்பமும் விளங்க அமைத்துச் சென்றுள்ளார் இளங்கோ அடிகள். புகார்க் காண்டம் 'மங்கல வாழ்த்துப் பாட'லில் தொடங்கி, 'நாடு காண் காதை'யில் நிறைவடைகின்றது. மதுரைக் காண்டம் 'நாடு காண் காதை'க்கு முரணாகக் 'காடு காண் காதை'யுடன் தொடங்குகின்றது; 'கட்டுரை காதை'யுடன் முடிவடைகின்றது. சிலப்பதிகார வஞ்சிக் காண்டம் கண்ணகிப் பெருந்தெய்வத்துக்கு இமயமலைக்கண் கல் கண்டதையும் கால் கொண்டதையும் கங்கைக் கண் நீர்ப்படுத்ததையும் வஞ்சிக் கல் நட்டதையும் எல்லோரும் வழுத்தியதையும் ஐந்து காதைகளில் விரித்துரைக்கின்றது. காட்சிக் காதை, கால்கோள் காதை, நீர்ப்படைக் காதை, நடுகல் காதை, வாழ்த்துக் காதை என்ற தலைப்புக்களில் இளங்கோ அடிகள் வஞ்சிக் காண்டத்தைப் படைத்திருப்பது நுண்ணிதின் நோக்கத்தக்கது. இங்ஙனம் அவர் படைப்பதற்கான குறிப்பினை அருளியது,

"காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை, வாழ்த்தல் என்று
இருமூன்று வகையில் கல்லொடு புணர"
(தொல்காப்பியம், 1006)

என்ற தொல்காப்பியப் புறத்திணையில் நூற்பா (5) ஆகும். தொல்காப்பியர் வெட்சித் திணையில் வீரம் சான்ற ஆடவரது

கல்லெடுப்புக்குச் சுட்டும் துறைகளின் பெயர்களை இளங்கோ அடிகள் சிலம்பின் வென்ற சேயிழையும் உரைசால் பத்தினியுமான கண்ணகியின் கல்லெடுப்புக்குப் பயன்படுத்திக் கொண்டிருப்பதை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அறக்குடியில் பிறந்த ஒரு குடும்பப் பெண்ணான கண்ணகி இங்கே இமயக் கல் எடுப்பதற்கு உரியவள் ஆவது குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் முடிகெழு வேந்தர் மூவர்க்கு நிகராகச் சிறப்புப் பெறுவோர் இன்னமும் மூவர் உள்ளனர். அவர்கள் வேட்டுவர், இடையர், குரவர் எனச் சமுதாயத்தில் எளிய நிலையில் வாழ்ந்து வரும் குடிமக்கள் ஆவர்; காப்பியக் கட்டமைப்பில் இவர்கள் பெறும் பங்கு சிறப்பானதாகும். மதுரைக் காண்டத்தில் இடம்பெறும் 'வேட்டுவ வரி'யும், 'ஆய்ச்சியர் குரவை'யும், வஞ்சிக் காண்டத்தில் இடம்பெறும் 'குன்றக் குரவை'யும் காப்பியக் கட்டமைப்பு நோக்கில் மிகவும் இன்றியமையாதவை ஆகும்.

சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியமே என்னும் கருத்தினைப் பிறிதொரு கோணத்தில் நின்றும் நிறுவலாம். இளங்கோ அடிகள் தம் காப்பியத்துள் வேடர் ('வேட்டுவ வரி'), இடையர் ('ஆய்ச்சியர் குரவை'), குறவர் ('குன்றக் குரவை') என்னும் ஏழை எளிய குடிமக்களின் வாழ்வியலை அழகுறப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். அவர் பத்தினிக் கடவுளாம் கண்ணகியை இடைக்குல மடந்தையிடமே (மாதரியிடமே) அடைக்கலமாக ஒப்படைக்கிறார்; கண்ணகியைப் போற்றிக் கூற வேட்டுவர்களையே பயன்படுத்துகிறார்; கண்ணகி விண்ணகம் செல்லும் அரிய காட்சியைக் காணும் நற்பேற்றினைக் குறவர்களுக்கே நல்குகின்றார். நாடாளும் முடிமன்னர்களுக்கோ பிற பெருங்குடி மக்களுக்கோ நல்காத இச் சிறப்பினைக் கள்ளங்கரவறியாத எளிய குடிமக்களுக்கே அடிகள் நல்குகின்றார்.

இங்ஙனம் தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன்முதலாகக் காப்பியம் எனத் தோன்றிய சிலப்பதிகாரம், குடிமக்கள் காப்பியமாக விளங்குவது தமிழ் மொழிக்கே அமைந்த தனிச்சிறப்பாகும்.

காப்பியத்தில் கோவலனின் உயர்பண்புகள் பேசப்படும் இடம்

காப்பிய நாயகனாக கோவலனின் பாத்திரப் படைப்பினையும் இளங்கோ அடிகள் தமக்கே உரிய தனித்திறனோடு கட்டமைத்துச் சென்றுள்ளார். அடிகள் புகார்க் காண்டத்தில் கோவலனின் பெருமை களை வெளிப்படையாக எடுத்துப் பேசவில்லை. அது மட்டும் அன்று; 'மங்கல வாழ்த்துப் பாட'லில் அவர், 'மதிமுக மடவார் தம் பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டி, கண்டு ஏத்தும் செவ்வேள் என்று இசை போக்கி, காதல் கொண்டு ஏத்தும் கிழமையான்' என்றே கோவலனை அறிமுகம் செய்கின்றார். மாறாக, கண்ணகியை, 'மாதரார் தொழுது ஏத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்' எனக் குறிப்பிட்டு, அவளது பண்புநலன்களை 'மங்கல வாழ்த:துப் பாட'லில் போற்றிக் கூறுகின்றார். மேலும். பாணரொடும் பரத்தரோடும் அலைந்து திரியும் கோவலனையே அடிகள் புகார்க் காண்டத்தில் காட்டியுள்ளார்; காப்பியத் தலைவனான கோவலனை 'இந்திர விழவூரெடுத்த காதை'யில் அடிகள் ஒரு சிறு தென்றலுக்கு உவமையாகக் குறிப்பிட்டுள்ளார் (வரி.200-201). இதே நிலையே காப்பியத்தில் தொடர்ந்து கோவலனுடைய சிறந்த பண்புகள் ஒன்றையும் அறியாமல் அவன் மதுரையில் கொலையுண்டான் என்ற செய்தியை மட்டும் அறிவோமானால், நம் உள்ளம் அவனது இறுதி முடிவுக்காகச் சிறிதும் வருந்தாது; 'கற்பரசி யான கண்ணகியைப் புறக்கணித்தவன் தானே? மாதவியையும் ஆடல் மகள் என்று பழித்துப் பேசியவன்தானே? அவனுக்கு நன்றாக வேண்டும், இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்' என்ற எண்ணமே நம் நெஞ்சில் மேலோங்கி நிற்கும். காப்பியத் தலைவன் சிறந்தவனாக – உயர்ந்த பண்பினனாக - இருந்தால் தான் நம் உள்ளம் அவனடைய மரணத்திலே முழுமையான முறையில் ஈடுபட்டுக் கலங்கும்; 'ஐயோ!' என்று இரங்கிப் பரிவு கொள்ளும்; ஊழின் பெருவலியை எண்ணி மருளும். இளங்கோ அடிகள் சிறந்த கலைஞர் ஆதலால் நம் உள்ளம் மிகவும் ஈடுபட்டுக் கலங்கும் வண்ணம் கோவலனின் பாத்திரப் படைப்பினைத் தம் காப்பியத்தில் கட்டமைத்துச் சென்றுள்ளார்.

கோவலன் கொலை செய்யப்படுவதற்கு முன் அவனுடைய பெருமையைக் காப்பியத்தில் நம் மனங்கொள்ளுமாறு கூறிவிட

வேண்டும்; புகார்க் காண்டம் பேசாத பெருமையை மதுரைக் காண்டம் உரிய நேரத்தில் தக்க முறையில் பேசியே தீரவேண்டும். இந்த வகையில் 'அடைக்கலக் காதை' காப்பியத்தின் முடிமணியாக அமைகின்றது. முப்பது காதைகளால் ஆன சிலப்பதிகாரத்தில் செம்பாதியான இடத்தில் - பதினைந்தாம் காதையாக - அமைவது 'அடைக்கலக் காதை' ஆகும். எனவே காப்பியத்தின் நடுநாயகமாகவும் இக் காதை விளங்குகின்றது. இதனைத் தொடர்ந்து வரும் காதை 'கொலைக்களக் காதை'. எனவே, கோவலனின் பெருமையைப் பேச-அவனது உயர்பண்புகளை எடுத்தரைக்க - இதனை விட்டால் வேறு இடமே இலலை என்பதையும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும் எவரும் உணர்ந்து கொள்ளலாம். இடம் மட்டுமன்று, யார் வாயிலாகக் கோவலனின் உயர்பண்புகளைக் கூறுவது என்பதிலும் காப்பிய ஆசிரியர் தனிக்கவனத்தைச் செலுத்தியுள்ளார்.

கோவலனின் பெருமையை, அவனது உயர்பண்புகளைக் கண்ணகியோ மாதவியோ அவனது உற்றார் உறவினரோ மற்றோரோ கூறுவதை விட, உலகம் முழுவதும் சுற்றிய ஒருவன் - அறிவிலே சிறந்தவன் - ஒழுக்கத்திலே உயர்ந்தவன் - பலவகையான மக்களுடனும் பண்பாடுகளுடனும் பல்லாண்டுக் காலம் கலந்து பழகிப் பரந்த அனுபவம் பெற்றவன் - கோவலனைப் பல்லாற்றானும் நன்கு அறிந்த ஒருவன் - அவனைப் பற்றிக் கூறுவதே சாலவும் பொருத்தமானதாக இருக்கும்; கூறுவது அனைத்தும் உண்மையே என்று எல்லோரும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும் இருக்கும். மிகுந்த அருமைப்பாடும் பொறுப்புணர்வும் வாய்ந்த இப் பணியை நிறைவேற்றுவதற்கு இளங்கோ அடிகள் மாடல மறையோனைப் பயன்படுத்திக் கொள்கின்றார். சேரன் செங்குட்டுவனுக்கு வழிகாட்டியாய், அவன் உள்ளத்தை மறப் போரினின்றும் மீட்டு, அறத்தின் வழியே திருப்பி விடுகின்ற - மடை மாற்றம் செய்கின்ற - மாடலனின் ஆற்றலை வஞ்சிக் காண்டத்தில் சிறப்பாகக் காண்கிறோம். இத்தகைய உயரிய நலன்களும் பரந்த அனுபவமும் கொண்ட ஒருவன் கோவலனைப் புகழ்வானானால், அப் புகழ்ச்சி உள்ளதை உள்ளபடி கூறும் தன்மை நவிற்சியாக இருக்கும், உயர்வு நவிற்சியாக இருக்காது.

"இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி யுழந்துஇத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்தகோ பாலநீ?' (அடைக்கலக் காதை, வரி.91-94)

என்று கோவலனின் கடந்த கால வாழ்க்கையையும் நிகழ்கால வாழ்க்கையையும் ஒப்பிட்டுக் கூறுவது நம் உள்ளத்தில் பசுமரத்தாணி போலப் பதிகிறது. 'கருணை மறவன்', 'செல்லாச் செல்வன்', 'இல்லார் செம்மல்' என்று சிறப்புப் பெயர்களை மட்டும் கோவலனுக்குச் சூட்டி மகிழாமல், அங்ஙனம் போற்றிப புகழ்வதற்கான கோவலனின் செயல் திறங்களையும் நம் மனங்கொள்ளும் வண்ணம் மாடலன் விரித்துரைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"புகார்க் காண்டத்தில் கோவலனது நற்செயல்களைப் பேசாது விடுத்ததும், அவன் மதுரையில் புகுந்து மாள்வதற்கு முன்னால், தகுந்த நாடகச் சூழலை அமைத்து, மாடலன் வாக்கால் அவனது பெருமையைப் புதுமையாகப் புலப்படுத்தியதும் ஆசிரியரின் காப்பியப் படைப்புத் திறனுக்குப் பெருங்சான்றாம" என்பர் அறிஞர் **எஸ்.இராமகிருஷ்ணன்** (இளங்கோவின் பாத்திரப் படைப்பு, ப.37).

சங்கச் சான்றோர் மொழியில் குறிப்பிடுவது என்றால், இளங்கோ அடிகளின் காப்பியக் கட்டமைப்புத்திறன் 'விரிப்பின் பெருகும், தொகுப்பின் எஞ்சும்' எனலாம். ■

9

சிலம்பில் ஊழ்

"விதி சிலரைத் தன் சிறகுகளில் தூக்கிச் செல்லும்,
*சிலரைத் தரையிலே போட்டு இழுத்துச் செல்லும்."**

- ஸ்பெயின் பழமொழி

"ஒன்றே வேறே என்றுஇரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"

(தொல்.பொருள். 1039)

என்பது தொல்காப்பியக் களவியல் நூற்பா. இங்கே ஒத்த தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே காதல் எழுவதற்குக் காரணமாக ஊழினைச் சுட்டுவார் தொல்காப்பியர். 'ஒன்றி உயர்ந்த பால்' என்னும் தொடருக்கு 'ஒன்றுபடுத்த வல்ல, உயர்ந்த ஊழ்' என்று பொருள்.

"நீர்வழிப் படூஉம் புணைபோல ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்"

(புறநானூறு, 192)

என்பது கணியன் பூங்குன்றனாரின் நிறைமொழி. 'நீரின் வழியே போம் மிதவை போல, அரிய உயிர் ஊழியின் வழியே படும் என்பது நன்மைக் கூறுபாடு அறிவோர் கூறிய நூலானே தெளிந்தேம்' என்பது இவ்வடிகளின் பொருள். இங்கே 'முறை' என்ற சொல்லால் 'ஊழ்' குறிக்கப்பட்டுள்ளது. "ஊழின் உண்மையும் அதன் செயற்கூறும் காட்சியளவையானன்றிக்

----

* ப.ராமஸ்வாமி, உலகப் பழமொழிகள், ப.33.

கருத்தளவையானறிந்து நூல்களால் குறிக்கப்பட்டிருத்தலின், 'திறவோர் காட்சியிற் றெளிந்தன' மென்றார்" (புறநானூறு : பகுதி 1, ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரை, ப.416) என்னும் உரையாசிரியரின் விளக்கம் சிந்தனைக்கு விருந்தாவது.

செம்புலப் பெயல்நீராரின் குறுந்தொகைப் பாடல் (40) முன்பின் அறிமுகம் இல்லாத - எந்த வித உறவோ தொடர்போ இல்லாத - இருவருக்கு இடையே எழும் காதல் உணர்வைப் போற்றிக் கூறும். 'செம்புலப் பெயல்நீர் போல, அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே' என்பன அப்பாடலின் முடிப்பு வரிகள். செம்புலப் பெயல் நீராரின் புகழ்பெற்ற இப் பாடல் இடம்பெற்ற குறுந்தொகையிலேயே பிறிதொரு பாடலும் காணப்படுகின்றது. மோதாசனார் என்னும் புலவர் இயற்றிய அப்பாடல் (229), இளமையில் காரணமே இல்லாமல் அடிக்கடி சிறுசிறு சண்டைகள் போட்டுக் கொண்டிருந்த ஓர் ஊரைச் சார்ந்த இருவர், பின்னாளில் வளர்ந்த நிலையில் காதல் உணர்வால் ஒன்றுபட்டு மலர் மாலை போல் இணைந்து உடன்போக்கு மேற்கொண்டு செல்வதைப் பார்த்து ஊரார், 'நல்லை மன்ற அம்ம பாலே' என வியந்து பேசுவதைப் பதிவு செய்துள்ளது. "தம்முட் கலாம் விளைத்தாரை ஒன்றுபடுத்திப் பாலை நிலத்தில் உடன்போகச் செய்வித்தமையின் 'நல்லை மன்றம்ம' என்று வியந்தனர். இளமையில் கலாம் விளைத்ததை அறிந்தவராதலின் இது கூறினார்" (குறுந்தொகை மூலமும் உரையும், ப.428) என்னும் உ.வே.சாமிநாதையரின் உரை விளக்கம் இங்கே நினைவுகூரத் தக்கதாகும்.

திருக்குறள் அறத்துப் பாலின் இறுதி அதிகாரம் 'ஊழ்' (38). "அ∴தாவது, இருவினைப் பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒருபொருட் கிளவி" (திருக்குறள், பரிமேலழகர் உரை, அறத்துப் பால், தொகுதி I, ப.275) என்பது பரிமேலழகர் தரும் அதிகார விளக்கம். வள்ளுவரின் ஊழ்க் கொள்கை தனித்தன்மை வாய்ந்தது; சிந்திக்கத் தூண்டுவது. 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினும் தான்முந் துறும்' (380) என்பது 'ஊழ்' (38)

அதிகாரத்தின் கடைசிக் குறட்பா; 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பவர்' (620) என்பது 'ஆள்வினை உடைமை' (62) அதிகாரத்தின் இறுதிக் குறட்பா. மேலோட்டமாகப் பார்ப்பவர்க்கு இது முரண் போலத் தோன்றும்; ஆயின், ஆழ்ந்து சிந்திப்பவர்க்கு வள்ளுவரின் உள்ளக் கருத்து புலனாகும். பேராசிரியர் எஸ்.இராமகிருஷ்ணன் குறிப்பிடுவது போல், "நுணுகி ஆராய்ந்தால், இந்த இரண்டு குறள்களுக்கும் இடையில் முரண்பாடு இல்லை என்பது புலனாகும். வள்ளுவர் பல நிலைகளிலுள்ள மக்களுக்கு அறம் போதிக்கிறார் ... ஆள்வினையுடைமை அதிகாரம் பாடுபடும் மக்களுக்கே அறம் கூறுவது வெளிப்படை. ஆள்வினை என்றால் உடல் முயற்சி என்றே பொருள்படும். ஊழ் அதிகாரமோ செல்வந்தர்களுக்கு அறம் போதிக்கிறது. இந்த உண்மையை உணர்ந்தால், வள்ளுவர் இடத்துக் கேற்றபடி முன்னுக்குப் பின் முரணாக எழுதவில்லை என்பது புலனாகும்" (திருக்குறள்: ஒரு சமுதாயப் பார்வை, பக்.74-75).

தொல்காப்பியர். கணியன் பூங்குன்றனார், திருவள்ளுவர் ஆகியோர் வழிவந்த இளங்கோ அடிகளும் ஊழின் வலிமையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராக விளங்குகின்றார். எனினும், இங்கே யாவரும் நினைவில் கொள்ள வேண்டிய அடிப்படையான கருத்து ஒன்று உண்டு. இளங்கோ அடிகள் தம் தனிவாழ்வில் ஊழை வெற்றி கொண்டவர்; 'அரசாளும் திரு உண்டு' எனக் கூறிய நிமித்திகனின் வாக்கைப் பொய்யாக்கி, அக் கணமே துறவு வாழ்வினை மேற்கொண்டவர். ஆயின், அவர் படைத்த காப்பியத்தின் பாவிகம் மூன்றனுள் முத்தாய்ப்பானது 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பது; 'ஊழ்வினை - முறைமையாகிய பழவினை. உருத்துவந்து — வெளிப்பட்டு வந்து' என இதற்கு இரத்தினச் சுருக்கமாகப் பொருள் விளக்கம் உரைப்பர் அரும்பத உரையாசிரியர். அடியார்க்கு நல்லாரோ சற்றே விரித்து, 'முன்செய்த இருவினையும் செய்த முறையே செய்தோனை நாடி வந்து உருக்கொண்டு நின்று நுகர்விக்கும்' (சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், ப.24) எனப் பொருள் கூறுவர். ஊழ் வேறு, ஊழ்வினை வேறு. ஊழ் என்பது முறைமை. மறுபிறப்புக் கொள்கைக்குச் செல்வாக்கு ஏற்பட்ட பின்னர், முற்பிறப்பு

வினையின் பயன் இப்பிறப்பில் முதிர்வதை முறைமையின் வெளிப் பாடாகக் கண்டு, அதனை 'ஊழ்வினைப் பயன்' என்றனர். பழவினையை ஊழ்வினை என்றாரேயன்றி எவரும் 'ஊழ்' என்றார் இல்லை. இளங்கோ அடிகளும் தம் காப்பியத்துள் எவ்விடத்திலும் 'ஊழ்' என்று குறிக்கவில்லை; 'ஊழ்வினை' என்ற தொடரையே ஆள்கின்றார்.

சிலப்பதிகாரத்திற்குக் 'குடிமக்கள் காப்பியம்', 'முதல் காப்பியம்', 'முத்தமிழ்க் காப்பியம்', 'நாடகக் காப்பியம்', 'புரட்சிக் காப்பியம்', 'ஒற்றுமைக் காப்பியம்', 'புதுமைக் காப்பியம்', 'வலாற்றுக் காப்பியம்' எனப் பல்வேறு சிறப்புப் பெயர்கள் உண்டு. பேராசிரியர் மு.வ. தம் 'தமிழ் இலக்கிய வரலா'ற்றில் சிலப்பதிகாரத்தைக் 'கொடியவன் இல்லாத காப்பியம்' (Villainless Epic) எனக் குறிப்பிடுவார்(ப.95); வேறு சொற்களில் சுட்டுவது என்றால், சிலப்பதிகாரம் நல்லவருக்கும் தீயவருக்கும் இடையே எழும் போராட்டத்தைச் சித்திரிப்பதன்று; மாறாக, நல்லவர்களுக்கு இடையே எழும் போராட்டங்களையே சிலப்பதிகாரம் சித்திரிக்கின்றது. இது சிலப்பதிகாரத்திற்கு வாய்த்த ஒரு தனிச்சிறப்பு ஆகும்.

ஒரு வகையில் பார்த்தால், சிலப்பதிகாரக் காப்பியத்தில் எதிர்நிலைத் தலைவன் ஒருவன் பெறும் இடத்தை ஊழ் பெற்றுள்ளது; காப்பிய மாந்தர்கள் தத்தம் வாழ்க்கையில் ஆராய்ந்தோ ஆராயாமலோ எடுக்கும் முடிவுகளுக்கு ஊழே காரணமாக அமைகின்றது. சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவன் கோவலன்; செல்வ வளமும் நிறைந்த புகழும் கொண்ட வணிகக் குடும்பத்தைச் சார்ந்தவன்; மாடல மறையோனின் சொற்களில் குறிப்பிடுவது என்றால் அவன், 'கடக்களிறு அடக்கிய கருணை மறவன்', 'ஓல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து, நல்வழிப் படுத்த செல்லாச் செல்வன்', 'பசிப்பிணி அறுத்துப் பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்' - இத்துணை வீர உணர்வும் ஈர நெஞ்சமும் கொண்ட கோவலன், தன் குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைத்து, இலம்பாடு உற்று, ஒரு நல்லிரவில் ஊரை விட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் கட்டிய மனைவி கண்ணகியோடு புறப்படுவதற்குக் காரணமாக அமைந்தது எது? சிக்கலான இவ் வினாவுக்கு,

“இம்மைச் செய்தன யான்அறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்து,இத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்தகோ பாலநீ?’ *(அடைக்கலக் காதை, 91-94)*

என மாமறை முதல்வன் மாடலன் மூலம் விடையிறுக்கின்றார் இளங்கோ அடிகள். “நான் அறிய நீ இப் பிறவியில் செய்தன யாவும் நல்வினையே! அவ்வாறிருக்க பெருந்துன்பமுற்று, திருமகளைப் போன்ற இம் மாணிக்கக் கொழுந்தாகிய கண்ணகியுடன் இங்கே வந்திருப்பது முற்பிறவியின் தீவினைப் பயன் போலும்!” என வருந்திக் கூறும் மாடலனின் பேச்சில் - ‘உம்மைப் பயன்’ என்னும் தொடரில் - ஊழின் பண்பும் பயனும் தெற்றென விளங்கக் காணலாம்.

‘தீதுதீர் மதுரை’ கோவலன் வாழ்வில் ‘தீதுசேர்(க்கும்) மதுரை’யாக அமைந்தது; பாரம்பரியச் சிறப்பும் பெருமையும் வாய்ந்த பாண்டிய மன்னன். ‘கள்வனைக் கொன்று அச் சிலம்பு கொணர்க’ என ஆராயாமல் தீர்ப்பு வழங்கினான். இதன் தொடர் விளைவுகளாகப் பல்வேறு துயர நிகழ்வுகள் காப்பியத்தில் நடப்பதற்குக் காரணம் ஊழ்வினையே. ‘வினைவிளை காலம்’ என்னும் தொடரால் இதனைச் சுட்டுகின்றார் இளங்கோ அடிகள்.

“வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினைஅலர் வேம்பன் தேரான் ஆகி,
ஊர்காப் பாளரைக் கூலி ‘ஈங்குஎன்
தாழ்பூங் கோதை தன்கால் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகில்
கொன்றுஅச் சிலம்பு கொணர்க ஈங்கு’என்’

(கொலைக்களக் காதை, 148 - 153)

“சினையலர் வேம்பன் ஊர்காக்கும் காவலாளரையழைத்து இங்ஙன மாகிய எனது தாழ்பூங்கோதையை யுடையாள் தன்னுடைய காலணி யாகிய சிலம்பு இவன் சொன்ன களவில் தழும்பிய கள்வனுடைய கையகத்ததாயின், அவனைக் கொல்ல அச்சிலம்போடு ஈங்குக்

கொணர்கவெனக் கருதியவன் வினை விளைகின்ற காலமாதலானே இதனைச் சிறிதும் தேரானாய்த் தேவி கூடாதேகச் சுற்ற நீங்கிச் சிலதியரோடு கோயில் நோக்கிக் காம பரவசனாய் அவள் தடையடைத் தோனாகலானே அவனைக் கொன்று அச்சிலம்பை இவளூடல் தீர்த்தற்கு உதவியாக இவ்விடத்தே கொணர்வீராகவென்று சொல்லவென்க" (சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாருரையும், ப.432) என்னும் அடியார்க்கு நல்லாரின் அரிய உரை விளக்கம் இங்கே கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

'சிலம்பு திருடிய கள்வன்' எனத் தவறாகக் குற்றம் சாட்டப் பெறுகிறான் கோவலன்; தீர ஆராயாமல், 'கோவலன் கள்வன்' எனத் தீர்ப்பு வழங்குகிறான் பாண்டிய மன்னன். இவர்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கை அவலங்களுக்காவது ஓரளவு அமைதி கூறலாம்; ஆறுதலும் பெறலாம். ஆனால், மதுரை மாநகரும் ஒரு திங்கும் அறியாத அதன் மக்களும் ஏன் தண்டிக்கப் பெறுதல் வேண்டும்? இவ் வினாவுக்கு மதுராபதித் தெய்வம் வாயிலாக இளங்கோ அடிகள் சொல்லும் விடை இதுதான்:

"'உரைசால் மதுரையோடு அரைசுகேடு உறும்'எனும்
உரையும் உண்டே நிறைதொடி யோயே!'"

(கட்டுரை காதை, 136-137)

மேலும், "உம்மை வினைவந்து உருத்த காலைச், செம்மை இலோர்ச் செய்தவம் உதவாது" (171-172) என்றும் மதுராபதித் தெய்வம் கண்ணகி யிடம் மொழிகின்றது.

இங்ஙனம் சிலப்பதிகாரக் காப்பிய மாந்தர்களின் வாழ்வில் நிகழும் முக்கிய நிகழ்வுகளுக்கும், அவற்றால் காப்பியத்தில் ஏற்படும் தொடர் விளைவுகளுக்கும் ஊழ்வினையே காரணமாக அமைவதாக இளங்கோ அடிகள் படைத்துக் காட்டுகின்றார்.

'கானல் வரி'யில் யாழ் இசையை ஒரு காரணமாகக் கொண்டு கோவலனுடைய முந்தை வினை வந்து அவனைக் கோபமுறச்

செய்கின்றது; மாதவி மீது ஐயமும் வெறுப்பும் கொண்டு கோவலன் அவளைப் பிரிகிறான்.

"யாழ்இசைமேல் வைத்துத்தன் ஊழ்வினைவந்து
உருத்தது ஆகலின்
உவவுஉற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக் கை
ஞெகிழ்ந் தனனாய்...
... ... கோவலன்தான் போனபின்னர்"

(கானல் வரி, 25-58)

'வழக்குரை காதை'யில் பாண்டிய மன்னனுடன் வழக்குரையாடும் கண்ணகி, 'புகார் நகரில் பழியில்லாத, சிறப்பு மிக்க, பெருமை பொருந்திய முடியிலே, மாசாத்துவான் என்னும் வாணிகனுக்கு மகனாகத் தோன்றிய கோவலன், பொருள் ஈட்டி வாழ எண்ணி, மதுரை நகரத்திற்கு வந்ததன் காரணம் முன்வினை தூண்டியதே' என்கிறாள்:

"பெரும்பெயர்ப் புகார்என் பதியே; அவ்வூர்
ஏகாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்து ..."

(வழக்குரை காதை, 56-60)

'நாடுகாண் காதை'யில் கோவலன் கண்ணகியுடன் வந்த கவுந்தி அடிகளிடம், வருங்காலம் உணரும் திறன் பெற்ற சாரணர் கூறும் கருத்தும் இங்கே மனங்கொள்ளத்தக்கது:

"கழிபெருஞ் சிறப்பின் கவுந்தி காணாய்!
ஒழிகென ஒழியாது ஊட்டும் வல்வினை;
இட்ட வித்தின் எதிர்ந்து வந்து எய்தி
ஒட்டுங் காலை ஒழிக்கவும் ஒண்ணா"

(நாடு காண் காதை, 170-173)

"தீவினையை வரவேண்டாம் என்றாலும் வர வேண்டிய நேரத்தில் வந்தே தீரும். விளைநிலத்தின் இட்ட வித்து விளைந்து பயன் தருவதைப்

போல நல்வினையும் விளைந்து நற்பயன் தரும் காலத்தில் அதை நீக்கி விடவும் முடியாது" என்னும் சாரணரின் கூற்று ஊழ்வினையின் வலிமையைத் தெள்ளிதின் உணர்த்துவதாகும்.

'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்னும் பாவிகத்தைத் தம் காப்பிய மாந்தர்களின் வாழ்விலும் வாக்கிலும் வைத்து அழுத்தம் திருத்தமாகப் புலப்படுத்தியுள்ளார் இளங்கோ அடிகள். அதே வேளையில் அவர் தம் தனிவாழ்வில் ஊழை உப்பக்கம் காண்பதில் வெற்றியும் கண்டுள்ளார். ■

10

உரையாசிரியர்களின் பல்துறைப் புலமை

"உரையாசிரியர்கள், 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்று உலக மக்களை அறைகூவி அழைத்துப் புலமை விருந்தளித்த நல்லவர்கள்; அறிவுச் செல்வத்தை அள்ளிச் சொரிந்த வள்ளல்கள்; கல்விக் கோயிலின் பெருவாயிலைத் திறந்துவிட்ட மேலோர்கள்." *

- மு.வை.அரவிந்தன்

1. தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி.11 முதல் 14 வரையிலான காலம் 'உரையாசிரியர்களின் காலம்' ஆகும். மூல நூலாசிரியருக்கு இணையாக உரையாசிரியரையும் மதிப்பது தமிழ் மரபு; தெய்வப் புலவர் திருவள்ளுவரையும் தெள்ளு பரிமேலழகர் செய்த திருக்குறள் உரையையும் தண்டமிழின் மேலான தரமான நூல்களாகப் போற்றுவார் உமாபதி சிவாசாரியார். "ஒரு புலவன் காலக்கழிவு நோக்காது நெறிதாராய்ந்து தன் வாணாளில் ஒரு நூற்கு உண்மையுரை எழுதி முடிப்பினும் போதியதே" (உரைநடைக் கோவை: இரண்டாம் பகுதி, ப.29) என்பது பண்டிதமணி மு.கதிரேசனாரின் அழுத்தம் திருத்தமான கருத்து.

2. தமிழ் இலக்கிய வரலாற்றில் 'பக்தி இயக்கம்', 'தனித்தமிழ் இயக்கம்' போலத் தனிச்சிறப்புடன் சுட்டிக் கூறத் தகுந்தது 'தொல்காப்பிய இயக்கம்'. இதன் தலைவர் இளம்பூரணர்; சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார் ஆகியோர் இவ் வியக்கத்' தின் பெருமைமிகு படைத் தலைவர்கள் ஆவர். பேராசிரியர்

----

* உரையாசிரியர்கள், ப.77.

வையாபுரிப் பிள்ளை குறிப்பிடுவது போல், தொல்காப்பிய உரை யாசிரியர்கள் யாவரும் 'பழந்தமிழ் மீட்சி இயக்கம்' (Return to Classicism) உருவாவதற்கு வழிவகுத்தனர்; தொல்காப்பியப் பரவலுக்கு அடித்தளம் இட்டனர்.

3. 'அறிவுத் திருக்கூட்டம்' என்றும், 'பேருபகாரிகள்' என்றும், 'இந்திய விடுதலைத் தொண்டர்களுக்கு நிகரானவர்கள்' என்றும் உரை யாசிரியர்களைத் தமிழ் கூறு நல்லுலகு போற்றி மகிழ்கின்றது; **'உளங்கூர் கேள்வி இளம்பூரணர்', 'ஆனாப் பெருமைச் சேனாவரையர்', 'உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்'** என்றாற் போல் தனித்தனியே உரையாசிரியர்களுக்குச் சிறப்புப் பெயர்களைப் புகழாரங் களாகச் சூட்டிப் போற்றுகின்றது.

4. ஔவையாரின் மொழியில் 'அரியது எது எனக் கேட்கின்', நூலுக்கு உரை எழுதும் பணியே அரிதினும் அரிதான பணி எனலாம். ஒரு நல்ல உரையாசிரியரின் முதன்மையான நோக்கம் நூலினுள் 'ஆழ்ந்திருக்கும் கவி உள'த்தைக் காட்டுவதாகும். இதனாலேயே பாவேந்தர் பாரதிதாசன் தமது திருக்குறள் உரைக்கு **'வள்ளுவர் உள்ளம்'** எனப் பெயர் இட்டார்; 'மொழி ஞாயிறு' தேவநேயப் பாவாணர் தமது உரைக்கு **'மரபுரை'** எனப் பெயர் வழங்கினார். இலக்கண, இலக்கிய, நாகரிக, பண்பாட்டு மரபு மீறாமல்-பிறழாமல் - ஒரு நூலுக்கு உரை வரைதல் வேண்டும் என்பது பாவாணரின் உள்ளக் கருத்து.

5. உரையாசிரியர்களின் பன்னூற் புலமை - பல்துறைப் பயிற்சி - அவர்கள் சொற்பொருள் விளக்கம் தருவதில் சிறப்பாக வெளிப்படும். வெறும் சொற்பொருள் மட்டும் - அகராதிப் பொருள் மட்டும் - தராமல், சொல்லின் நுண்பொருளை — அனுபவப் பொருளைத் தந்து, சொற்களுக்கு இடையிலான நுண்ணிய வேறுபாடுகளை உணர்த்துவதில் உரையாசிரியர்கள் கைதேர்ந்தவர்கள். **அன்பு - அருள், புலவி - ஊடல், கையாறு - இடுக்கண், ஒளி - புகழ்:** இச் சொற்களுக்குத் தொல்காப்பிய முதல் உரையாசிரியரான இளம்பூரணர் தந்திருக்கும் விளக்கங்கள் சிறப்பானவை.

* அருளாவது - எல்லாவுயிர்க்கும் அளிசெய்தல். அன்பு என்பது - பயின்றார் மாட்டுச் செல்லும் காதல் (தொல்காப்பியம் : பொருளதிகாரம், இளம்பூரணம், பக்.371-372)

* கையாறு என்பது இன்பம் பெறாமையான் வரும் துன்பம் இடுக்கணாவது - துன்பமாயின வந்துறுதல் (ப.377)

6. இலக்கியத் திறனாய்வியலுக்கு (Literary Criticism) நம் உரையாசிரியர்கள் நல்கி இருக்கும் பங்களிப்பும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். இவ்வகையில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் நான்கு இயல்களுக்குப் பேராசிரியர் எழுதி இருக்கும் உரை விளக்கம் தனித் தன்மை வாய்ந்தது; இலக்கியக் கொள்கைகளின் - கோட்பாடுகளின் - அடிப்படைகளைப் புலப்படுத்துவது. 'மொழிபெயர்ப்பு என்பது பிற பாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ் நூலாகச் செய்வது. அதர்ப்பட யாத்தல்: அதர்ப்பட-நெறிப்பட. கிடந்தவாறே மொழிபெயர்த்தல்; பொருள் பிறழாமை இன்றி' (தொல்காப்பியம்: பொருளதிகாரம், பேராசிரியம், ப.484) என்னும் 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பேராசிரியரின் விளக்கம், இன்றைய மொழிபெயர்ப்புத் துறை வல்லுநர்களும் தலை வணங்கி ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும்.

7. 'உரையாசிரியர்களின் எடுத்துக்காட்டுக்கள்' என்பது ஓர் இளம் ஆய்வாளர் முனைவர் பட்டத்திற்கு மேற்கொள்ளத் தக்க ஓர் இன்றி யமையாத தலைப்பாகும். உரையாசிரியர்கள் தரும் எடுத்துக் காட்டுக்களில் வரலாறு, நாகரிகம், பண்பாடு, சமூகவியல், மொழியியல், வரலாற்றியல், நடையியல், தருக்கவியல், சட்டவியல், அறிவியல், நாட்டுப்புறவியல் முதலான பல்துறைகளின் பொருண்மைகள் இடம் பெற்றிருப்பது கண்கூடு. 'நட்பில் உணர்ச்சி ஒத்த நிலைக்குக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் இடையே நிலவிய உடன் உயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினை' (திருக்குறள், பரிமேலழகர் உரை, ப.) மேற்கோள் காட்டுவார் பரிமேலழகர்; 'வாய் வாளாது இருத்தலும் ஒரு வகை விடையே' என வாழ்வியலுக்கு ஒத்த நடைமுறை உதாரணம் காட்டுவார் தெய்வச்சிலையார்; 'மகன் தாய்க் கலாம்' என்னும் இளம்பூரணரின் உதாரணம் சமூகவியல் நோக்கில் அமைந்தது; 'அல்லல் நீத்த உவகை என்றதனால், பிறர்

துன்பம் கண்டு வரும் உவகை, உவகை எனப்படாது' (பேராசிரியம், ப.18) என்னும் பேராசிரியரின் விளக்கம் இன்றைய உளவியலார் 'Sadism' எனக் குறிக்கும் கருத்துக்கு ஒத்துச் செல்வது.

8. இன்றைய திறனாய்வாளர்கள் ஆங்கில மொழியில் பெற்றிருக்கும் புலமையைப் போல, அன்றைய உரையாசிரியர்கள் வடமொழியில் ஆழ்ந்த பயிற்சியும் நிறைந்த புலமையும் பெற்றிருந்தனர். தொல்காப்பிய உரையாசிரியர்களுள் சேனாவரையரும், திருக்குறள் உரையாசிரியர்களுள் பரிமேலழகரும் இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். உரையாசிரியர்களின் வடமொழிப் புலமை சில நேரங்களில் வடமொழிச் சார்பாய் - சார்வாய் - மாறி, நடுவுநிலைமை பிறழ்ந்து, ஒருபால் கோடி அவர்கள் உரை வரைந்து விடுவதும் உண்டு. பரிமேலழகர் உரை, திருக்குறள் உரைகளிலே தலைசிறந்தது என்பதிலே இரண்டாவது கருத்து இல்லை; ஆயின், வருணக் கோட்பாட்டை முன்னிறுத்தி, வடமொழி மரபைப் பெரிதும் போற்றி அவர் எழுதி இருக்கும் உரைப் பகுதிகள் தமிழ் உணர்வு படைத்தோர் ஏற்க இயலாதவை. சான்றாக, 'ஈன்ற பொழுதிற் பெரிது உவக்கும் தன் மகனைச், சான்றோன் எனக் கேட்ட தாய்' என்னும் குறளில் வரும் 'கேட்ட தாய்' என்ற தொடருக்குப் 'பெண்ணியல்பால் தானாக அறியாமையால் கேட்ட தாய் என்றார்' (பரிமேலழகர் உரை, ப.) எனப் பரிமேலழகர் எழுதியிருக்கும் உரை விளக்கம் வள்ளுவரது உள்ளக் கருத்துக்கு முற்றிலும் மாறான ஒன்றாகும். 'நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே' என முழங்கும் நெஞ்சுரமும் நேர்மைத் திறமுமே ஓர் உண்மை உரையாசிரியரின் இரு கண்கள் ஆகும்.

9. இன்றைய கல்வியாளர்கள் பள்ளிப் பருவத்தில் இருந்தே இளைய தலைமுறையினருக்குப் பாலியல் அறிவு புகட்டப்பட வேண்டும் என ஒருமித்த குரலில் வலியுறுத்தி வருகின்றனர். இவ் வகையில் நமது பழைய உரையாசிரியர்களின் உரைகளிலே பொதிந்து கிடக்கும் பாலியல் உண்மைகள் மிகப் பல ஆகும். அவை தனி நூலுக்கு உரியவை. பதச்சோறு:

'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது, தான் அமர்ந்து வருஉம் மேவற்று ஆகும்' என்னும் பொருளியல் நூற்பாவுக்கு (27) இளம்பூரணர் எழுதியிருக்கும் நுண்ணிய உரை விளக்கம் வருமாறு:

“மனம் பொருந்திய வழிப் பரத்தையர் மாட்டும் இன்பம் உளதாகும்; மனம் பொருந்தா வழி மனைவியர் மாட்டும் இன்பம் இன்றாம்,” (இளம்பூரணம், ப.342). ஓர் இல்லற இணையருக்கு இருக்க வேண்டிய பொருத்தங்களிலே எல்லாம் அடிப்படையானது - முதன்மை யானது - மனப்பொருத்தமே. இதனை 11-ஆம் நூற்றாண்டிலேயே இளம்பூரணர் அழுத்தம் திருத்தமாகச் சுட்டியிருப்பது வியப்பினும் வியப்பு ஆகும்.

பன்னூற் புலமையுடன்-பல்துறைப் பயிற்சியுடன் - நமது பழைய உரையாசிரியர்களையோ, இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர் களையோ அணுகும்போது கிடைக்கும் அறிவு வெளிச்சங்கள் திட்பமும் நுட்பமும் ஒட்பமும் வாய்ந்தவை ஆகும். ‘ஓதற்பிரிவு - தம் நாட்டகத்து வழங்காது, பிற நாட்டகத்து வழங்கும் நூல் உளவன்றே, அவற்றினைக் கற்றல் வேண்டிப் பிரிதல்’ (இளம்பூரணம், ப.30) என்னும் இளம்பூரணரின் கருத்து, ‘Bon Voyage’ எனப் பரவலாக வழங்கும் இன்றைய கணினி யுகத்திற்கும் ஏற்புடைய ஒன்றாகும். ‘விருந்து: புதிதாகப் புனைதல். ஒருவன் சொன்ன நிழல் வழியன்றித் தானே தோற்றுவித்தல்’ (இளம்பூரணம், ப.549) என்னும் இளம்பூரணரின் விளக்கம், இன்றைய அறிவுலகம் போற்றும் தற்திறனைக் (Originality) குறிப்பதாகும். இங்ஙனம் இன்றயை வளர்ச்சி பெற்ற அறிவுத் துறைகளின் (Spheres of Knowledge) கண்ணோட்டத்தில் உரையாசிரியர்களை அணுகும் போது, அவர்களது கூரிய - சீரிய - உயரிய - நேரிய- புலமைத் திறம் எவருக்கும் நன்கு விளங்கும். மரபுக்கும் புதுமைக்கும் பாலமாய் விளங்கும் உரையாசிரியர்களை ஆழமாகப் பயில்வதும், அவர்களது தனித்திறமைகளை உணர்ந்து, உள்வாங்கி ஆய்வுலகில் தடம் பதிப்பதும் இன்றைய இளைய தலைமுறைனர் மேற்கொள்ள வேண்டிய இரு தலையாய பணிகள் ஆகும். ■

11

தெய்வச்சிலையார் உரைத் திறம்

*"தெய்வச்சிலையார் பெரும்பாலான நூற்பாக்களுக்குப் புதுவிளக்கமும் புத்துரையும் கண்டுள்ளார். சொந்தமாகச் சிந்திக்கும் திறமும் சரியெனப் பட்டதைத் தயங்காது கூறும் துணிவும் இவர்பால் சிறந்து விளங்குகின்றன." **

- சோ.ந.கந்தசாமி

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை கண்ட பெருமக்கள் அறுவர் ஆவர். அவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார் ஆகிய நால்வரும் ஆவர். முதல் உரையாசிரியராகிய இளம்பூரணர் உரையில் தெளிவும் சுருக்கமான விளக்கமும் சிறப்பிடம் பெறும். ஆனாப் பெருமைச் சேனாவரையர் உரையில் தருக்க நெறியும் வடமொழிப் புலமையும் விஞ்சி நிற்கும். உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரையில் இலக்கியப் பெரும்புலமை மேலோங்கி நின்று, இலக்கணக் கொள்கைகக்கு விளக்கம் நல்கும். தெய்வச் சிலையார் உரையில் மொழியியல் நோக்கும் புதுமை காணும் ஆய்வு வேட்கையும் சிறப்பியல்களாகக் காட்சியளிக்கும். இனி, தெய்வச் சிலையார் உரையில் காணலாகும் தனித்தன்மைகள் குறித்து இக் கட்டுரையில் சுருங்கக் காணலாம்.

மொழியியல் நோக்கு

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் முதல் இயல் கிளவி யாக்கம். 'கிளவி - சொற்கள், ஆக்கம் - பொருள் மேல் ஆதல்.

---

* தெய்வச்சிலையார் உரைத் திறம், ப.29.

சொற்கள் பொருள்கள் மேலாமாறு உணர்த்தினமையான் கிளவியாக்கம் ஆயிற்று' என்பர் இளம்பூரணர். 'வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால் கிளவியாக்கம் ஆயிற்று' என்பர் சேனாவரையர். கல்லாடனார் இளம்பூரணரையும், நச்சினார்க்கினியர் சேனாவரையரையும் வழிமொழிவர். இந் நால்வரிடம் இருந்து வேறுபட்டுத் தெய்வச்சிலையார், "...கிளவியாக்கம் அது கிளவியதாக்கமென விரியும். அதற்குப் பொருள், சொல்லினது தொடர்ச்சி யென்றவாறு. சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருண் மேலாகு நிலைமையைக் கிளவியாக்கமென்றார்" என மொழியியல் நோக்கில் புதிய விளக்கம் தருவர். 'கிளவியாக்கம் தனிமொழி இலக்கணம் அன்று; தனிமொழிகள் ஒன்றொடு ஒன்று பொருத்தமுறத் தொடர்ந்து பொருள் புலப்படுத்தலைப் பற்றிக் கூறுதலின் தொடர்மொழி இலக்கணம் (Grammar on Syntax) ஆகும்' என்னும் அரிய கருத்தினைத் தெய்வச்சிலையார் தம் உரையில் வெளியிட்டுள்ளார். இன்றைய மொழியியல் அறிஞர்கள் இக் கருத்தின் அருமையினை வியந்து பாராட்டுகின்றனர்.

இந் நூற்றாண்டின் புகழ் பெற்ற மொழியியல் அறிஞரான நோம் சாம்ஸ்கி (Noam Chomsky) 'பொது இலக்கணம்' (Common Grammar) குறித்துத் தம் நூலில் விரிவாகச் சிந்தித்துள்ளார். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்னும் பெயரியல் முதல் நூற்பாவிற்கு எழுதிய உரை விளக்கத்தில், 'எல்லாப் பாடைக்கும் ஒப்ப முடிந்ததோர் இலக்கணம்' என்னும் கருத்தியல் குறித்துத் தெய்வச்சிலையார் கோடிட்டுக் காட்டியுள்ளார். அறிஞர் சாம்ஸ்கி சிந்திப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தெய்வச்சிலையார் தம் உரையில் பொது இலக்கணம் பற்றிக் கருத்துக் கூறியிருப்பது வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்த ஒன்றாகும்.

சமய, தத்துவப் பயிற்சி

'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' என்பது கிளவியாக்கத்தில் இடம்பெறும் நூற்பா (13). 'உலகத்துப் பொருளுணர்த்துஞ் சொல்லெல்லாம் வினாவுஞ் செப்பும் ஆகிய பொருண்மேல் நிகழ்தலின், அவை வழுவாமற் கூறல் வேண்டும்' என்பது இதன் பொருள்.

செப்பு, வினா இவற்றின் வகைகளைத் தொல்காப்பியர் வரையறுத்துக் கூறவில்லை. உரையாசிரியர்களே அவற்றைக் குறித்துத் தம் உரைகளில் கருத்துக்கள் கூறியுள்ளனர். சான்றாக, செப்பு, வினாவெதிர் வினாதல், ஏவல், மறுத்தல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், உடம்படுதல் என அறுவகைப்படும் என்கிறார் இளம்பூரணர். செப்பு செவ்வன் இறையும், இறைபயப்பதும் என இரு வகைப்படும் என்பது சேனாவரையர் கருத்து. தெய்வச்சிலையாரோ இவர்களிடம் இருந்து வேறுபட்டு, சமய,தத்துவ நோக்கில், மணிமேகலை ஆசிரியர் சாத்தனாரை அடியொற்றி, செப்பு துணிந்து கூறல், கூறிட்டு மொழிதல், வினாவி விடுத்தல், வாய் வாளாதிருத்தல் என நான்கு வகைப்படும் என்கிறார். துணிந்து கூறலாவது, தோன்றியது கெடுமோ என்ற வழி, கெடும் என்றல். கூறிட்டு மெழிதலாவது, செத்தவன் பிறப்பானோ என்றவழி, பற்றறத் துறந்தானோ, பிறனோ என்றல். வினாவி விடுத்தல் என்பது, முட்டை மூத்ததோ பனை மூத்ததோ என்ற வழி, எம் முட்டைக்கு எப்பனை என்றல். வாய் வாளாமையாவது ஆகாயப் பூ நன்றோ தீதோ என்றார்க்கு உரையாடாமை (மணிமேகலை, 30: 235-249) என அவற்றிற்குத் தக்க சான்றுகளும் காட்டி விளக்குகிறார்.

எல்லா வினாக்களுக்கும் ஒருவன் விடை சொல்லவேண்டும் என்ற தேவை இல்லை. பொருத்தம் இல்லாத – தேவையற்ற – வினாக்களுக்கு வாய் வாளாதிருத்தலே – மறுமொழி ஒன்றும் சொல்லாதிருத்தலே – மேல் என அருமையாக மொழிகின்றார் தெய்வச் சிலையார். இதனால் ஒருவன் எல்லா வினாக்களுக்கும் விடை கூறத்தான் வேண்டும் என்பதில்லை என்பது தெளிவாகின்றது. அரசியல் உலகில் செய்தியாளர்கள் கேட்கும் சில சிக்கலான வினாக்களுக்கு அரசியலார் யாதும் உரையாது 'கம்'மென இருப்பதைக் காண்கிறோம்; 'கருத்துக் கூறுவதற்கில்லை' (No Comments) என்று கூறவும் கேட்கின்றோம். வாதிட்டுத் தோற்ற சமணர்களைப் பாண்டிய மன்னன் கழுவேற்றிய போது திருஞானசம்பந்தர் வாளாவிருந்தனர் என்பர் சேக்கிழார். எனவே. துணிந்து கூற வேண்டிய இடங்களில் விடையைத் துணிந்து கூற வேண்டும் எனவும், எதுவும் கூறாமல் இருப்பது நல்லது எனின் அப்படியே இருந்து விடுக எனவும், எவ்வகையான வினாவுக்கு எவ்வகையான

விடை கூற வேண்டுமோ அங்ஙனம் கூறுவதே விடைநெறி எனவும் வாழ்க்கை முறையைத் தெளிவுபடுத்துகின்றார் தெய்வச்சிலையார்.

நூலாசிரியரின் கருத்திற்கு அரண் செய்தல்

'எல்லே இலக்கம்' என்பது இடையியலில் வரும் நூற்பா (21). 'எல் என்பது இலங்குதல் குறித்து வரும்' என்பது இதன் பொருள். எடுத்துக்காட்டு: 'எல்வளை' (புறம்.24) - இலங்கு வளை. சேனாவரையருக்கு 'எல்' இடைச்சொல் என்பதில் உடன்பாடு இல்லை; உரிச்சொல் ஆகுமோ என ஐயம் எழுகின்றது. எனினும், தொல்காப்பியர் இடையியலில் கூறியிருக்கிறாரே, என்ன முடிவுக்கு வருவது? எதுவும் பேசாமல் - மறுப்பேதும் கூறாமல், "எல்லென்பது உரிச்சொல் நீர்மைத்து ஆயினும், ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையின் இடைச்சொல்லென்றே கோடும்" என மொழிகின்றார். பேராசிரியரும் மரபியல் நூற்பா ஒன்றின் உரை விளக்கத்தில் "நண்டிற்கு மூக்குண்டோ எனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டு என்க" என மூல நூலாசிரியரின் கருத்தைப் பொன்னே போல் ஏற்றுப் போற்றி எழுதியிருப்பதும் இங்கே நினைவுகூரத்தக்கதாகும். ஆயின், தெய்வச்சிலையாரோ, "இது உரிச்சொல்லன்றோ எனின், அது குறைச்சொல்லாகி நிற்கும். இது குறையின்றி நிற்றலின் இடைச்சொல்லாயிற்று" என நூலாசிரியரின் கருத்திற்கு அரண் செய்யும் விதத்தில் உரை விளக்கம் கூறியுள்ளார்.

தம் கருத்தினை நிலைநாட்டுதல்

'வேறுவேறு வினையை உடைய சொற்களை எண்ணிக்கைப்படுத்திச் சொல்லும் போது, பொது வினையால் சொல்லுவதே மரபாகும்' (கிளவியாக்கம், நூற்பா 45) என்பர் தொல்காப்பியர். இதற்கு மாறாக,

> "... ... ... *ஊன்துவை*
> *கறிசோறு ஊண்டு வருந்துதொழில் அல்லது*
> *பிறிதுதொழில் அறியா வாகலின்*"

எனப் புறநானூற்றுப் பாடலில் வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி, தின்னுதல். பருகுதல் போல 'உண்ணுதல்' என்பது சிறப்பு வினை என்ற தம்

கருத்தினை எடுத்துரைப்பார் இளம்பூரணர். சேனாவரையர் 'உண்பன, தின்பன எனப் பிரித்துக் கூறும் வழிச் சிறப்பு வினையாகும்' என்றும், 'பசிப்பிணி தீர நுகரப்படும் பொருள் எல்லாம் உணவெனப்படும் ஆதலின் பொது வினையும் ஆகும்' என்றும் அமைதி கூறுவார். தெய்வச் சிலையாரோ சேனாவரையயரைப் போல இரண்டாட்டம் ஆடாது பொதுவினையே எனத் துணிந்து கூறுவர்; தம் புலமைத் திறம் விளங்கப் பல்வேறு இலக்கிய மேற்கோள்களை எடுத்துக்காட்டி 'உண்டு' என்பது பொதுவினையே என்ற தம் கருத்தினை நிறுவுவர். அவர் கருத்து வருமாறு:

"... உண்டு என ஒரு வினையான் வந்ததால் எனின், அது பொதுவினை என்று கொள்க. என்னை? 'உண்ணுநீர் வேட்டேன் என வந்தாற்கு' (கலி. 15) எனவும், 'பாலு முண்ணாள் பழங்கண் கொண்டு' (அகம். 48) எனவும், 'கலைப்புற வல்குல் கழுகுகுடைந் துண்டு' (மணிமே. 6, 41-112) எனவும், 'கள்ளுண்ணாப் போழ்து' (குறள், 130) எனவும், 'உண்ணாமை வேண்டும் புலாஅல்' (குறள். 258) எனவும் வருதலின்."

இங்ஙனம் பல்வேறு பொருத்தமான இலக்கியச் சான்றுகளை எடுத்துக்காட்டி, 'பருகுதல்', 'தின்றல்', 'உண்டல்' முதலான எவ்வகை வினைக்கும் பொதுவாகவே 'உண்டல்' பயிலப்பட்டிருப்பதை நிலைநாட்டுகின்றார் தெய்வச்சிலையார்.

எடுத்துக்காட்டுக்களில் புதுமை

தெய்வச்சிலையார் எடுத்துக்காட்டு தருவதில் பிற உரை யாசிரியர்களிடம் இருந்து வேறுபட்ட தனிச்சிறப்பு உடையவர் என்பதைப் பல்வேறு இடங்களில் காணலாம். ஓர் எடுத்துக்காட்டு:

'முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே' என்பது எச்சவியலில் வரும் நூற்பா (57). இதற்கு இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார் ஆகிய மூவரும் ஒரே முறையிலேயே பொருள் உரைத்துள்ளனர். எனினும் இளம்பூரணரும் சேனாவரையரும் இந் நூற்பாவிற்குக் காட்டிய எடுத்துக்காட்டுக்களை விட, தெய்வச்சிலையார் காட்டியுள்ள குறட்பா எடுத்துக்காட்டு படிப்பவர் சிந்தனையைத் தூண்டுவதாகும்; திட்பமும் நுட்பமும் ஒட்பமும் வாய்ந்ததாகும்.

"'தொடிநோக்கி மென்றோளு நோக்கி அடிநோக்கி, ய∴தாண் டவள்செய் தது' என்ற வழி, இருப்போமாயின், வளை கழன்று தோள் மெலியுமெனக் கருதி, நடக்க வல்லீராகல் வேண்டுமென அடியை நோக்கினாளாதலான், உடன்போதற்குக் கருதினாளென இப்பொருளெல்லாம் அவன் குறிப்பினானுணர நின்றவாறு கண்டுகொள்க" என்பது மேலே சுட்டிய எச்சவியல் நூற்பாவிற்குத் தெய்வச்சிலையார் தந்துள்ள உரை விளக்கம் ஆகும். இங்கே அவர் மேற்கோள் காட்டியுள்ள குறட்பா 'தலைமகள் குறிப்பறிந்த தோழி அதனைத் தலைமகனுக்கு அறிவித்தது' என்ற துறையில் அமைந்ததாகும். தலைமகனது பிரிவுக் குறிப்பறிந்த தோழி, அதனைத் தலைமகளுக்கு அறிவித்து நாம் ஆற்றியிருக்க வேண்டும் எனக் கூற, அதற்குத் தலைமகள் 'பிரிந்து ஆற்றியிருக்க இயலாது; உடன்போதலே தக்கது' என்பதைக் குறிப்பால் உணர்த்த, அதனைத் தலைமகனுக்குத் தோழி அறிவித்ததாகும்.

சொற்பொருள் விளக்கங்கள்

இலக்கணக் கலைச்சொற்கள் சிலவற்றிற்கும், சொற்கள் சிலவற்றிற்கும் தெய்வச்சிலையார் தரும் விளக்கங்கள், புதியனவாகவும் பொருத்தமுடையனவாகவும் விளங்குகின்றன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சிலவற்றை இங்கே சுட்டிக்காட்டலாம்.

"வேற்றுமையியல்... பொருள்களை வேறுபடுத்தினமையாற் பெற்ற பெயர். என்னை வேறுபடுத்தியவாறு எனின், ஒரு பொருளை யொருகால் வினை முதலாக்கியும், ஒருகாற் செயப்படு பொருளாக்கியும், ஒருகாற் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும், ஒருகால் நீங்க நிற்பது ஆக்கியும், ஒருகால் உடையது ஆக்கியும், ஒருகால் இடம் ஆக்கியும் இவ்வாறு வேறுபடுத்தது என்க" என்பது தெய்வச்சிலையார் வேற்றுமையியலுக்குத் தந்திருக்கும் விளக்கம் ஆகும்.

மேலும் அவர், 'ஒருவன் ஒன்றை ஒன்றானேயியற்றி ஒருவற்குக் கொடுப்ப, அவன் அதனை அவனினின்றும் தனது ஆக்கி ஓரிடத்து வைத்தான் கொற்றா' என அறிவார்ந்த முறையில் காரண காரியத்துடன் வேற்றுமைகளை இயைபுபடுத்தி எழுதிச் செல்வார்.

தெய்வச்சிலையார் இடைச்சொல்லுக்குத் தரும் விளக்கமும் புதுவது. "பெயரும் வினையும் இடமாக நின்று பொருள் உணர்த்ததுதலின் இடைச் சொல்லாயிற்று" என்பார் அவர்.

சொற்களுக்குப் பொருள் விளக்கம் தருவதிலும் தெய்வச்சிலையாரின் தனித்தன்மை துலங்கும் இடங்கள் பல உண்டு. இவ்வகையில் குறிப்பிடத்தக்க சான்றுகள் வருமாறு:

"காலம் என்பது முன்னும் பின்னும் நடுவும் ஆகி என்றும் உள்ளதோர் பொருள்."

"உலகம் என்பது மேலும் கீழும் நடுவும் ஆகி எல்லாவுயிரும் தோற்றுதற்கு இடமாகிய பொருள்."

"ஞாயிறு என்பது தீத்திரளாய் உலகு விளக்குவது."

"திங்கள் என்பது நீர்த்திரளாய் உலகிற்கு அருள் செய்வது"

தனியிடம் பெறும் தெய்வச்சிலையார்

மொழியியல் நோக்கு, புதிய பார்வை, வடமொழிப் புலமை, தருக்கப் பயிற்சி, பாட பேதங்கள், மூல நூலாசிரியர்க்கு அரண் செய்தல், வித்தியாசமான எடுத்துக்காட்டுகளைத் தருதல், சொற்பொருள் விளக்கங்கள் கூறுதல், முன்னை இலக்கண ஆசிரியர்களைச் சுட்டல், தம் கருத்தினை நிலைநாட்டல், உள்ளங்கவர் உவமைகளையும் உத்திகளையும் கையாண்டு கருதிய பொருளைப் புலப்படுத்தல் என்றாற் போல் தெய்வச்சிலையாரின் உரையைப் பன்முக நோக்கில் விரிவாக ஆராய்வதற்கு நிறைய இடமுள்ளது. பேராசிரியர் சோ.ந.கந்தசாமி குறிப்பிடுவது போல், "முழுமையாக நோக்கின் சொல்லதிகார உரைகளில் இவர் (தெய்வச்சிலையார்) உரைக்குத் தனியிடம் உண்டு என்பதும் இக்கால மொழியியல் தழுவிய இலக்கண ஆய்வியலுக்கு இவர்தம் உரைப்பகுதிகள் பெரிதும் ஒளியூட்டுவன என்பதும் தெளிவு" (தெய்வச்சிலையார் உரைத் திறம், ப.77). இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர்களின் வரிசையில் தெய்வச்சிலையாரையும் முனைவர் பட்ட ஆய்வுக்கு மேற்கொள்ள வேண்டியது எதிர்கால ஆய்வாளர்களின் தலையாய கடனாகும்.

12

தமிழில் உமர் கய்யாம் மொழிபெயர்ப்புகள்

*"ஆக்க இலக்கிய மொழிபெயர்ப்பானது ஒரு பண்பாட்டுச் சூழலின் வெளிப்பாடான ஒரு மொழியைக் கொண்டு இன்னொரு பண்பாட்டுச் சூழலின் வெளிப்பாடான மொழியிற் கூறப்படுவனவற்றை எடுத்துக்கூறும் ஒரு முயற்சியாகும்." **

- கா. சிவத்தம்பி

உமர் கய்யாம் பரந்த புகழ் கொண்ட பாரசீகக் கவிஞர். பாரதியாரின் சொற்களிலே குறிப்பிட வேண்டும் என்றால், 'உமர் கய்யாம் தனை உலகினுக்கே தந்து, ஓங்கு புகழ் பெற்றது பாரசீக நாடு!' எனலாம். 'உமர் கயாம்', 'உமர் கையாம்', 'உமார் கய்யாம்' எனத் தமிழில் பலவாறு அழைக்கப்படும் உமர் கய்யாம், இப்போது ஈரான் எனப்படும் பண்டைய பாரசீகத்தில் நைசாப்பூரில் கி.பி. 1048-ஆம் அண்டு மே மாதம் 18 ஆம் நாள் புலர்காலைப் பொழுதில் பிறந்தார்; கி.பி.1123-இல் மறைந்தார். அவர் இம் மண்ணுலகில் வாழ்ந்த காலம் 75 ஆண்டுகள். 'ஜியாவுத்தீன் அபுல் ஃபதஹ் உமர் பின் இப்ராஹீம் கய்யாம்' என்பது அவரது முழுப்பெயர். 'கய்யாம்' என்ற சொல்லுக்குக் 'கூடாரம் அமைப்பவன்' (Tent-maker) என்பது பொருள். அது அவரது குடும்பப் பெயர் ஆகும்.

உமர் கய்யாம் கவிதைத் துறையில் மட்டுமன்றி, கணிதம், வரலாறு, மொழியியல், அறிவியல், வானியல், இயந்திரவியல், சோதிடம், மண் சிற்பம், இசை, தத்துவம், மருத்துவம் எனப் பல்வேறு துறைகளில் பழுத்த புலமை பெற்றிருந்தார்; நாட்காட்டியைத் திருத்துவதற்காக அமைக்கப்பட்ட எண்பேராயத்திலும் அவர் இடம்பெற்றிருந்தார். இவற்றால் பரந்த புகழுக்குச் சொந்தக்காரராக விளங்கினார் உமர் கய்யாம்.

*** இலக்கியமும் கருத்து நிலையும், பக்.63-64.**

உமர் கய்யாம் பாடிய பாடல்களுக்கு 'ருபாயத்' என்று பெயர். 'ருபாயத்' என்பது நாலடிப் பாடல் ஆகும். தமிழில் உள்ள 'நாலடியார்' என்ற நூற்பெயர் இதனோடு ஒப்பிடத் தகுந்தது. உமர் கய்யாமின் பாடல்களை ஆங்கிலத்தில் அழகிய வடிவில மெழிபெயர்த்தவர் எட்வர்ட் பிட்ஜெரால்டு (Edward Fitzgerald: 1809-1883). அவர் அவற்றை ஐந்து முறை மொழிபெயர்த்தார். முதல் பொழிபெயர்ப்பு 1859-ஆம் அண்டில் அவரது ஐம்பதாவது வயதில் வெளிவந்தது; அதில் 75 பாடல்கள் இடம்பெற்றிருந்தன; அதனைத் தழுவி, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை உமர் கய்யாம் பாடல்களைத் தமிழில் தந்துள்ளார். இரண்டாவது மெழிபெயர்ப்பு ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1868-ஆம் ஆண்டில் வெளிவந்தது; அதில் 110 பாடல்கள் இடம்பெற்றிருந்தன; அதனைத் தழுவி, ச.து.சு. யோகியார் உமர் கய்யாம் பாடல்களைத் தமிழில் தந்துள்ளார். பிட்ஜெரால்டின் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது மொழிபெயர்ப்புகள் முறையே 1872, 1879, 1889 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்தன. ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் (1859-1889) பிட்ஜெரால்டு உமர் கய்யாமின் பாடல்களை மெழிபெயர்க்கும் பணியில் தம்மை முழுமையாகவும் முனைப்புடனும் ஈடுபடுத்தியிருந்தார் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். "எட்வர்டு பிட்ஜெரால்ட் உமர்கயாம் பாடல்களை அப்படியே மொழிபெயர்க்கவில்லை; மூலத்தில் ஊறிக் கிடக்கும் தத்துவத் தேனைத் திரட்டி, ஆங்கிலத்தில் சொற்செட்டுடன் பாடல்களில் அமைத்திருக்கிறார்" (முன்னுரை, பாரசீகக் கவிஞர் உமர்கயாம் பாடல்கள், பக்.4-5) என்பது பிட்ஜெரால்டு பற்றிய வி.ஆர்.எம். செட்டியாரின் மதிப்பீடு ஆகும்.

'உமார் கய்யாம்' என்னும் தலைப்பில் கவிமணியின் மொழி பெயர்ப்பு 1945-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளிவந்துள்ளது. பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை முன்னுரை எழுதியுள்ளார்; அதில் அவர், 'கவிமணி மூலமாக நமது நாட்டில் உமார் கய்யாம் ஓர் அற்புதமான மறுபிறவியை எடுத்துள்ளார்' எனக் கவிமணிக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

'பாரசீகக் கவிஞர் உமர் கயாம் பாடல்கள்' என்னும் தலைப்பில் ச.து.சுப்பிரமணிய யோகியாரின் தமிழாக்கம் 1945-ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. வி.ஆர்.எம். செட்டியார் முன்னுரை எழுதியுள்ளார். "தமிழில், ச.து:சு.யோகியாரின் தமிழாக்கம், பிட்ஜெரால்டின் ஆங்கில ஆக்கத்தின் மிகச் சரியான தமிழாக்கம" (உமர் கய்யாமின் ருபாயத், ப.14) என்பது புவியரசின் மதிப்பீடு ஆகும்.

'உமர் கய்யாம் பாடல்கள்' (ருபாயத்) என்னும் தலைப்பில் சாமி சிதம்பரனார் தமிழாக்கம் செய்துள்ளார். இது 1946-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. "நான் எழுதியுள்ள பாடல்களை உமர் கய்யாமின் பாடல்களின் நேர் மொழிபெயர்ப்பாகக் கொள்ள முடியாது. சில நேர் மொழிபெயர்ப்பு; சில அவர் கருத்தை மனத்துட் கொண்டு எழுதியவை" என நூலுக்கு எழுதிய முன்னுரையில் சாமி.சிதம்பரனாரே தமது மொழிபெயர்ப்புக் கொள்கையைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

'உமர் கையாமின் ருபாய்த்' என்னும் தலைப்பில் கிழக்கு இலங்கையைச் சார்ந்த கவிஞர் அப்துல் காதர் லெப்பை தமிழாக்கம் செய்துள்ளார். இது 1965-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெளி வந்துள்ளது. இலங்கைப் பல்கலைக்கழக அரபு மொழி விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஏ. இமாம் முகவுரை எழுதியள்ளார்; கீழைத் தேயக் கலைப் போதனா பீடத் தலைவர் கலாநிதி க.கணபதிப் பிள்ளை அணிந்துரை வழங்கியுள்ளார். "காதர் அவர்கள் பாரசீகப் பண்பாட்டுச் சூழல் பாடல்களிலே புலப்பட வேண்டும் என்னும் கருத்தையே முக்கிய மாகக் கொண்டு தமது பாடல்களை யாத்துள்ளார்" என்பது மொழி பெயர்ப்பாளரைப் பற்றிய கலாநிதி க.கணபதிப் பிள்ளையின் கணிப்பு ஆகும்.

பேராசிரியர் அ.சீநிவாசராகவன் 'எட்வர்ட் ஃபிட்ஸ்ஜெரால்ட் இயற்றிய ஆங்கில மெழிபெயர்ப்பின் தமிழ் வடிவம்' என்னும் குறிப்புடன் உமர் கய்யாம் பாடல்கள் எழுபத்தைந்தினைத் தமிழாக்கம் செய்துள்ளார் (அ.சீ.ரா. எழுத்துக்கள் : தொகுதி-1, பக்.287-305).

கவிஞர் புவியரசின் தமிழாக்கம் 1997-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளிவந்துள்ளது. 'உமர் கய்யாமின் ருபாயத் - சூஃபி தத்துவ ஞானக் காவியம் - பாரசீக மொழியிலிருந்து ஆங்கிலத்தில்: சுவாமி கோவிந்த தீர்த்தர் - தமிழில்: புவியரசு' என்னும் குறிப்பு நூலின் முகப்புப் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது ருபாயத்தின் 1096 பாடல்களுள் 401 பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்துத் தமிழாக்கம் செய்துள்ளார் புவியரசு. "எனது மொழிபெயர்ப்பு, சுவாமி கோவிந்த தீர்த்தர் என்ற வைணவத் துறவியின் சரியான முழுமையான ஆங்கில ஆக்கத்தை ஆதாரமாகக் கொண்டது" என்பது மொழிபெயர்ப்பாளரின் ஒப்புதல் வாக்குமூலம்.

'உமர்கய்யாமின் ருபாயியாத்' என்னும் தலைப்பில் நாகூர் ரூமியின் புதுக்கவிதை வடிவிலான மொழிபெயர்ப்பு 2002-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

இனி, பிட்ஜெரால்டின் கை வண்ணத்தில் உமர் கய்யாமின் பாடல் ஒன்று:

"Here with a loaf of Bread beneath the Bough
A Flask of Wine, a Book of Verse – and Thou
Beside me Singing in the Wilderness –
And wilderness is Paradise enow." *(11)*

தமது இரண்டாவது மற்றும் ஐந்தாவது மொழிபெயர்ப்புக்களில் இவ்வடிவில் சிறுசிறு மாற்றங்களைச் செய்துள்ளார் பிட்ஜெரால்டு.

'A Loaf of Bread' என்பது 'a little Bread' என மாற்றம் பெற்றுள்ளது; 'A Flask of Wine' என்பது 'A Jug of Wine' என்று ஆகியுள்ளது. 'And Wilderness is' என்னும் தொடரை, 'Oh, Wilderness were' எனச் சற்றே மாற்றியுள்ளார் பிட்ஜெரால்டு. ஐந்தாவது மொழிபெயர்ப்பில் 'a little Bread' என்பதும் இடம்பெற்றுள்ளன.

இனி, உமர் கய்யாமின் புகழ் பெற்ற இப்பாடல் தமிழ் மொழி பெயர்ப்பாளர்களால் எங்ஙனம் எல்லாம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது எனக் காண்போம்.

1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

"வெய்யிற் கேற்ற நிழலுண்டு;
வீசும் தென்றல் காற்றுண்டு;
கையில் கம்பன் கவியுண்டு;
கலசம் நிறைய மதுவுண்டு;
தெய்வ கீதம் பலவுண்டு;
தெரிந்து பாட நீயுமுண்டு.
வையந் தருமிவ் வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?' *(106)*

2. ச.து.சு. யோகியார்

“மாதவிப்பூங் கொடிநிழலில்
மணிக்கவிதை நூலொன்றும்,
தீதறுசெந் தேன்மதுவும்,
தீங்கனியும் - பக்கத்தில்
காதலி நீ பாட்டிசைத்துக்
கனிவோடு கூடுவையேல் -
ஏதும்இனிக் கவலையில்லை;
இதுவன்றோ பரமபதம்!” (12)

3. சாமி சிதம்பரனார்

“வரிவண்டு மலர்தோறும்
தேனருந்திப் பண்பாடும்
வனத்தின்கண் செழித்து நிற்கும்
ஒருமரத்தின் பெருநிழலும்
சுவையுணவும், கனிரசமும்,
உயர்புலவன் பாடல் நூலும்
இருண்ட குழல் கிளிமொழியே
நான் வேண்டும் சுகவாழ்வு
பிறிதொன்றில் இன்பம் உண்டோ?
எரிந்த மனம் குளிர்ச்சி பெற
அருகிருப்பாய் இசைபாடி
இன்பத்தேன் பாய்ச்சு வாயே!” (12)

4. அப்துல் காதர் லெப்பை

“என்னே தருவின் கிளையின் கீழ்
இனிய உரொட்டித் துண்டுண்டு
முன்னே கலச மதுவுண்டு
மோட்ச கீத நூலுண்டு
பொன்னே கான இசையுடனே
புகழ்ந்து பாட நீயுண்டு
பின்னே இந்த வனமன்றிப்
பேசுஞ் சொர்க்கம் வேறுண்டோ?” (11)

5. அ.சீநிவாசராகவன்

"வந்த பசிக்கோர் பிடிசோறும்
வற்றாக் கலத்தில் ஒளிர்மதுவும்
சந்தக் கவிதை நூலொன்றும்
தழைத்த கொம்பின் தண்நிழலும்
எந்தன் அருகில் எழிற்பாடல்
இசைக்க நீயும் இசைந்து விடின்
வெந்த பொட்டல் வெளியிதுவும்
வியன்பொன் னுலகம் ஆகாதோ?' *(11)*

6. புவியரசு

"மது ஒரு குப்பி, மாமிசத் துண்டு,
கோதுமை ரொட்டி, அன்புத் துணை
போதாதோ உனக்கு?
பாழ்மனை ஆயினும் வாழ்மனை ஆகுமே!
பரவசம் தருமே!
மன்னரும் பெறுவரோ
மகிழ்ச்சி இதைவிட?' *(47)*

7. நாகூர் ரூமி

"ஒரு கவிதை நூல், கிளையின் கீழ்!
ஒரு மதுப்புட்டி, ஒரு துண்டு ரொட்டி!
மேலும் நீ! என்னருகில் பாலைவனத்தில் பாடிக்கொண்டு!
ஓ! பாலைவனம் சொர்க்கம் இப்போது!" *(11)*

கவிமணி முதல் நாகூர் ரூமி வரையிலான இவ் எழுவகையான மொழிபெயர்ப்புக்களை ஒப்புநோக்கும் பொழுது, மொழிபெயர்ப்புக் கலையின் அருமையும் அழகும் புலனாகின்றன; மொழிபெயர்ப்புப் பணி என்பது எவ்வளவு திட்பமும் நுட்பமும் வாய்ந்தது என்பதனை உணர்ந்து கொள்வதற்கும் இவ் ஒப்பீடு உதவுகின்றது.

கவிமணியின் மொழிபெயர்ப்பில் 'Loaf of Bread' விடுபட்டுள்ளது; 'Book of Verse' என்பது 'கம்பன் கவி' என ஆகியுள்ளது; 'Flask'

என்னும் சொல் 'கலசம்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; 'and Thou, Beside me singing in the Wilderness' என்னும் அடி 'தெய்வ கீதம் பலவுண்டு, தெரிந்து பாட நீயுண்டு' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'Paradise' என்பதை 'வாழும் சொர்க்கம்' என மொழிபெயர்த்துள்ளார் கவிமணி.

ச.து.சு. யோகியார் 'beneath the Bough' என்பதை 'மாதவிப் பூங்கொடி நிழலில்' என மொழிபெயர்த்துள்ளார். 'a Book of Verse' என்பதை யோகியார் 'மணிக்கவிதை நூலொன்று' என மொழிபெயர்த் துள்ளார். 'A Flask of wine' என்பது 'தீதறு செந்தேன் மதுவும் தீங்கனியும்' என்று ஆகியுள்ளது; 'a little Bread' என்பது விடுபட்டுள்ளது. 'and Thou, Beside me singing in the Wilderness' என்னும் அடி 'பக்கத்தில் காதலி நீ பாட்டிசைத்துக் கனிவோடு கூடுவையேல்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'Paradise enow' என்பதை 'இதுவன்றோ பரமபதம்!' என மொழிபெயர்த்துள்ளார் யோகியார்.

சாமி சிதம்பரனார் நேர்மொழிபெயர்ப்பாகச் செய்யாமல், உமர் கய்யாமின் கருத்தினை மனத்துட் கொண்டு தமிழாக்கம் செய்துள்ளார். மொழிபெயர்ப்பு என்பது தெளிவாக நினைத்த கருத்தை விளக்குவதாக – எளிய சொற்களில் இனிய ஓசை பொருந்த – அமைதல் வேண்டும் என்பது அவரது கொள்கை ஆகும். இதன் வெளிப்பாடாக அவரது தமிழாக்கம் அமைந்துள்ளது. 'இருண்ட குழல் கிளிமொழியே!' என விளித்து, 'வனத்தின்கண் செழித்து நிற்கும் ஒரு மரத்தின் பெருநிழலும், சுவையுணவும், கனிரசமும், உயர்புலவன் பாடல் நூலும் நான் வேண்டும் சுக வாழ்வு' எனப் பட்டியல் இட்டு, 'அருகிருப்பாய்! இசை பாடி இன்பத்தேன் பாய்ச்சு வாயே!' என வேண்டுவதோடு நிறைவடைகிறது சாமி சிதம்பரனாரின் தமிழாக்கம்.

அப்துல் காதர் லெப்பை மூல நூலில் உள்ள கருத்துகளை மாற்றாமல் இலக்குமொழியில் அப்படியே தரவேண்டும் எனக் கருதுகின்றார்; சூபித்துவ அனுபவங்களையும் பாரசீகப் பண்பாட்டுச் சூழல்களையும் புலப்படுத்தும் நோக்கிலேயே தம் மொழிபெயர்ப்பினை அமைக்க முயல்கின்றார். 'தருவின் கிளை, இனிய உரொட்டித் துண்டு, கலச மது, மோட்ச கீத நூல், கான இசை, புகழ்ந்து பாட நீ, இந்த வனமன்றிப் பேசுஞ் சொர்க்கம் வேறுண்டோ?' என்பது அப்துல் காதரின் மொழிபெயர்ப்பு. 'என்னே- முன்னே – பொன்னே – பின்னே' என எதுகை நயம் களிநடம் புரியத் திகழ்கின்றது இம் மொழிபெயர்ப்பு.

பெரும்பாலும் பிட்ஜெரால்டைத் தழுவியே பேராசிரியர் அ.சீநிவாசராகவனும் தமிழாக்கம் செய்துள்ளார். 'பசிக்கோர் பிடிசோறும், கலத்தில் ஒளிர் மதுவும், சந்தக் கவிதை நூலொன்றும், கொம்பின் தண்நிழலும், எழிற்பாடல் இசைக்க நீயும் இசைந்து விடின், வெந்த பொட்டல் வெளியிதுவும் வியன்பொன்னுலகம் ஆகாதோ?' என்பது அ.சீ.ரா.வின் தமிழ் வடிவம்.

மராட்டியத் துறவி, பன்மொழி அறிஞர். உமர் கய்யாம் ஆய்வில் ஆழங்காற்பட்ட சுவாமி கோவிந்ததீர்த்தரின் ஆங்கில மொழிபெயர்ப்பினை அடியொற்றிப் புவியரசு தமிழில் தமது மொழிபெயர்ப்பினைச் செய்துள்ளார். "இந்தத் தமிழாக்கம் பிட்ஜரால்டின் ஆங்கில மொழிபெயர்ப்போடு முற்றிலும் தொடர்பற்றது. பிட்ஜரால்டின் மொழிபெயர்ப்பு... மேலை உலகிற்கேற்ற தழுகல். ஆனால் அழகான தழுவல். அதைப் பின்பற்றியே பல மொழிகளிலும் 'ருபாயத்' மொழிபெயர்க்கப் பட்டுள்ளது" (உமர் கய்யாமின் ருபாயத், ப.13) என அறுதியிட்டுக் கூறியுள்ளார் அவர். "மது ஒரு குப்பி, மாமிசத் துண்டு, கோதுமை ரொட்டி, அன்புத் துணை, பாழ்மனை ஆயினும் வாழ்மனை ஆகுமே, பரவசம் தருமே, மன்னரும் பெறுவரோ மகிழ்ச்சி இதை விட?" என்பது புவியரசுவின் தமிழாக்கம்.

நாகூர் ரூமி முதன்முதலாகப் புதுக்கவிதை வடிவில் உமர் கய்யாமின் ரூபாயத் பாடல்களைத் தமிழில் தந்துள்ளார். 'கிளையின் கீழ் ஒரு கவிதை நூல், ஒரு மதுப்புட்டி, ஒரு துண்டு ரொட்டி, அருகில் பாடிக்கொண்டு நீ, ஓ, பாலைவனம் சொர்க்கம் இப்போது!' என்பது ரூமியின் குறுகத் தறித்த தமிழாக்கம்.

'தமிழில் உமர் கய்யாம் மொழிபெயர்ப்புகள்' என்பது ஆழமாகவும் விரிவாகவும் செய்ய வேண்டிய – முனைவர் பட்டத்திற்கு மேற்கொள்ளத் தக்க – ஓர் ஆய்வுப் பொருள். அதற்கான முன்னோட்டமே இக் கட்டுரை.

பேராசிரியர் இரா.மோகனின் நூல்கள்

I. ஆராய்ச்சி

1. டாக்டர் மு.வ.வின் நாவல்கள்
2. அறிஞர் மு.வ.
3. சிறுகதைச் சிற்பி கு.ப.ரா.
4. ஆய்வியல் வழிகாட்டி (இணையாசிரியர்)
5. புனைகதைத் திறன்
6. பண்டிதமணியின் நடை நயம்
7. உரை மரபுகள் (இணையாசிரியர்)
8. திரு.வி.க. அல்லது வாழ்க்கை விளக்கம்
9. கு.ப.ராஜகோபாலன்
10. காந்தீயக் கவிஞருடன் ஒரு கை குலுக்கல்
11. வ.சுப.மாணிக்கம்
12. கலைஞர் தமிழ்
13. கல்கி
14. ஒப்பியல் சிந்தனைகள்
15. இலக்கியச் சால்பு
16. இலக்கியச் செவ்வி
17. இலக்கியச் செல்வம்
18. இலக்கிய வித்தகர்கள்
19. புதுக்கவிதைத் திறன்
20. பன்முகப் பார்வையில் பாரதி
21. கவிதைக் குயில்கள்
22. குமரகுருபரர்
23. முடியரசன்
24. கவிதை அலைவரிசை
25. இலக்கியப் பரல்கள்
26. இலக்கிய ஆளுமைகள்
27. நகைச்சுவை நாயகர்கள்
28. கணினி யுகத்திற்குக் கம்பர்
29. சங்க இலக்கியச் செவ்வி
30. வா.செ.கு. என்ற ஆளுமையாளர்

31 விருந்தும் மருந்தும்

32. செவ்வியல் இலக்கியச் செழுமை

II. பதிப்பு

33 டாக்டர் மு.வ. கலைக்களஞ்சியம்

34. டாக்டர் மு.வ.வின் கடிதங்கள் (இணைப்பதிப்பாசிரியர்)
35. பரல்கள்: தொகுதி 2 (இ.ப.)
36. பொதிகை: மலர் 1 (இ.ப.)
37. புகழ் பெற்ற சங்க இலக்கியப் பொன்மொழிகள் (இ.ப.)
38. பாரதி இயல் (இ.ப.)
39. புதுக்கவிதை அணிவகுப்பு
40. நாவல் வளர்ச்சி
41. தமிழியல்: தொகுதி 1 (இ.ப.)
42. அண்ணல் தமிழ் (இ.ப.)
43. தமிழ் உலா : 2 தொகுதிகள் (இ.ப.)
44. பெண்ணியம் (இ.ப.)
45. சிற்பியின் கட்டுரைகள்
46. கல்கி நூறு

47. கல்கி கதைகள் : 2 தொகுதிகள்
48. கல்கி கட்டுரைகள் : 3 தொகுதிகள்
49. செந்தமிழ்த் தேனீ சோமலெ
50. சிறுவர் இலக்கியம் (இ.ப.)
51. நாள் ஒரு சிந்தனை
52. புதுமைப்பித்தன் முத்திரைக் கதைகள்
53. கு.ப.ரா. முத்திரைக் கதைகள்
54. நகைச்சுவைக் களஞ்சியம்
55. பிற துறைத் தமிழ் ஆய்வு (இ.ப.)
56. திருக்குறள் ஆய்வுக் களஞ்சியம் (இ.ப.)
57. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2006)
58. சீக்கியமும் தமிழ்ப் பண்பாடும்
59. ஆய்வுக் கோவை: 5 தொகுதிகள் (2007)
60. கலைஞர் களஞ்சியம்
61. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2008)
62. ஐங்குறுநூறு ஆய்வுக் கோவை: 3 தொகுதிகள் (2009)
63. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2009)
64. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2010)
65. தமிழ்க் கட்டுரைக் களஞ்சியம்
66. ஆய்வுக் கோவை: தொகுதிகள் (2011)

III. தொகுப்பு

67. டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள்
68. ஜெயகாந்தன் சிந்தனைகள்
69. துணுக்கு இலக்கியம்
70. துணுக்குத் திரட்டு
71. சங்க இலக்கியத் தொகை
72. படித்ததும் பிடித்ததும்
73. மகிழ்ந்ததும் நெகிழ்ந்ததும்
74. சிரித்ததும் சிலிர்த்ததும்
75. பண்பார் பேராசிரியர் பரந்தாமனார்
76. இறையன்பு களஞ்சியம்

IV. புதுக்கவிதை

77. சின்னச் சின்ன இழை (இணையாசிரியர்)

V. தன்முன்னேற்றம்

78. இன்பமே எந்நாளும்
79. விரல்கள் பத்தும் மூலதனம்
80. விழிப்புணர்வுச் சிந்தனைகள்

VI. உரை

81. பத்துப்பாட்டு உரை (1-5)

VII. ஆளுமை வளர்ச்சி

82. கனவை நனவாக்கும் கலாம்

VIII. அணிந்துரைத் தொகுப்பு

83. இலக்கியக் கோலங்கள்
84. முன்னுரை நாற்பது

IX. கடித இலக்கியம்

85. அன்புள்ள நிலாவுக்கு... (பதிப்பாசிரியர்: முனைவர் நிர்மலா மோகன்)

X. அச்சில்

85. தமிழ் ஹைகூ ஆயிரம்
86. மாணிக்கவாசகர்



தகைசால் பேராசிரியர் **இரா.மோகன்**

'மு.வ.வின் செல்லப் பிள்ளை' எனத் தமிழ் கூறு நல்லுலகத்தில் அழைக்கப்பெறும் இரா.மோகன் 22.04.1950-இல் மதுரையில் பிறந்தார். பெற்றோர் இராமமூர்த்தி - இராசலெட்சுமி. பள்ளிக் கல்வியை காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரிக் கல்வியை மதுரை தியாகராசர் கல்லூரியிலும் பெற்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் 'கு.ப.ராஜகோபாலன் சிறுகதைகள்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் (1976) பெற்றார்.

01.11.1976-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் சேர்ந்த மோகன் விரிவுரையாளர், இணைப் பேராசிரியர், திட்ட ஒருங்கிணைப்பாளர், ஒப்பிலக்கியத் துறைத் தலைவர், புல ஒருங்கிணைப்பாளர், மூத்த பேராசிரியர், ஆட்சிக் குழு உறுப்பினர் எனப் பல்வேறு பொறுப்புகளில் 34 ஆண்டுக் காலம் பணியாற்றியுள்ளார். இவர்தம் நெறிகாட்டுதலில் 24 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

பேராசிரியர் மோகன் ஆய்வும், பதிப்பும், தொகுப்புமாக இதுவரை 82 நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது நூல்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும், தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பாட நூல்களாகப் பரிந்துரைக்கப் பெற்றுள்ளன.

'சிறந்த பட்டிமன்ற நடுவர் விருது', 'மூவேந்தர் இலக்கிய விருது', 'தமிழ்ப் பணிச் செம்மல் விருது', 'கிருபானந்த வாரியார் விருது', பாரத மாநில வங்கி, புதுச்சேரி கம்பன் கழகம் வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசு என்றாற் போல் தம் எழுத்து மற்றும் பேச்சுப் பணிகளுக்காகப் பற்பல பரிசுகளும், விருதுகளும் பெற்றுள்ளார். பல்வேறு வானொலி, தொலைக்காட்சிகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டிமன்ற நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

பேராசிரியர் மோகன், இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக ஐந்து முறை சிங்கப்பூர் சென்றுள்ளார். இரண்டு முறை மலேசியா சென்றுள்ளார். 2002-இல் இரண்டு மாதங்கள் அமெரிக்கா சென்றுள்ளார். அமெரிக்கத் தமிழ்ச் சங்க பேரவையும், தமிழ்நாடு அறக்கட்டளையும் இணைந்து இவருக்குத் 'தமிழ்ச் சுடர்' என்ற விருதினை வழங்கியுள்ளன.

பேராசிரியர் மோகன் அண்மையில், புதுதில்லி சாகித்திய அகாதெமியின் தமிழ்ப் பொதுக்குழு உறுப்பினராக ஐந்து ஆண்டுகளுக்கு நியமனம் செய்யப் பெற்றுள்ளார். இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவராக ஆறு ஆண்டுகளாக இருந்து வருகிறார். தற்போது மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில் தகைசால் பேராசிரியராகப் (**UGC - Emeritus Fellow**) பொறுப்பில் உள்ளார்.

வானதி பதிப்பகம்